திராவிடநாடு

வாழிய பொங்கல் நந்நாள்
வண்டமிழ் வையம் வாழி
வாழிய தமிழ், நற் செந்நெல்
மடுப்போலக் கறக்கும் மாடு

வாழிய ஆடல் பாடல்
மகிழ்ச்சியிற் குளிக்கும் மாதர்
வாழிய தமிழர் யாண்டும்
விடுதலை வாய்க்கப் பெற்றே.

—புரட்சிக்கவிஞர்.

எதிர்பாருங்கள் !

சி. என். ஏ.

தீட்டிய

கம்பரசம்

2-ம் பாகம்

விபரங்களுக்கு:—பரிமளம் பதிப்பகம், காஞ்சிபுரம்.

"சும்மா இருடா, போனவாரம் அதைவிட மோசமான சீட்டு................"

"அவனுடைய நிஜ சொரூபத்தைப் பார்க்க வேண்டுமானால்................!"

"நெற்றித் தழும்பு, அவளுடைய வெற்றியைக் காட்டும் அறிகுறியாக இருந்தது................"

"உனக்கு வேணும் அந்த நாடோடிப் பிழைப்பு நீ பட்டத்து ராஜா................!"

"இலட்சியவாதியாக இருக்க வேண்டுமானால், அந்தப் பணத்தை உபயோகிக்கக்கூடாது...."

இவையும், இவைபோன்ற இன்னும் பல சுவையும் கருத்துமுள்ள சம்பவங்கள் நிறைந்த

சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்"

டெம்மி அளவில் 56 பக்கங்கள் 0—12—0

பதின்மூன்றணா முன்பணம் அனுப்பினால் தபால் மூலம் அனுப்பப்படும். மொத்த விற்பனையாளர்கள் 25% கழிவு நீக்கி முன்பணமும் தபால் செலவும் அனுப்பினால் தேவையான காப்பிகள் அனுப்பப்படும். கிடைக்குமிடம்:—பரிமளம் பதிப்பகம், காஞ்சிபுரம்.

உதவி நிதி நாடகம்

மறைந்த பழைய கோட்டைப் பட்டக்காரர்
N. அர்ச்சுனன் உயர் நிலைப்பள்ளி, உணவு விடுதி ஆகியவை
அமைக்கும் உதவி நிதிக்காக
23-1-49-ம் தேதி ஞாயிறு
ஈரோடு ஸ்டார் டாக்கீஸில்

C. N. அண்ணாதுரை M. A.
எழுதி நடிக்கும்

"சந்திர மோகன்"

நாடகம் நடைபெறும்

நன்கொடை டிக்கட் விபரம்:—

ரூ. 100, 50, 25, 10, 5.

என். இ. பாலகுரு, கன்வீனர்.

நினைவுக் குழு உப கமிட்டி, பட்டக்காரர் பங்களா, ஈரோடு.

[காஞ்சி வெள்ளி] விலை ஆறணா 14—1—49

மலர் 7 திராவிடநாடு இதழ் 30

தமிழர் திருநாள்

பொங்கல், உழவர்விழா! தமிழர் திருநாள்! நடபொருளைப் புராணக் கருத்தினை நாட்டினர் மனதிலே மூட்டிடும், மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா. களத்திலே காணப்பட்ட பலன், வீட்டிலே, புதுப்பானையிலே, பொங்கிவழியும் நாள், பொங்கல் விழா, செந்நெலும் செங்கரும்பும் பச்சைக் காய்கறியும் பசும் பொன்னிறப் பண்டங்களும், வண்ணக் கோலமும், வாடாமலர்களும், மனைதோறும் குவிந்து; மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்னாள். மார்பிலே சந்தனம் மணக்கும் நன்னாள்! கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்! ஆடல் பாடல், கொட்டு முழக்கு, குதூகலம் கூத்தாடும் நாள், பொங்கல விழா. பாடுபட்ட உழவன் தன் வீட்டுப்பானையில், தான் உழைத்ததில் சிறிதளவு பலனாவது, சேர்வதைக் காணும் நாள்.

களத்திலே செந்நெல் குவியலைக் கண்டபொழுதும், அது புதிய கலத்திலே தீபாலமுதாக மாறுவதைக் காணும் பொழுதும், அவனுடைய உள்ளத்தில் உவகை பொங்குகிறது! அவன் பாடுபட்ட நாட்கள், திருந்தாத நிலத்தில் அவன் பட்டகஷ்டங்கள், வாய்க்காலுக்கு வரப்பெடுத்த காலம், வரப்பைச் சூழ்ந்த கள்ளி முள்ளியைக் கல்லி எடுத்துவிட்டு, பயன்தருமிடமாகச் செய்தகாலம், முதலில் ஏர்பூட்டியது, எருவூட்டியது, பரம்படித்தது, மடைதிறந்தது, விதைதூவியது, களையெடுத்தது, காற்றிலும் மழையிலும், கடும் வெயிலிலும், பயிரைப்பாதுகாத்தது, கதிர்சாய்ந்ததும், களத்திலே குவித்தது, இவை எல்லாம் அவன் நினைவிற்கு வருகின்றன. அவனுடன்கூடச் சேர்ந்து உழைத்த உற்றார், உறவினர், ஆருயிர்த் தோழர்களைப் பற்றிய நினைவும் வருகிறது.

இவ்வளவு நற்கருத்துக்களும், இவ்விழாவின் உட்பொருளாக அமைந்திருக்கிறது. அறுவடைதரும் ஆனந்தத்தை, பயன்பெறுபவர் கண்டு மகிழ்கின்றனர்—மகிழ்கையில், அவர்தம் மனதிலே எப்படிப்பட்ட பாடுபட்டபிறகு, இந்த அறுவடை சாத்தியமாயிற்று என்பதுபற்றிய எண்ணம், எழாமலிருக்க முடியுமா?

பொங்கற் புதுநாள், தமிழர் திருநாள், வாழ்வின் உட்பொருளை உணருவதற்கு உதவும் நாள்.

அதோ பாலிலே குழையும் சீரகச் சம்பாவைப் பெறுவதற்கு, பாட்டாளி சிந்தியது, வியர்வை! இரத்தமும் கூடத்தான்! பாற்பொங்கலாகும்போது, சுவையும் பயனும்! இச்சுவையும் பயனும் கிடைத்திட, பல பாடுபட்டான், பஞ்சையாகி நொந்தான், பகலெல்லாம் உழைத்துவிட்டு இரவிலே தூக்கம்பிடிக்காமல் புரண்டிருக்கிறான்! கோழியுடன் எழுந்திருந்து கோட்டான் கூவும்போது படுத்திருக்கிறான்! கார்கண்டு களிப்பான்! கடும்காற்று கண்டு கிலி கொண்டிருப்பான்! பூச்சிகண்டு பதைத்தான்! பூமிஉலரக்கண்டு பீதி கொண்டான்! முளைகண்டால் முகம் மலரும்! களைகண்டால், கரம் செல்லும் களைய! கதிர்கண்டு ஓர்களிப்பு! அதிலே மணிமுற்றுவதுகண்டு ஓர் பூரிப்பு! அறுவடையின்போது மகிழ்ச்சி! இவ்வளவுமான பிறகுதான், இன்பம் தரும் பொங்கற் புதுநாள் காணமுடிகிறது!

களிப்பூட்டும் விழா நாளன்று, இந்தக்கருத்து, மனைதோறும், உலவ வேண்டும்.

வாழ்க்கையிலே இன்பம் பெறுவதையே குறிக்கோளாக மக்கள் கொண்டுள்ளனர். இந்த இன்பத்தைப் பெறுவதற்காக, பாடுபட வேண்டும், முறையுடன், திறத்துடன்; களைக்காமல் சளைக்காமல் என்பதைப் பொங்கல்விழாதரும் பாடமாகக் கொள்வோம்.

முதலிலே, நஞ்சையும் புஞ்சையும், வரப்பு வாய்க்காலுடன், வேலி காவலுடன், வாவி அருவியுடன், இருந்ததோ! பெருவெளி—மணற்காடு—சதுப்பு நிலம்—சிறு காடு—இவைகளன்றோ, வயல்களாக மாற்றப்பட்டன — மந்திரக் கோல் கொண்டா?—அல்ல—இவ்வழி நடக்கும் மக்கள் பாடுபட்டதனால்.

எத்தனை இரவுகள் விழித்துக் கொண்டு எண்ணி எண்ணி ஏக்கமுற்று, பிறகு கண்டுபிடித்திருப்பான், உழவுமுறையை! பல தோல்விகளுக்குப் பிறகு, தயரத்தால் தாக்கப்பட்ட பிறகு, விடாமுயற்சியின் பலனாகக் கண்டறிந்தான், நிலத்

அறிவிப்பு

பொங்கல் விழாவிற்காக நமது அச்சகத்தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்கப்படுவதால், 16, 23-1-49-ல் வரவேண்டிய இதழ்கள் நிறுத்தப்பட்டு 30-1-49-ல் தான் வழக்கம்போல் வெளிவருமென்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்
"திராவிடநாடு"

தைத் திருத்தி நற்பயனைக் காணும் முறையினை. இன்று சாதாரணமானதாகக் காணப்படும், முறைகளைக் கண்டறிய, முன்னாளில், மக்கள், அரும்பாடுபடவேண்டியிருந்தது.

இன்பம் பெற, உளமுந்தாக வேண்டும், முறையும் திறனும் கொண்டு! இயற்கையை எழிலிடமாகவும், பயன்தருமிடமாகவும் ஆக்குவதற்குப் பாடுபட்டே, வெற்றி காணமுடிந்தது. இயற்கை, வளம் நிரம்பக்கொண்டது, வாழ்வளிக்கும் வல்லமை கொண்டது — ஆனால், இயற்கை, மனிதனின் மதியும் திறனும் கலந்த உழைப்பைப் பெற்றால் மட்டுமே, பரிசளிக்கும் பண்பு கொண்டது! மனிதனுக்குத் தெளிவு இல்லா நிலையிலே, இயற்கை அவனை மிரட்டும் – மிரட்டுகிறது – மிரட்டி இருக்கிறது பன்னெடுங்காலமாக! பெருவெள்ளமாக, கடுங்காற்றாக, நெருப்பாக, இயற்கை கோலம் காட்டி மிரட்டியிருக்கிறது. சிங்காரச் சிற்றருவியாகிச் சிந்துபாடி இருக்கிறது! சந்தனக் காட்டிலே உலவி நறுமணத்தைச் சேர்த்தெடுத்துக்கொண்டு வந்து சேர்க்கும் தென்றலாகி இன்பம் தந்திருக்கிறது! ஒளியும் நிலவுமாகி, திருவிளக்காகவும், தீங்குழலிசையாகவும் மக்களை மகிழ்வித்திருக்கிறது. இயற்கை ஓர் இன்பவல்லி — ஆனால் ஓர் ஜாலக்காரி! அவள் மிரட்டுவது கண்டு, அவளை அடியோடு வெறுத்து ஒதுக்கிவிட முடியாது—ஒதுக்கிடின் மக்களுக்கு வாழ்வில்லை—அவள் புன்னகை கண்டு பூரித்து, செயலற்று மிருந்துவிட முடியாது—வாழ்க்கை செம்மைப்படாது.

இயற்கை, மனித முயற்சியினாலும், மதியின் வளர்ச்சியினாலும், கட்டுப்படுத்தப்பட்டு, பயன்தரும் விதமாகப் பணியாற்றும் பாவையாக்கப்பட வேண்டும். நீரின்றி வாழ முடியாது, நீரிலேயே வாழவும் முடியாது! நெருப்பின்றி வாழ முடியாது, நெருப்பிலேயே வாழவோ, முடியாது! காற்றின்றி உயிர் இல்லை, காற்றிலேயே இருந்துகொண்டிருக்க முடியாது! இயற்கையின் சக்திகளின்றி வாழ முடியாது, ஆனால் இயற்கையுடன் மட்டுமே வாழவும் முடியாது! தானாக விளைவதைக் கண்டு, உண்டு, நீருள்ள இடத்திலே சென்று தண்ணீரை உண்டு, காற்றடித்தால் கஷ்டப்பட்டு, நெருப்புப் பரவினால் பயந்தோடி, வெள்ளம் கிளம்பினால் விரண்டோடி இயற்கையினாலே, ஆட்டிவைக்கப்படும், ஆதி மனித நிலையை விட்டு, மனிதன், மிகமிகக் கஷ்டப்பட்டு இன்று அடைந்துள்ள முன்னேற்றம், கொஞ்ச நஞ்சமல்ல—எண்ணிப் பார்த்தால் அவன் பெற்றுள்ள வெற்றிகள், சாமான்யமானவைகளல்ல என்பது தெரியும். ஆனால், அவன் பெறவேண்டிய வெற்றிகளோ, அநேகம் — வளர்ந்தபடி உள்ளன.

இன்புற்றிருக்கவே இயற்கையைத் தன்வழிக்குக் கொண்டுவர, மனிதன் பாடுபட்டிருக்கிறான். வளம் கிடைக்க, வாழ்வுக்கு வழிகிடைக்கப் பாடுபட்டு, முறைபல கண்டறிந்தான்—அவற்றிலே அற்புதமானது இந்த உழவு முறை. ஆனால் வளம் நிரம்பியதாய், வசதியதாய், உலகு ஆக்கப்பட்டு விட்டதால் மட்டுமே, இன்பம் கிடைத்துவிடுமா! இல்லை! உலகைப் பார்க்கிறோம்—கண்ணீர் நிற்கவில்லை! இரத்தம் சிந்தியபடியேதான் உள்ளனர்.

அதோ அழகுள்ள புள்ளிமான், அருவியோரத்தில், பசும்புல்லை மேய்ந்துகொண்டு இருக்கக்காண்கிறோம் — இன்புற்றிருக்கிறது—உண்மை—ஆனால், அதோ, சற்றுத் தொலைவிலே புதருக்குள்ளே ஓர் சலசலப்பு—இரு தீச்சுடர்கள் — ஒரு உறுமல்—பாய்ந்து வருகிறது சிறுத்தை! புள்ளிமானின், இரத்தம், சிறுத்தைக்கு இனியபானமாகிறது! பாய்ந்தோடித் தாக்கும் சிறுத்தை, பெற்ற இறைச்சியிலே, கீழே சிதறிய சிறுதுண்டுகளைக் கவ்விக்கொண்டோடும் சிறுநரி, இன்புறுகிறது, மற்றோர்புறம். மாடப்புறாவை, வல்லூறு தாக்குகிறது—அதை வீழ்த்த, வேடனின் கணை பறக்கிறது! ஆடும் மயிலைக் கண்டு மகிழ்கிறான் வேடன், அவன் காலைத் தீண்டிக் கொல்கிறது நாகம்! கீரி பாய்ந்து, நாகத்தைப் பிய்த்து எறிகிறது. இவ்விதம், காட்டுவாழ்வு, இருக்கிறது—இரை கிடைத்தால் இன்பம்—இரைதேடும் போதோ ஆபத்து—வாழ்வு—அழிவு—வாழ்வுக்கு முயற்சி, அழிவுக்கு வழி—என்றவண்ணம், ஓர் சஞ்சலச் சக்கரம் சதா சுழன்று கொண்டிருக்கக் காண்கிறோம்! இதற்கு இடையே, குயிலும் வானம்பாடியும் பாடிக்கொண்டுதான் உள்ளன—மயில் தோகையை விரித்து ஆடிக்கொண்டுதான் இருக்கிறது, மான் விழி மந்தியின் குளறும்மொழி, கிளியின் கொஞ்சுமொழி எனும் பலவும் உண்டு! வாழ்வு உண்டு—ஆனால் அதற்கோர், நிலை கிடையாது—ஒன்றையொன்று அழித்துக்கொண்டாக வேண்டும்—வாழ்வு ஒரு பெரும் போராட்டம்,—முறை, நீதி, நேர்மை, எனும் எந்தக் கட்டும் இல்லாத ஓர் பயங்கரப் போராட்டம். புள்ளிமான் செய்த குற்றமென்ன—புலியாரின் கோபம் கிளம்பிடக் காரணம் ஏதேனும் உண்டோ? இல்லை! எனினும் மான் பிழைக்கிறதே, புலியின் பார்வைபட்டால்? இல்லை! இது காட்டுமுறை—வாழ்வு ஓர் கொலைக்களமாக இருந்துவரும் இடம்.

இந்நிலையின்றி, வளம் நிரம்பியதாக மட்டுமல்லாமல், ஒருவரை ஒருவர் அழித்தால் மட்டுமே வாழ முடியும் என்ற கொடிய நிலைமாறி, எல்லோரும் இன்புற்று இருக்க முடியும் என்ற நம்பிக்கையுடன், அதற்கேற்ற நிலையை ஏற்படுத்துவதே, மதிபடைத்த மனிதன், கொள்ளும் குறிக்கோள்.

இன்பமே, வாழ்க்கையின் குறிக்கோள்—இதிலே காட்டுமுறை, இன்பம்பெற, பிறரை அழித்தாலும் சரி, வதைத்தாலும் சரி, என்று இருப்பது; கண்ணியமான முறை, இன்பம் பெறவேண்டும் இன்னொருவனுக்குத் துன்பம் வாராமலிருக்கவும் வேண்டும் — எல்லோருக்கும் வாழ உரிமை உண்டு, வழிவேண்டும்; ஒருவரை ஒருவர் சுரண்டியோ, ஏய்த்தோ பிழைப்பது வாழ்வல்ல—நீதியல்ல—என்ற எண்ணம் ஆட்சி புரியும் முறை. உலகப் பேரறிவாளர் யாவருமே, இந்த 'முறையை' நிலைநாட்டவே, பல்வேறு வழிகளிலே, பாடுபட்டு வருகின்றனர். சிறு சிறு வெற்றிகளும் பெற்று வருகின்றனர்.

இயற்கையை, அறிவுத்திறன் கொண்டு, அடக்கி பயன்தரச் செய்து, வாழ்வுக்குத் தேவையான வளம் கிடைத்திடச் செய்தது முதல் முயற்சி, ஆற்றலை அடிப்படையாகக் கொண்டது! பிறகோ, வளம், மட்டும் போதாது, வாழ்வு சிறக்க—முறைவேறு தேவை, என்ற எண்ணம் தோன்றுகிறது — அன்புநெறி பிறக்கிறது—நாம் மட்டும் வாழ்ந்தால் போதுமா, அதோ பலர் வதைகிறார்களே—நாம் வாழ்கிறோம், நமக்கு வாழ்வளித்த பலர் வதைகிறார்கள், நாம்வாழப், பலரை வதைத்தோம், என்ற உண்மை மனதிலேதாக்கத் தொடங்கும்போது, அன்புநெறி பிறக்கிறது—இரக்க உணர்ச்சி

பிறக்கிறது—ஏதோ ஒருவகையிலே, நம்மாலான அளவுக்கு, வாழ்விலே இன்பம் பெறாது, வதைக்கப்படும் மக்களுக்கு அன்பு காட்டுவதன் மூலம், உதவி தருவோம், என்று எண்ணுகிறார்கள். இந்த அன்புநெறி-நல்லுபதேசம், ஒழுக்க போதனை, ஓங்காரத்தின் துணைதேடுதல், சத்திரம் சாவடி கட்டுதல், எனும் பல முறைகளாகின்றன. ஆயினும் இந்த அன்புநெறி, தேடிய பலனைத் தரவில்லை—எல்லோரும் இன்புற்றிருக்க வழி ஏற்படவில்லை, என் செய்வது! ஆற்றல், வாழ்வழி செய்து தந்தது! ஆயினும், பலர் அழிவது தெரியக் கண்டு சிந்தைநொந்தது! அன்புநெறி பிறந்தது, எனினும் அதனாலும் இன்பம் அனைவருக்கும் கிடைக்கும் என்றமுறை நிலைக்கவில்லை. எனவே, ஏன்சிலர் வாழ்கிறார்கள், பலர் வதைகிறார்கள்—சிலருடைய வாழ்க்கைச் சுகத்துக்காகப் பலர் பதைபதைத்து வதைய வேண்டுமா?—சிலர் காட்டும் அன்பு, பலருடைய அல்லலை, அவதியை, எங்ஙனம் போக்கும்? பாலைவனத்திலே பன்னீரைத்தெளித்துப் பயன் என்ன?—என்றெல்லாம் எண்ணுகிறார்கள், எல்லோருமா?—இல்லை—எத்தர்கள் எண்ணிடார், ஏமானிகள் எண்ணிடத் திறமிலாதார்,—அறிஞர் பெருமக்கள் சிலர் எண்ணுகிறார்கள்—அந்த எண்ணத்திலே பூத்திடும் கருத்தே, அறநெறி! அறத்தால் வருவதே இன்பம், ஆற்றலால் மட்டுமல்ல—அன்பு தெளிப்பதால் அல்ல—அறத்தால் வருவது இன்பம் என்று கூறுகின்றனர். இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும் வணிகரின், பண்டமாற்று அல்ல அறம்—அந்த அறத்தை அல்ல, எல்லோரும் இன்புற்று இருக்க வழியாகக் கொள்ளவேண்டியது.

இயற்கையின் முழுவல்லமையைக் கண்டறிந்து—தெரிந்த அளவையும் திறம்படப் பயன்படுத்திப், பயன்கண்டதை, அவரவர் தத்தமது கடமையைச் சரிவரச் செய்து அறநெறியை மேற்கொள்ளின், உலகம் வாழ, ஒரு பகுதி வதைக்கப்பட்டும், இன்னோர் பகுதி இன்புற்றும் உள்ள இழிநிலையில் அல்ல, எல்லோரும் வாழும் நிலையில், உலகம் வாழ முடியும், என்று உறுதி பிறக்கிறது.

உழைப்பு முறை, உழைப்பின் பலனைக் கிடைக்கும் 'பயனைப் பகிர்ந்து கொள்ளும் முறை, எனும் இருதுறைகளில், முன்னதில் ஆற்றலும், பின்னதில், அறநெறியும், காட்டல் வேண்டும்!

அறநெறி என்று கூறப்படுவது, மந்திர உச்சாடனச் சொல் அல்ல; ஓமகுண்டத்தருகே உலவுவதல்ல! கள்ளமில்லா உள்ளத்திலே பூத்துக் காய்த்துப் பழுத்திடும், பயனும் சுவையும் உள்ள கனி. அது, வெறும், பொருள் பகிர்ந்துகொள்ளும் முறை மட்டுமல்ல—தொழில் அமைப்புத் திட்டம்மட்டுமல்ல—இவைகளுடன் கூட, மக்கள், எவ்வகையிலே இழிவாலும் கொடுமையாலும் தாக்கப்பட்டாலும், அவர்களை மீட்டிடவும், அத்தகைய தாக்குதல் மக்களுக்கு நேரிடாதபடி முறை வகுத்தலும், ஆகிய எல்லாம் சேர்ந்த, பொதுவான, பொறுப்பான, வாழ்க்கை அமைப்புத் திட்டம் அறநெறி! எனவேதான், மனிதகுலம், குரங்கு நிலையிலிருந்து, கோயில் கட்டிக் கும்பிடும் நிலை அளவுக்கு வளர்ந்தும், எந்த இன்பம், இன்னமும் கிடைக்கவில்லையோ, அந்த இன்பத்தைப் பெறுவதற்கு, வள்ளுவர் அறநெறியைக் காட்டியிருக்கிறார், அறுதியிட்டுக் கூறியிருக்கிறார், அறத்தால் வருவதே இன்பம்!

பாட்டாளியின் கூலியைக்குறைத்துச்சேர்த்த இலாபச் சொத்திலே, பழனியாண்டவருக்குப் பஞ்சாமிருத அபிஷேகம் செய்வதோ, பத்துப்பண்டாரங்களுக்குச் சோறிடுவதோ, அறமாமோ! ஆகாது! செல்வம் சேர்ந்தவிதமே, அறத்தை அழித்தமுறையல்! அவன் செய்வது, வேடபக்தி—விளம்பரதானம்—அறமல்ல!

வள்ளுவர் கூறிய அறம், ஆரிய முறைப்படி நம்மவருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தானதருமம் அல்ல—மக்களின் வாழ்விலே, உள்ள பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் ஏற்றபடி, வாழ்க்கைத்திட்டம் அமைய வேண்டும்—ஒருவர் வாழ்வை நித்தமற்றவர் நடத்தல் வேண்டும்—அவரவர்க்குள்ள கடமையினின்றும் வழுவாதிருக்க வேண்டும்—வாழ உரிமை கொண்டோரே மக்கள் அனைவரும் என்ற பொதுநீதியை அழிக்காதிருக்க வேண்டும். இது அறநெறி—இதனை அறிந்து நடந்தால்தான் இன்பம் வரும், என்று, கூறிய வள்ளுவர் வாக்கை, இன்பம் தரும் நாளாம் இப்பொங்கற் புதுநாளன்று மனதிற் கொண்டு, அந்த அறநெறி தழைத்திடும் அரும்பணியாற்ற உள்ள உரம் கொள்ளக் கோருகிறோம், வள்ளுவர் வாழ்ந்த தமிழக மக்களை. வாழ்க தமிழ்த் திருநாடு! வளர்க அறநெறி!!

திருக்குறள்—ஓர் திருப்பணி

வள்ளுவர் தந்த திருக்குறள், தமிழர்க்கு மட்டுமல்லாமல், பண்புடன் வாழவிரும்பும் அனைவருக்கும், ஓர் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

திருக்குறள், பூஜாமாடத்துக்கு மட்டும் தயாரிக்கப்பட்ட ஏடல்ல. புனைந்துரைகள் தெளியும் புராணமல்ல — வாழ்விலே, தூய்மையை, அவரவரும், தத்தமது திறனைச் சரியாகப் பயன்படுத்தி, மற்றவரின் வாழ்வின் மேம்பாட்டினையும் மதித்து ஒழுகுவதன் மூலம், பெறக்கூடியது, என்ற பெரு நெறியைக் காட்டும், நூலாகும்.

திருவிழாக்களையும் தீர்த்தமகிமைகளையும், திருப்பல்லாண்டுகளையும் திருவவதாரங்களையும், இவைகளின் பிறபதிப்புகளான, வெண்பொங்கல், இனிப்புச் சாதம் எனும் இன்ன பிறவற்றினையும், மக்களுக்கு வழங்கும், அழுக்குக் கருத்துரைகள் கொண்ட ஏடுகளையே, தமிழ்நாடு கொண்டாடி வருகிறது.

காரணம் பலப்பல. விளைவோ, வாழ்வில் வேதனை, சமூகத்தில் சச்சரவு, நாட்டிலே நலிவு.

நாம், இதுகாறும், அத்தகு ஏடுகளின் பிடியிலிருந்து நாடு விடுபட வேண்டுமென்பதற்கான பணிபுரிந்து வந்தோம்—அப்பணி தொடர்ந்தும் நடந்துவருகிறது.

அப்பணியுடனும் இதுபோது நாம் வள்ளுவர் தந்த திருக்குறளை ஒவ்வொரு இல்லத்திலும் குடியேறச் செய்தாக வேண்டும், ஒவ்வொருவர் மனதிலும், அவருடைய அறவுரைகள் பதியச் செய்யவேண்டும் என்ற சீரிய பணியினையும் மேற்கொண்டுள்ளோம்.

நாம், நாவலரும் பாவலரும்

கூடிடும் நல்மணிமாடத்திலே அல்ல, உலவுவது, உரையாடுவது. நாதனைக் கண்டோம், எம் நாவில் அவர் சூலம்பட இம்மெய்யறிவு கொண்டோம் என்று இயம்பிடும் அருள் விற்பனையாளர்களின் அணிமாடங்களை நாம் அணுகுவதில்லை.

மக்கள் மன்றத்திலே உலவுகிறோம், ஏரடிக்கும் எல்லனையும், காடு திருத்தும் கந்தனையும் காண்கிறோம். ஏழையின் கண்ணீரையும், எத்தனின் கபடத்தையும் காண்கிறோம். கட்டுக்கதைகளை நம்பிக் கருத்தைக் குழப்பிக் கொள்ளும், பாமரரிடம் சென்று பகுத்தறிவு பேசுகிறோம்.

இனி, இத்தகையவர்களிடம், நாம், மறைந்து கிடக்கும் இம் மாணிக்கத்தை—குறளைக் காட்டும் —மகத்தான பணியினை மேற்கொண்டுள்ளோம்.

நமது பணி வெற்றி பெற்றால் தான், மக்களின் உடைமையாகும், இந்தத் தமிழ் அறிவுக் களஞ்சியம்.

நமது பெரும்பணி மூலமே, மக்களுக்கு, வாழ்க்கையிலே கிளம்பும், எத்தகைய சிக்கலையும் சந்தேகத்தையும் நீக்கவும் போக்கவும், நேர்மையை நிலைநாட்டவும் உதவும் இப் பெரு நூலின் உண்மைப் பொருள், தெரிய முடியும்.

குறள் ஏந்திச் செல்வோம், நாடு நகரமெங்கும் — பட்டி தொட்டிகளிலெல்லாம்.

பண்பாடு—எது, என்பதை மக்கள் அறியச் செய்வோம்.

அறம், பொருள், இன்பம், எனும் அரிய முப்பொருளை மக்கள் உணர மட்டுமல்ல, நுகரவும், பணியாற்ற வேண்டும். புதிய பணி — ஆனால் நமது பழையபணியின், தொடர்ச்சி தான்—முற்றிலும் புதிதல்ல.

அப்பணிக்கு, நாம் நம்மைத் தயாரித்துக்கொள்வதற்கு, குறளின் அருமை பெருமை பற்றி அறிஞர் கூறியுள்ள கருத்துரைகளை எண்ணிப் பார்ப்பது, முக்கியமானமுதல் வேலையாகும்.

பேராசிரியர் சுந்தரனார், பெரும் புலவர்—அவர், வள்ளுவரின் திருக்குறளைப்பற்றிய அருமை பெருமையினை அறிவிக்கப் பல கூறவேண்டாம் — முக்கியமானதைச் சுட்டிக் காட்டினால் போதுமென்று எண்ணி,

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒரு குலத்துக் கொருநீதி"

என்று பாடியுள்ளார்.

இந்த "ஒருகுலத்துக் கொருநீதி" எனும் முறையினை காலம் கூடத் தகர்க்காதபடி, அவ்வப்போது உரம் ஊட்டி வருவனவே, புராண இதிகாசாதிகள். அவைகளை நம்பியதாலேயே நாடு நலிவுற்றது.

நாட்டின் நலிவு நீங்கி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக, வள்ளுவர் குறளை, மறுவற நன்கு உணர்ந்தோராதல் வேண்டும், மக்கள்.

வள்ளுவர், சகல பிரச்னைகளையும், ஆராய்ந்து, அரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். கடவுட் கொள்கை, நாடு, அரசு, இல்வாழ்க்கை, எனும் பல பகுதிகளாக உள்ள, குறளின், முழுநோக்கம், மக்கள் அறநெறியில் நிற்கவேண்டும் என்பதேயாகும்—ஏனெனில், அவர் கூறியபடி, அறத்தால் வருவதே இன்பம்—இந்த அறநெறியைப் பரப்பும் பணியினை மேற்கொள்ளும் நமக்கு உறுதுணையாக, அறிஞரின் கருத்துரைகள் உதவுகின்றன.

"வள்ளுவர் வரையறுத்துரைத்த கடவுள் நிலை, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் எனும்முதுமொழிக் கிணங்கியதாகும்.

அவர் பத்துக்குறட்பாக்களினும், ஆதிபகவன் — வாலறிவன் —மலர்மிசை ஏகினான்—வேண்டுதல் வேண்டாமையிலான்— இறைவன்-பொறிவாயில் ஐந்தவித்தான்-தனக்குவமையில்லாதான்—அறவாழி அந்தணன், எண்குணத்தான் — என முறையே அமைத்துள்ளார்" என்பதை எடுத்துக் காட்டியுள்ளார் புலவர் வரதராசனார்.

"திருக்குறள் என்னும் இவ்வரிய அறநூல் உலகியலுக்குரிய பெருநூலாகும். உலகியலில் கூறுதற்குரிய பெரிய பொருள்கள் பலவற்றினும், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினும் பெருமையுடைய பொருள் பிறிது கிடையாது. வீடுபேறும் இம்மூன்றன், ஏதுவாகப் பெறப்படுவதேயன்றி வேறன்மையின், அதனை யெய்துவிக்கும் பெருமையும் இம்மூன்றற்குமேயாகும். ஆகவே, எவ்வகையினும் பெருமையென்பது இம்மூன்றற்குமே உரியதாகலின், இம்மூன்றனையும் விளக்கும் நூற்பெருமைக்கு ஏனை எந்நூலும் இணையாகாமையின், இதுவே எல்லாப்பெருமைக்கும் உரித்தாய்ப் பெருநூல் எனப் படுவதாயிற்று."

என்று, அதன் அருமையினை அழகுற எடுத்துக்கூறியுள்ளார் ஔவை துரைசாமி எனும் அருந்தமிழ்ப் புலவர். இத்தகு பெருநூல் இயற்றுதற்கேற்ற, சூழ்நிலை, தமிழகத்தே இருந்தது எனும் சிறப்பினைமற்றோர் அறிஞர்,

"தமிழ் மக்கள் எண்ணிறந்த நூற்றாண்டுகளிற் பழகிய வாழ்க்கையின் பயனாக ஒப்புயர்வற்ற நாகரிகத்தைப் பெற்றனர். அதனால் அவர் தம்முள் பல பேரறிஞர் தோன்றி அருந்தமிழ் நூல்கள் இயற்றுவாராயினர். அவ்வறிஞருள் முதன்மையாக வைத்து எண்ணத்தகுந்த மேன்மையாளர் வள்ளுவர் என்பார். அவர் இயற்றியருளிய திருநூல் திருக்குறள்.

திருக்குறள் ஒழுக்கமுறை கூறும் நூல். அதிற் கூறப்பெறும் ஒழுக்கச் சட்டங்கள் தமிழ் நாட்டினர் பண்பட்ட ஒழுக்கச்சட்டங்களே; என்றாலும் அவை உலகத்தார் அனைவராலும் சாதி, சமய, நிறவேறுபாடுகள் ஒழித்துக் கைகொள்ளத்தக்காங்கு சீர்பெற அமைந்திருக்கின்றன. அதனால் திருக்குறளை உலகினர் அனைவரும் தம்தமக்கு ஏற்ற "பொதுமறை" எனத் தழுவிக் கொண்டு தம் தம் மொழிகளில் பெயர்த்தெழுதிப் போற்றுவான் தொடங்கினர். ஆங்கிலம், செர்மன் முதலிய எல்லா மொழிகளிலும் இன்று திருக்குறள் மொழி பெயர்க்கப்பெற்றுப் போற்றிப் படிக்கப் பெற்று வருகின்றது." என்று கூறிக் குறித்திடுகிறார்.

புலவர் ஏறு நமது திருவள்ளுவர் என்பது பொருந்தாப் புகழுரை அல்ல, பொருளுடைய உண்மை உரை, என்பதைப் பெரியசாமிப் புலவர், கூறுகிறார்.

"வள்ளுவர் இயற்றிய குறள் நூல் உலகிற் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பெற்று, ஆங்காங்கு வழங்கி வருதலை உணர்ந்த தமிழ் அன்பர்கள், வள்ளுவர்குறள் உலகப் பொதுநூல் எனவும், வள்ளுவர் உலகப் பொது அரசரெனவும் உளம் கொண்டு போற்றுகின்றனர். வள்ளுவர் குறளின் வாடை தமிழ் நூல்களிலெல்லாம் வீசுதலால் வள்ளுவரைத் தமிழ்ப் பன்னூற்கும் அரசரென யாம் போற்றுகின்றோம்."

நாட்டுப்பற்றுக்கு, நமது வள்ளுவர் எவ்வளவு அரும்பெரும் துணை

(33-ம்பக்கம் பார்க்க)

மூலகாரணம்

13-ம் பக்கத் தொடர்ச்சி

திடம் கூறவில்லை, கமலமும் கனகத்தின் வாய்த் துடுக்கைப்பற்றிக் கணவனிடம் கூறவில்லை. கணபதி ஆபீசிலிருந்து வந்ததும், கோபம் தாங்காதவராய், கட்டிலின் மீது படுத்து, கண்களை மூடிக்கொண்டிருந்தார். அப்போது, மானேஜர் மகாலிங்கம், அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருக்கிறார், கணபதியின் எதிரில் மனக்கண்ணில் தெரியும் காட்சி. கணபதி ஜெனரல் டைரக்டர் ஆசனத்தில் அமர்ந்தபடி, கனைக்கிறார்—'மகாலிங்கம் சார்! பேசாமல் வேலையைவிட்டுவிலகிவிடுமய்யா—வரவர உமது மூளையே வேலை செய்வதில்லை—ஏன் இப்படி, சகல காரியத்தையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்குகிறீர். வயசானவராயிற்றே கொஞ்சம் மரியாதை காட்டவேணுமே என்று பார்க்கிறேன்—முடியவில்லை—நிச்சயமாகச் சொல்கிறேன் இப்படி முட்டாள்தனமாக ஒரு மானேஜர் இருந்தால், கம்பெனி 'திவால்' ஆகவேண்டியதுதான்" என்று கணபதிசுப்பிரமணியம், மளமளவெனக் கண்டிக்கிறார்-அந்தச் சமயம் வந்து கமலா கேட்கலாமா, "காப்பியா—டீயா—எதுதேவை?" என்று—எப்படிப்பட்ட காட்சியைக் கலைத்துவிட்டாள் என்று, கோபம் பிறந்தது அவருக்கு.

* * *

சற்று முன்புதான், சாரதா வந்திருந்தாள். அவளிடம், கனகாவின் துடுக்குத்தனத்தைக் கமலம் விளக்கி விளக்கிச் சொன்னாள — அந்தச் சாரதா, எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, கடைசியில், கனகாமீது தவறு இல்லை என்று தீர்ப்பளித்தாள் —அந்தக் கோபம் கமலாவுக்கு—கணவனை வந்து எழுப்பினாள்—காப்பி தரவேண்டும்—பிறகு வழக்கையும் கூறவேண்டும் என்று எண்ணிக்கொண்டு — அது சச்சரவில் போய்முடிகிறது. கணபதி, மானேஜரின் கண்டனச் சொற்களைக்கூட மறக்கிறார் — கமலாவுக்கும் கனகத்தின் துடுக்குத்தனம், சாதாரணமாகத் தெரிகிறது — இருவரும், குடும்ப வாழ்க்கையிலுள்ள தொல்லைகளைப் பற்றியே அதிகமாக எண்ணிக்கொண்டு, கவலைபடுகிறார்கள்,

என் கர்மம்—என் விதி—என்று கூடத்திலே அவரும், சமயலறையிலே கமலமும் முணுமுணுக்கிறார்கள்.

மறுநாள் காலை, மானேஜர் ஆறுதல் கூறுகிறார் கணபதிக்கு, "குடும்பமென்றால் இப்படித்தானய்யா இருக்கும் — பைத்யக்காரராக இருக்கிறீரே" என்று — குளத்தங்கரையில் கனகாதான் கமலத்தின் கவலையைப் போக்குகிறாள், தன் கையில் உள்ள தழும்பைக் காட்டி, "எங்க ஆத்துக்காரர், குதிரைச் சவுக்காலே தந்த அடி இது" என்று கூறி.

* * *

குடும்பத்திலே, ஏற்படும் கொந்தளிப்பும் கோபமுமாகட்டும், சமூகத்திலேயும், நாடுகளுக்குள்ளாகவும் கிளம்பும் கோபம் கொதிப்புங்கூட, வெடித்துக்கொண்டு வெளிவரும்போது, தெரியும்காரணத்திலேயே மூண்டதாக இராது; ஆராய்ந்து பார்த்தால, உள்ளத்திலே, வேறு பல சமயங்களிலே, வேறு பல சம்பவங்களின்போது, வேறு யாராரிடமோ, வேறு என்னென்ன காரணங்களினாலோ ஏற்பட்ட, கோபங்கள் ஒன்று சேர்ந்து, வெடிக்கும் பக்குவம் பெற்றிருந்திருக்கிறது என்பது தெரியும். வெடி மருந்துக் குழாயிலே, ஏற்கனவே வெடி மருந்தைப் போட்டுக் கெட்டித்து வைத்திருந்ததால்தான், தீப்பொறி பட்டதும், காது செவிடுபடும்படியான வெடி கிளம்ப முடிகிறது; வெறும் தீப்பொறியினால் ஏற்பட்டதல்ல அந்த நிகழ்ச்சி!

மக்கள் ஒருவரோடொருவர் தொடர்புகொண்டே வாழ்கின்றனர்—பல்வேறு வழிகளிலே; நாடுகளும் அதுபோன்றே. அந்தத் தொடர்புகளின்போது, பல சமயங்களிலே ஏற்படும், கோபம், குழாயிலே போடப்படும் வெடிமருந்துபோல, குவிந்தபடி இருக்கிறது — பிறகோர் சமயம், தீப்பொறி போன்ற ஓர் காரணம் கிடைக்கிறது-கெட்டிக்கப்பட்டுள்ள மருந்து வெடிப்பதுபோல, மூண்டு கிடக்கும் கோபம் வெடிக்கிறது. எங்ஙனம், வெடிமருந்தைப் போட்டுக் குழாயில் கெட்டித்து வைக்காமலிருந்தால். தீப்பொறி பட்டாலும், வெடி கிளம்பாதோ, அதுபோலவேதான், உள்ளத்திலே, கோபம், மெள்ள மெள்ளவும், பல்வேறு காரணங்களாலும், சேர்ந்திரா விட்டால், தீப்பொறி போன்ற சிறு சம்பவம், குடும்பத்தில், கொந்தளிப்பை உண்டாக்காது.

* * *

வேலை செய்யுமிடத்திலே, கணபதி சுப்ரமணியத்துக்கு அவ்வப்போது ஏற்பட்டுவந்த வேதனைகள், அவருக்கு ஏற்பட்டுவந்த மனக்குறைகள் யாவும் குழாயில் போட்டு அடைக்கப்பட்ட வெடிமருந்து! கமலா, காப்பி சாப்பிட அழைத்தது, தீப்பொறியாக அமைந்துவிட்டது!! கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலே ஏற்படும் சச்சரவு மட்டுமல்ல—சமூகங்களுக்குள்ளும், நாட்டுக்கு நாடும் கிளம்பும் மாச்சரியங்களும் சச்சரவுகளுங்கூட, இதேவிதமாக அமைவதுதான்!!

தீப்பொறியும் படாமுன்பே, வெடி கிளம்பி. விபத்து நேரிடுவதுமுண்டு, சில சமயங்களிலே! குழாயிலே, அளவுக்கு மேல் வெடிமருந்தைக் கெட்டித்துவிட்டால் தீபபொறி காட்டா முன்பேகூட, மோதுதலால், ஏதேனும் கடினமான பொருளின்மீது உராய்வதால்கூட, வெடிவிபத்து நேரிட்டு விடுகிறது. அதுபோலவேதான், உள்ளத்தின் தன்மையும்! காப்பி சாப்பிட அழைத்த கமலாவை அதே காரணத்துக்காகக் கோபித்துக்கொண்ட கணவன், அந்தக் காரணம்கூட இல்லாமலே கூடக் கோபித்துக் கொண்டிருந்திருப்பார், உள்ளத்தில், மூண்ட கோபத்தின் தன்மையும் அளவும் அதிகமானால்.

* * *

அலுப்போ, சலிப்போ, அவருக்கு — அலுவலக சம்பந்தமாக ஏதேனும் யோசனையோ, என்ன காரணமோ தெரியவில்லை, அவர், பேசாமல் சொல்லாமல் இருக்கிறார், இந்தச் சமயத்திலே, நாம் அவரைத் தொல்லைப்படுத்தக்கூடாது,—என்று எண்ணிக்கொண்டு, சாய்வு நாற்காலியிலே படுத்திருக்கும் கணவனை எழுப்பாமலே, கமலா, இருந்துவிடுகிறாள், என்று வைத்துக் கொள்ளுங்கள்; கணவன், அவளுடைய புத்திக்காக மெச்சுவான், என்று எண்ணுகிறீர்கள்! அப்படியும் சொல்லிவிட முடியாது! அதையே, வியாஜ்யமாகக் கொண்டு கூடச் சண்டையிடக் கூடும்.

* * *

"ஏண்டிம்மா, கமலாம்பிகா!" என்று கடுகடுப்பாகக் கூப்பிடுகிறார் கணவன்.

காரணமின்றிக் கடுகடுப்பு, அநாவசியமாகக் கோபம், இப்படிப்பட்ட சுபாவக்காரராக இருக்கிறாரே கணவர், என்ற கவலையும் கோபமும் கமலாவுக்கு; அதேபோது, அடுப்பும் வேடிக்கை காட்டுகிறது, புகையைக் கிளப்பிக் கிளப்பி! எரிச்சலுடன், கமலா, ஒரு 'ஏன்' வீசிவிட்டு, அத்துடன் சேர்த்து, இருக்கிறேன்—சாகவில்லை—என்ற சொற்களையும் சேர்த்து அனுப்புகிறாள்! கணவனின் கோபம் கொழுந்துவிட்டெரிகிறது; கமலா, எதிரே வந்து நிற்கிறாள்—

"கமலா! உனக்கு ஏண்டி இவ்வளவு மண்டைக் கர்வம்! மனுஷன் நாயபோல அலுத்து வீடு வந்திருக்கிறானே, வந்தவனுக்கு ஒரு முழுங்கு காப்பி தருவோம், என்று உன் மனசிலே ஒரு துளி அன்பு இருக்கிறதா! வந்தா வரட்டும்—நெஞ்சுலர்ந்து செத்தால் சாகட்டும், என்று, எண்ணிக்கொண்டு இருக்கிறடி நீ!" என்று வெடிகுண்டுகளை வீசுகிறார். எதிர்பாராத விபத்துக்கு ஆளான அந்த ஏந்திழை, கேட்கச் சகிக்காத வார்த்தைகளை வீசியது கண்டு, காதுகளைப்பொத்திக்கொண்டு கண் கலங்கியபடி, ராம, ராமா—என்றோ—சிவ சிவா என்றோ முணுமுணுக்கிறாள—'ராமனைக் கூப்பிடுகிறாயா, ராமனை!'—என்று ஒரு கூச்சலிட்டுக் கொண்டே, கமலாவின் கன்னத்தைப் பதம் பார்க்கிறார்—கணபதி சுப்ரமணியம்.

* * *

இவ்விதமும் நடைபெறுவதுண்டு! காப்பி சாப்பிட வாருங்கள் என்று அழைத்தாலும், கோபம் — காப்பி சாப்பிடக் கூப்பிடாமலிருந்தாலும், கோபம்! இது என்ன விசித்திரமான மனிதரய்யா இந்தக்கணபதி, என்று, சம்பவத்தை மட்டும் கூறக் கேட்பவர், சொல்வர்! ஆனால், இந்தப் போக்கு, கற்பனை உருவான கணபதிக்கு மட்டுமா—நீங்களும் நானும், எவ்வளவோ தடவை, கணபதிகளாகி இருக்கிறோம், நமது குடும்பங்களிடம்!



14—1—49

உலகம் இன்று!

சரிந்த சாம்ராஜ்யம்

சிறியதீவு. ஆனால், அதன் ஆதிக்கம் உலகின் எந்தப் பகுதியிலும் வியாபித்து இருந்தது. உலகம் பூராவிலும், அதற்கு வேட்டை நிலம் ஏராளமாக இருந்தது. எனவே அதற்கான இராணுவ பலமும், கடற்படை அமைப்பும், விமானவளமும், போதுமான அளவு உடையதாக இருந்தது. வெறும் போலி மதிப்புக்காக உலகைக் கட்டியாளவில்லை. பொருளாதாரச் சுரண்டலே, அதன் ஆதிக்கத்தின் அடிப்படை. அடிமைப்பட்டுக்கிடக்கும் நாடுகளின் தேவைகளைத் தெரிந்து, அந்தந்த நாடுகளில் கிடைக்கும் மூலப்பொருட்களை மலிவாகப் பெற்று, அதனை முடிந்த பொருள்களாக மாற்றி, திரும்பவும் அந்தந்த நாடுகளுக்கே அனுப்பி, தன்னாட்டின் செல்வர்களுக்கு நிறைந்த செல்வமும் — தொழிலாளர்களுக்கு முதல்தர வாழ்வும் தருவதுதான், அதன் ஆதிக்கத்தில் மறைந்துகிடக்கும் உண்மை.

இந்த முறையில் ஒரு நூற்றாண்டு, இதுவரை வரலாறு கண்ட எந்த சாம்ராஜ்யமும் சாதிக்க முடியாததை, சுரண்டல் பணியை, வெகு வெற்றிகரமாகச் செய்து வந்திருக்கிறது அந்தச் சிறியதீவு. இந்தச் சுரண்டலின் பலனாக, தன்னைப்போன்ற வாழ்க்கை முறையைக்கொண்ட நாடுகளில், பொருளாதாரக் குழப்பத்தின் காரணமாக உண்டான உள்நாட்டு வேதனையும் வெறியும், இதன்விளைவாக மக்கள்பெற்ற பயங்கர அனுபவங்களும் தனதுநாட்டில் தலைகாட்டமுடியாமல் போய் விட்டது. எல்லாத் துறைகளிலும், குறிப்பிடத்தகுந்த அளவில், முன்னேற்றம் ஏற்பட வசதியாக இருந்தது. மக்களாட்சிக்கோட்பாடும், அதனோடு தொடர்புடைய ஆட்சி முறையும் என்றென்றும் பிரிக்கமுடியாத தன்மையில் அங்கு மக்கள் இரத்தத்தில் கலந்துபோய் இருக்கிறது. முடிதரித்த மன்னன் அங்கு வெறும் அதிகாரமில்லாத அலங்கார பொம்மை! இருந்தாலும், மன்னனிடத்தில் மக்கள் கொண்டுள்ள பற்றுதலும், வைத்துள்ள மதிப்பும், காட்டும் மரியாதையும், மக்களாட்சி முறைக்கு முரண்பட்டதாக இருக்கவில்லை. பல நாள் பழக்கம், அங்கு மக்களின் மனவளத்திலே, முடி சுமக்கும் ஒருவர்— ஆனால் ஆற்றல் அற்ற — பெயரளவிற்காவது அரசின் தலைவராக இருந்தாகவேண்டும் என்ற அசைக்கமுடியாத ஓர் நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. கொடுங்கோலனோ, முடிபுனையாத மூர்க்கனோ, ஆட்சிப்பீடத்தைக்கைப்பற்ற, அந்த நாட்டில் எண்ணவும் முடியாது; மக்கள் கொண்டுள்ள உரிமை உணர்வு அதற்கு இடமும் தராது. அந்த அளவிற்கு மக்களாட்சி முறை, ஓர் தனிப்பெருமையைப்பெற்றுவிளங்குகிறது.

போரின் விளைவாக, வெற்றிகண்டபோதிலும், பொருளாதாரத்துறையில், நலிவு ஏற்பட்டு விட்டது. வெளிநாடுகளில் இருந்துவந்த தனது மூல தனம் சிறுகச் சிறுகக் கரைய ஆரம்பித்துவிட்டது. மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டிய நிலைபிறந்தது. ஏகாதிபத்தியத்தின் பிடியும் குலைந்துவிட்டது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பழைய போக்கைப்பிரிட்டனால்மேற்கொள்ள முடியவில்லை. எனவே புதிய போக்கை, நிலைமைக்கேற்ற நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியதாயிற்று. கொஞ்சமும் தயக்கம் காட்டாமல், பழையமுறையால் பலன் இனிக் கிடைக்காது என்றுஉணர்ந்ததும், புதுமுறையைக் கைக்கொள்ள ஆரம்பித்தது.

தனது பிடியில் சிக்கிக்கிடந்தநாடுகளுக்கெல்லாம், விடுதலைக் கிளர்ச்சி வேண்டிய அளவு உருவாகாமல் இருந்த நாடுகளுக்கும்கூட, தானாக வலியவந்து அரசியல் விடுதலையை அளித்து, இருந்துவந்த உறவில் புதிய நிலையை உண்டாக்கி, தனது நலிந்த பொருளாதாரத்தைச் சீர் செய்துகொள்ளும் நற்பணியில் இன்று இங்கிலாந்து மூழ்ந்து இருக்கிறது. முதலாளித்துவ முறையால் இனி எதிர்காலத்தைஆக்கமுடியாது என்ற பேர் உண்மையை, நன்கு தெரிந்துகொண்டதும், சமதர்மப் பாதையில், அதனை அடைவதற்கு இடைஞ்சலாக உள்ள தடுப்புகளை ஒன்றின்பின் ஒன்றாக விலக்கி, மக்களின் மனவளத்திற்கு முரண்பாடு ஏற்படாதமுறையில், குறிப்பிட்ட இலட்சியபூமியை நாடிச் சென்று கொண்டிருக்கிறது இங்கிலாந்து. இதில் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

போரின் பின்னர், இங்கிலாந்து இனி என்றும் தலை தூக்கமுடியாது என்று, ஆரூடம் கூறினோர் அநேகர். அவ்வளவும் பொய்யாகிவிட்டது. எல்லாவகைகளிலும் உற்பத்தி பெருக்கிக்கொண்டே வருகிறது. டாலர் நாட்டிலும், இங்கிலாந்தின் மோட்டார்களை விரும்பி வாங்குகின்ற அளவிற்கு, அதன் தோற்றத்திலும் அமைப்பிலும் புதுமை இருக்கிறது. தொழில் வளர்ச்சிஏற்படுத்துவதற்கான இயந்திரங்கள் அனைத்தும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கான நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறது இங்கிலாந்து. 'ஏற்றுமதி' என்னும் சொல்லே, அங்கு வாழ்வளிக்கும் சொல்லாக இருந்துவருகிறது. தனது மக்களின் தேவைக்குமட்டுமல்லாமல், அதனால் செய்யப்படும் பல பொருட்களையும் வெளிநாட்டிற்கு விற்பனை செய்யவும், தகுந்த அளவில் மணிலாக்கொட்டை ஆப்பிரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகிறது. போர்க்காலத்தில் செய்த தியாகங்களைக் காட்டிலும், தனது பொருளாதாரத்தைச்செப்பனிட்டுக் கொள்வதில் இங்கிலாந்துமக்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். கள்ளமார்க்கட் குறைவாக இருந்த இடம் இங்கிலாந்துஒன்றுதான். இது, மக்களின் பொறுப்புணர்ச்சிக்குத் தகுந்ததோர் எடுத்துக்காட்டு. உரிமை கடமை இரண்டும்தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். மக்களை இட்டுச் செல்லும் தலைவர்களும், அங்கு காலத்துக்கொவ்வாத பழ

பெருமை பேசுவதோடு திருப்திப்பட்டு விடுகிறவர்களாக இல்லை. எதிர்காலத்தை, மாறிவரும் உலக நிலைக்கேற்ப உருவாக்கும், தெளிந்த அறிவும், மக்களை மதித்து நடக்கும் மனிதப் பண்பு உடையவர்களாகவும், தலைவர்கள் காட்சி அளிக்கிறார்கள். வெறும் வார்த்தைகளில் படாடோப பயங்கரத்தைக் கலந்து பேசும் வீரர்கள் அங்கு இருக்கவில்லை. இந்த வகையில் வீழ்ச்சி கண்ட இங்கிலாந்து, உலக விவகாரத்தில் என்றும் தனக்கென்று தேடிக்கொண்டிருந்த உன்னதமான இடத்தை விட்டு விடாமலே, வெற்றியை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கிறது. நீண்ட நாள் விரோதம் நிமிஷத்தில் மறைவதும், பகைமை மறைந்து பற்றுதலும் பாசமும் பெருகுவதும், நிந்தித்தவர்களின்வாய் தினம் தினம்தோத்திரப் பண்பாடுவதும் போன்றஆச்சரியத்தைத்தரும் அற்புதத்தைத் நாம் காணும்பொழுது, இந்தச் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்ட, அந்த நாட்டுத்தலைவர்களின் ஆற்றலை நாம் மட்டுமல்ல, மற்றவர்களுந்தான் எவ்வாறு கருதிப்பார்க்காமல் இருக்கமுடியும்?

வெளி நாட்டுக் கொள்கையில், காரணம் எதுவாக இருந்தாலும், பழமை நீங்கிய வேறுபோக்கு இருப்பதாகச் சொல்வதிற்கில்லை. குழப்பிக் குழப்பிக்கொடிவழி அமைப்பது என்னும் பெயர்பெற்ற பிரிட்டிஷ் முறையில் இன்றும் மாற்றம் ஏற்படவில்லை. அமெரிக்காவின் தொடர்பு, சோவியத் நாட்டின் அவநம்பிக்கை, இத்துறையில், இங்கிலாந்து வேறு முறையை கடைப்பிடிப்பதற்கான வாய்ப்பினை மறுப்பதாக இருக்கலாம். அல்லது தங்களின் சுயநன்மை, புதிய போக்கினை மேற்கொள்வதிலிருந்து இங்கிலாந்தைக் கட்டுப்படுத்துவதாக இருக்கலாம். எது காரணமாக இருந்தாலும் வெளி நாட்டு மந்திரி தோழர் பீவினுக்கும், போர்க்காலப் பிரதமர் சர்ச்சிலுக்கும் இந்த வகையில் ஒருதுளியும் வேற்றுமை இருப்பதாகத்தெரியவில்லை. இரண்டு முரண்பட்ட கோட்பாடுகளின் தலைவர்களும், வெளிநாட்டு விவகாரத்தில் மட்டும், ஒன்றுபட்டு இருப்பதும் பேசுவதும் பிறர்புரிந்துகொள்ள முடியாத புதிர்தான். காலந்தான் இதற்கு மாற்றுரைக்க வேண்டும்.

இருந்தாலும் இங்கிலாந்து விஷயத்தில் மேதைகளின் மொழி பொய்த்து விட்டதைக்காண்கிறோம். இங்கிலாந்து அழிந்துவிடவில்லை; என்றும் போல் விளங்குகிறது. ஏகாதிபத்திய வாடை கொஞ்சம் நெடியில் குறைந்திருக்கிறது. முழு மாற்றம் ஏற்பட இன்னும் சில ஆண்டு சென்றாகவேண்டும். இன்று உலக நிலையில், புதுவாழ்வு பெறுவதற்கு எந்த நாட்டிற்கும் உள்ள ஒரே மார்க்கம், சோஷலிசந்தான். சரிந்த சாம்ராஜ்யம் சமதர்ம புரியாவதில்தான் மக்களின் எதிர்காலம் பின்னிக்கொண்டு இருக்கிறது.

டாலர் ஏகாதிபத்யம்

படையை அனுப்பி அல்ல— அரசியலைக்கைப் பற்றி அல்ல — கொடியைபறக்கவிட்டு அல்ல— டாலர்ஏகாதிபத்தியம்,பிறநாடுகளைத் தம்பிடியில் சிக்கவைப்பது. பாழான நிலையில் பசித்துக் கிடக்கும் மக்களிடம் கல்லும் கரையும் கனிவான மொழிபேசி, நாட்டுத் தலைவர்களுக்கு நல்லுபசாரம் செய்து, சுயநன்மையிலே நாட்டமில்லை என்று சொகுசாக மொழிந்து, சொந்த நாட்டைப்போல் பிறர் நாட்டையும் வளமாக்க விழைவதாக விளம்பரஞ்செய்து, பணம் கொடுத்து, பதிலுக்கு நாடுகளின் சுதந்திரத்தைச் சீர்குலைப்பது, அமெரிக்காவின் அருமையான திட்டமாகும். சீனமக்களின் சீரழிவுக்கு சியாங் தம்பதிகளின் செருக்கே அடிப்படைக் காரணமாக இருந்த போதிலும், சியாங் தம்பதிகளுக்குச் செல்வாக்கைத் தேடித் தந்ததும், சியாங் தம்பதிகளைசிம்மாசனத்தில்இருக்கவைத்துப் பாதுகாத்துவந்ததும் வருவதும் அமெரிக்க டாலர்தான் என்பதை எவரும் மறந்துவிடமுடியாது. ஆசிய நாடுகளுக்குத் தொழில் வளத்திற்கான சாதனங்கள் பலவும் அளிப்பதாகவும், அதற்கான வகையில் ஒவ்வொரு நாட்டின் தொழில் திட்டமும் தெள்ளத்தெளியத் தேவை என்றும் பேசி, திட்டங்கள் தீட்டியானதும், உதவி செய்யமுடியாது என்று ஒரே வார்த்தையில், மூன்று ஆண்டு முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, 'ஜப்பானோடு வியாபாரம் செய்யுங்கள்;வளம்பெறுங்கள்' என்று உபதேசம் செய்யும் நிலைக்கு அமெரிக்கா வந்திருக்கிறது. சீனாவின் வீழ்ச்சியால் அமெரிக்கா பெற்ற படிப்பினை இது. ஜப்பான், அந்த நாட்டு முதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் இல்லையாயினும், ஆளும் அரசியல் முறையில் புதிய மாற்றம் ஏற்படுத்தி இருந்தபோதிலும், அதனை வரையும் ஆட்டிப்படைப்பது அமெரிக்கா டாலர்தான் என்பதை அனைவரும் அறிவர். ஜப்பானோடு வியாபாரம் செய்வதென்பது, அமெரிக்கா நேரடியாக வியாபாரம் செய்து அதனால் தனக்கு வரும் லாபத்தைக் காட்டிலும், ஜப்பான் மூலம் செய்யும் வாததகத்தால் தனக்கு அதிக லாபம் கிடைக்குமென்பதை அமெரிக்கா அறிந்திருக்கிறது. ஜப்பானிலே உற்பத்திச் செலவு குறைய வழி உண்டு. அதாவது அமெரிக்காவை விட வாழ்க்கைத்தரம் அவ்வளவு மட்டம் ஜப்பானில். தோல்வியால் வேதனை அடைந்திருக்கும் ஜப்பானியர்களிடை, வேலையற்ற நிலை பிறக்குமானால், வேதனை எரிச்சலாக மாறி, வாழ்வளிக்கும் வேறு முறையைத் தேடும் நிலையையன்றோ உண்டாக்கும். பொதுவுடைமைஎந்தவிதத் தடுப்பு முறைகளையும் தரைமட்டமாக்கிவிட்டு, தாணியாளும் வாய்ப்பினை அன்றோபெற்றுவிடும்! பொதுவுடைமைக்குச் சமாதிகட்டி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என்ற முடிந்த முடிவோடு இருந்துவரும் அமெரிக்காவால், சீனாவும் பொதுவுடைமையாகி, அதனை அடுத்துள்ள ஜப்பானும் சிகப்பாவதை எவ்வாறு சகித்துக்கொள்ள முடியும்? எனவே ஜப்பானை, தொழில் வளம் மிக்க நாடாக ஆக்கவும், ஜப்பான் மக்களின் அன்பினைப் பெறவும், வேண்டிய அவசியம் அமெரிக்காவிற்கு இருக்கிறது. சோவியத் நாட்டை எதிர்க்க, ஜப்பான் ஓர்முதல்தரஇராணுவ அமைப்புள்ள நாடாகஇருந்து தீரவேண்டும். தொழில்வளமில்லையேல் இது சாத்தியமன்று. எனவே, ஜப்பான் வளர்ச்சியில் அமெரிக்கா, அக்கரை காட்டி அதனுடன் வர்த்தகத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் என்றுஉபதேசம் செய்கிறது. பல நாள் பசித்தவனுக்கு,நஞ்சுண்ட நல்ல முதானாலும், அதன்உண்மைதெரிந்த பின்னரும், பசியின் கொடுமை அதனை உண்ணத்தானே தூண்டும். எனவே தொழில்வளம் — அதுவும் சிலரின் இலாப வேட்டைக்கான முறையில்—ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற தீயநோக்கம்கொண்டிருக்கும் ஆசிய நாடுகள், அமெரிக்

29-ம் பக்கம் பார்க்க

★ மகுடாபிஷேகம் ★

விருந்துக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைப்பெற்றுக்கொண்டிருந்தன. மாளிகையிலே, பணியாளர் பலரும், விருந்துக்கு, யாரார் வருவர், எவரெவருக்கு என்னென்ன பண்டத்தின் மீது பிரியம், என்பது பற்றியும், ஆடை அலங்கார வகைகளைப்பற்றியும், பேசிக்கொண்டே, வேலையைச் செய்துவந்தனர்.

வீரத்தலைவன் சிவாஜி அடிக்கடி விருந்தளித்துப் பழக்கப்பட்டவனல்ல—நேரம் ஏது? நாட்டின் அடிமைத்தனத்தை ஓட்டவே காலமெலாம் தேவைப்பட்டது ஒரு வெற்றி, மற்றோர் வெற்றிக்கு நுழைவுவாயல்! ஒருவீரச் செயல், மற்றோர் வீரச்செயலுக்கு,முன்னறிவிப்பு! இம்முறையில வாழ்ந்துவந்த வீரத்தலைவனுக்கு, மண்டலாதிபதிகள் பலர், தத்தமது அரண்மனைகளிலே, அடிக்கடி, நடத்திவந்தது போல, விருந்துகள் நடத்த, வேடிக்கையில் ஈடுபட நேரம் ஏது-நினைப்புதான் எங்கனம் வரும்! ஆடலழகிகள் புடைசூழக்கொலுமண்டபம்புகுந்து கோலாகலமாக வீற்றிருக்கும்கொற்றவனல்லவே — அஞ்சா நெஞ்சினர் பின்தொடர,ஆபத்துக்களைத்தாண்டி கோட்டைகளைத்தாக்கித் தகர்க்கும் கடும்போரில் ஈடுபட்ட காவலனல்லவா, சிவாஜி—விருந்து, அபூர்வமாகத்தான் நடைபெற முடியும். எனவே மற்ற மண்டலாதிபதிகள் ஏற்பாடு செய்யும் விருந்துகளின் போது எழாத ஓர் தனி மகிழ்ச்சி. இந்த விருந்தின்போது ஏற்பட்டது.

விருந்துக்கான உணவுவகைகளைத் தயாரித்தனர், ஒரு சாரார்.

மற்றும் சிலர், விருந்துண்ணும் இடத்தை, விசேஷமான முறையிலே ஒழுங்குபடுத்தினர்.

இருவரிசைகளாக, ஆசனங்கள் அமைத்தனர்—முகப்பிலே ஓர் தனி ஆசனம் அமைத்தனர். விருந்தினர் அமர, அந்த இருவரிசைகளும்—விருந்தளிக்கும், வீரத்தலைவன் அமர முகப்பு ஆசனம்.

விருந்துக்குத் தலைமை தாங்கி நடாத்துபவர், வெற்றிவீரர் சிவாஜி என்பதை, ஆசன அமைப்பு நன்கு காட்டிற்று.

மாளிகைப்பணியாட்கள் மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருந்தனர் இந்த ஏற்பாட்டினைச் செய்துவிட்டு. மராட்டிய மண்டலத்திலே, பல்வேறுபகுதிகளிலேயும் உள்ள, வீரர்கள், நகரத்தலைவர்கள் கோட்டைக்காவலர்கள் ஜாகிர்தார்கள், ஆகியோர், விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பலமடங்கு அதிக அளவுள்ள எதிரிப்படையைத்தாக்கும்படி, பயங்கரமான பள்ளத்தாக்கு, செங்குத்தான மலையுச்சி, வெள்ளம் விறிட்டுக்கொண்டுள்ள காட்டாறு, வெந்தணல்போல் காற்று வீசும் பெருவெளி, எனும் எவ்வழி சென்று எதிரியைத்தாக்கும்படி, கட்டளையிட்டபோதும், ஏன் என்றோ, ஆகுமோ என்றோ, கேட்டறியாதவர்கள், மராட்டிய சர்தார்கள்! சிவாஜியின் சொல்லைத்தட்டி நடந்தறியார்கள்—அந்த நினைப்பேதோன்றியதில்லை அவர்கட்கு. அவரிடமிருந்து அழைப்பு வந்தால், அன்னை அழைக்கிறாள்! என்றே எண்ணி, தடைகூறாது, தயக்கம் காட்டாது, சென்று போரிட்டவர்கள் அந்தச் சர்தார்கள்.

எவ்வளவோ ஆபத்துகளை அவர்கள், பூக்கொய்தல்போல, புனல் விளையாட்டு போலக்கருதினர், சிவாஜியினிடம் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையின் காரணமாக. மராட்டியத்தை வாழ்விக்கவந்த மாவீரனின் பேச்சுக்கு மறுபேச்சுக்கிளம்புவதில்லை மராட்டியத்தில்.

சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்க நடைபெற்ற போரின்போது, வீரதீரச்செயல்புரிந்த சர்தார்களுக்கெல்லாம், அழைப்பு அனுப்பி இருந்தனர்—விருந்துக்கு வருமாறு. அனைவரும் வந்தனர்—ஆனால்..................!!

விருந்து மண்டபத்திலே, போடப்பட்டிருந்த ஆசனங்களின் அமைப்பைக்கண்டதும், சர்தார்கள், முணுமுணுக்கலாயினர் — முகம் சுளிக்கலாயினர்.

“இருவரிசைகள் உள்ளன — சரி அதோ ஓர் ஆசனம், முகப்பிலே, உள்ளதே—அது ஏன் — யாருக்கு? என்றோர் கேள்வி பிறந்தது.

“அந்த ஆசனத்திலேதான் அஞ்சா நெஞ்சன் சிவாஜி அமரப்போகிறார்!’ என்று பதிலளித்தனர்.

அமரட்டும் — ஆனால், அந்த ஆசனமும், இருவரிசைகளிலே ஏதேனும் ஒன்றோடு சேர்த்துப்போடப்பட்டிராமல், தனியாக, இருவரிசைகளுக்கும் மேலாகப் போடப்பட்டிருப்பானேன்? என்ன பொருள் இதற்கு?”—என்று கேட்டனர்.

“விருந்துக்கு அவர் தலைமை தாங்குபவர், என்ற முறையிலே இது போல் அமைத்தோம்” என்று பதிலளித்தனர்.

“அதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்” என்றனர் சர்தாரகள்.

களத்திலே ஒருமுறையேனும், சிவாஜியின் சொல்லை ஆட்சேபித்தறியாத சர்தார்கள், ஆசன அமைப்பை ஆட்சேபித்தனர்!

“சிவாஜி, வீரர், தீரர், தியாகி, தேசோத்தாரகர் — எல்லாம் சரி ஆனால் அவர், உயர்ந்த ஜாதியினரல்ல, க்ஷத்திரியரல்ல, குடியானவர் குலம் — அந்தக் குலத்துதித்தவர், பிரபு, கோர்பாதி, நிம்பால்கர், சாவான்த்,போன்ற பல உயர் குல வகுப்பினர் கூடியுள்ள இந்த விருந்து மண்டபத்திலே, தலைமை வகிப்பது முறையாகாது. வருணமுறை, குல கௌரவமுறை,ஆகியவற்றுக்கு, இது கேடு செய்வதாகும். சிவாஜி, விருந்துக்குத் தலைமை தாங்க, அந்த உயர் இடத்தில் அமருவதற்கு நாங்கள் சம்மதித்தால், எங்கள் குலங்களை விட அவர் பிறந்த குலம் மேலானது என்று சம்மதித்தவர்களாவோம்! அது எங்கனம் சாத்யமாகும்! எப்படி அதை ஒப்புக்கொள்ளமுடியும்! —நாங்கள் சிவாஜியின் வீரத்தைப் போற்றுகிறோம் — போரிலே அவர் புலி, ஆட்சேபிப்பார் எவரும் இல்லை — அவருக்காகவே, வாள் ஏந்தி, வையகத்தின் கோடிவரையிலே

சென்று போரிடவும் தயாராகஇருக்கிறோம்—ஆனால் எங்கள் குலங்களை எல்லாம்விட மேலான குலத்தவர் என்று சிவாஜியை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது!" என்று கூறினர்—கண்டிப்பாக —பிடிவாதமாக!

விருந்து மண்டபம் விவாத மண்டபமாயிற்று! குதூகலிக்க வேண்டிய கூடத்திலே, கோபமும் கொந்தளிப்பும் மூண்டது. சிவாஜியின் வீர உருவம், அவருடைய வெற்றிகள், அவர் உருவாக்கிய புதியமராட்டியம், எதுவும், அந்தச் சர்தார்களின் கண்களுக்குத் தெரியவில்லை—அவருடைய குலம் மட்டுமே தெரிந்தது! குலபேதம் எனும் கொடிய பாசததால் தாக்கப்பட்ட சர்தார்கள், அந்த விருந்திலே கலந்து கொள்ள மறுத்து விட்டனர். தாம்பூலம் மட்டும் பெற்றுக்கொண்டு போயினராம்! விருந்து நடைபெறவில்லை. வீரத்தலைவன் விசாரத்திலாழ்ந்தான்.

* * *

விசாரம் எழாமலிருக்க முடியுமா! எவ்வளவு அரும்பாடுபட்டிருக்கிறோம், சோர்ந்துகிடந்த மராட்டியத்துக்குப் புத்துயிரூட்ட! விமோசனம் இல்லை, விடுதலை இல்லை, என்று எண்ணி ஏங்கிக்கிடந்த நாட்டிலே, வீட்டுக்கோர் வீரனைக் காட்டினோம்! விரோதிகளை முறியடித்தோம்! வெற்றிமேல் வெற்றி பெற்றபோது, எந்தச் சர்தார்கள், நமது கண்காட்டிய வழி செல்லக் காத்துக் கிடந்தனரோ, அவர்களேயன்றோ, விதண்டாவாதம் பேசுகின்றனர்—விருந்து மண்டபத்திலே, விஷப்புகையை மூட்டி விட்டனர்! வீரன்தான், ஆனால், குலம்?—என்று கேட்கின்றனர்! நிம்பால்கர் குலமாம், கோர்பாத் குலமாம், சாவாந்து குலமாம்! இவைகளெல்லாம், களத்திலே, நான் கடும்போரிடக் கிளம்பியபோது, எங்கே போயின? குடியானவனுக்கு, விடுதலைப்போரை நடாத்த அனுமதி இருந்தது — ஒருவிருந்துக்குத் தலைமைதாங்க, குலதர்மம், தடைவிதிக்கிறது! இந்த நிலையில் நாடு இருக்கிறது!—" என்று எண்ணி ஏக்கத்திலாழ்ந்தார், எந்த ஆபத்தையும் கண்டுகலங்காத உள்ளம் படைத்த, சாத்பூராச் சிங்கம்!

வீரத்தலைவனே! விசாரம் விடுக! —என்றுமெள்ளக்கூறினன், பாலாஜி ஆவ்ஜி சிட்னிஸ்.

சிட்னிஸ், சிவாஜியின் அந்தரங்கக் காரியதரிசி.

"பாலாஜி! பார்த்தாயல்லவா சர்தார்களின் போக்கை?" என்றார் சிவாஜி.

"பார்த்தேன் — சிந்தித்தேன்—ஒருமுடிவுக்கும் வந்திருக்கிறேன்" என்றான் பாலாஜி.

என்ன? என்று, சிவாஜியின் விழி கேட்டது, சோகத்தைச் சொரிய விட்டவண்ணம்.

"மராட்டிய மண்டலம் உருவாகி விட்டது—புதியஜீவன் ஏற்பட்டு விட்டது—எனினும் தாங்கள் மட்டும் இன்னமும் பழயசிவாஜியாகவே இருக்கிறீர், அதனால்தான், பழைமையில் படிந்துபோயுள்ள சர்தார்கள், குலதர்மம் பேசுகிறார்கள். அவர்களிடம் கோபித்துப் பலனில்லை—வாதாடியும் பயனில்லை—அவர்கள், புண்ய ஏடுகளைப் பொதி பொதியாகக் கொண்டுவந்து கொட்டுவர், தமது கட்சிக்கு ஆதாரவுதேட. ஆகவே அஞ்சாநெஞ்சனே! தாங்கள், மகுடாபிஷேகம் செய்துகொண்டு, சிவாஜிமகாராஜ் ஆகிவிடவேண்டும்—மகாராஜாவான உடனே, நிம்பால்கரும், கோர்பாதும், சாவந்தும், பிரபுவும், காயஸ்தரும், பிறகுலத்தவரும், தாமாகவே, தங்களை மேலானகுலம் என்று ஏற்றுக்கொள்வர் — ஏனெனில, மகுடாபிஷேகமாகித் தாங்கள் மகாராஜாவாகி விட்டால், தாங்கள் க்ஷத்திரிய குலமாகிவிடுகிறீர்! எவரும எக்குறையும் கூறுவதற்கில்லை. அதுதான், இந்தச் சம்பவம், நமக்குத்தரும் பாடம். விசாரத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் விளக்கம். வீரத்தலைவனே! இனி நீர், மகாராஜ் சிவாஜியாகவேண்டும்" என்றான், சிட்னிஸ்.

அவனுடைய மதிகண்டு, மராட்டிய விடுதலைவீரன் மனமிகமகிழ்ந்தான்.

பாலாஜி சிட்னிஸ், பட்டாபிஷேகத்துக்கான காரியத்தில் ஈடுபடலானார்.

வேதோக்தமான முறையிலே, பட்டாபிஷேகம் நடைபெற்று, சிவாஜி, க்ஷத்திரிய பரம்பரையினராக்கப்படுவதற்காக, அந்தக் காலத்திலே, ஆரிய குலத்தலைவனாகவும், வேதவித்தகனாகவும் விளங்கிய காசி க்ஷேத்திரவாசி, காகபட்டர் என்பவரையே கொண்டுவரவேண்டும் என்பது பாலாஜியின் ஏற்பாடு.

அந்த ஏற்பாட்டுக்குப் பலமான எதிர்ப்புக் கிளம்பிற்று—மராட்டியத்திலே, பார்ப்பனரிடமிருந்தும், குலப்பெருமை பேசும்பல குடிலர்களிடமிருந்தும்.

சாஸ்திரம் அனுமதிக்காதே! — என்றனர் சிலர்.

சாஸ்திரம் என்ன சாமான்யமா—காலத்துக்கேற்ற கோலம் கொள்ள—என்று கோபமாகப் பேசினர் சிலர்.

க்ஷத்திரியர்களே, இப்போது கிடையாதே! பரசுராமர், க்ஷத்திரியர்களை, அப்போதே பூண்டோடு அழித்துவிட்டாரே! கலிகாலமல்லவா இது! இப்போது ஏது க்ஷத்திரிய குலம்?—என்று வாதாடினர்—யுகதர்ம ஆதாரம் காட்டி.

இவ்வளவு எதிர்ப்பு கிளம்பிற்று, இணையில்லா வீரச்செயல் புரிந்து, வெளிநாட்டு வல்லரசை முறியடித்துத் தாயகத்தின் தன்மானத்தை மீட்ட தலைவன், தான் சிருஷ்டித்த சாம்ராஜ்யத்துக்கு மன்னனாக முடிதரிக்க முயற்சித்தபோது.

போரிடத்தான் சிவாஜியை அனுமதித்தனர்! — ஆபத்தைப்போக்கத்தான் அனுமதித்தனர்!—அரசாளும் உரிமைதர—ஆகமம் இடந்தரவில்லை—ஆரிய தர்மம அனுமதிக்கவில்லை.

ஐயோ! பாம்பு! பாம்பு! — என்று அலறிய குரல் கேட்டு, உள்ளே நுழைந்து, பாம்பைக் கொன்றவன் பாம்பு நுழைந்து கொண்டிருந்த நந்தவனத்திலே பூத்துச்சிரித்திடும், மலரிலே ஒன்றைப் பறித்து ரசிக்க எண்ணியபோது, ஐயோ! பாம்பு!—என்று அலறியவர்கள், கள்ளன்! கள்ளன்! என்று, காட்டுக் கூச்சலிடுவது போலிருந்தது, சிவாஜியின் மகுடாபிஷேகத்துக்காக முயற்சி நடந்தபோது கிளம்பிய எதிர்ப்பு!

அதிலும், தோட்டம் வேறு ஒருவருடையது என்று கூட, இங்கு சொல்வதற்கில்லை — மராட்டியம், சிவாஜியின் ஜென்மபூமி! எனினும், முடிதரிக்கும் பாத்யதை ஆகம விதிப்படி அரசாளும் க்ஷத்திரிய பாத்யதை, குடியானவன் குலத்துதித்த சிவாஜிக்குக் கிடையாது, என்று ஆர்ப்பரித்தனர்!

களம் பல கண்டவர் சிவாஜி—ஆனால் இந்தக் களம், அவருடைய கருத்தையே குழப்பிவிட்டது.

றின் கோட்டினைத் தாண்டாதிருந்த சர்தார்களெல்லாம் சங்கநாதம் செய்கின்றனர்.

வாழ்த்தின பூசுரரெல்லாம் வாதாடுகிறார்கள், ஏடுகளைப் பிரித்து வைத்துக்கொண்டு.

மராட்டிய மண்டலத்துக்கு முதல் அமைச்சர் முறையிலே காரியம் பார்த்துவந்த, மோரோ பந்த் கூட ஆட்சேபிக்கிறார் — வேதகாம விதிப்படி, மகுடாபிஷேகம் செய்துகொள்வது, கூடாது என்று கூறுகிறார்.

மோரோ பந்தும் ஓர் பார்ப்பனர்! எதிர்ப்பு பல இடங்களிலிருந்தும் கிளம்பிற்று. இதனைத் தாக்கித் தகர்க்க முடியாது, தந்திரமாகத்தான் வெற்றிபெறவேண்டும் என்று திட்டமிட்டு வேலைசெய்தான் பாலாஜி சிட்னிஸ்! சிட்னிஸ், காயஸ்த வகுப்பு!!

எல்லா எதிர்ப்பும் அடங்கிவிடும், அவருடைய அனுமதி கிடைத்தால்! இவர்கள் காட்டும், சாஸ்திரங்களை, வாதங்களை, அவர் தவிடுபொடியாக்கி விடுவார்—அவ்வளவு திறமைசாலி! வியாக்யானத்திலே அவரை மிஞ்சுபவர் இல்லை. இன்று இங்கு எதிர்ப்பு பேசுபவர் எல்லாம், அவர் வந்து, விளக்கம் கூறினதும் வாயைமூடிக் கொள்வர்! முன்பே விளங்காமற் போய்விட்டதே என்பர்— எங்களுக்கு முழுச்சம்மதம் என்பர்—பாருங்கள் பட்டாச்சாரிகளின் பேச்சு அவ்வளவும், புழுதிக்குப் போகப்போகின்றன!—அவர் வரட்டும்—என்று, கூறினபடி இருந்தான் பாலாஜி.

சிவாஜியின் எதிர்காலம் — காகபட்டரின் சொல்லை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது! வீரவாள் போதவில்லை! வெற்றிகள் போதவில்லை! வேதமோதியின் அனுமதி தேவைப்பட்டது!

மராட்டிய மண்டலம் அழகுற இருந்தது! மராட்டியத்தில் மனைதோறும், மாவீரனின் மாண்பு பேசப்பட்டது! ஆளும் ஆற்றல் அவரிடம் நிரம்ப இருந்தது!—எனினும், அவருடைய வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கவேண்டி நேரிட்டது. காவலன் காத்திருந்தான் காசிவாசியின் ஆசிக்காக. அதைப்பெற்றுவர, பாலாஜி சிட்னிஸ், மராட்டியத்திலிருந்து,மூன்று பார்ப்பனரை அனுப்பி வைத்தான், காசிக்கு. அம்மூவரின்பெயர், கேசவ பட்டர்—பாலசந்திரபட்டர்—சோமநாதபட்டர்—என்பதாகும். இம்மூவர் சென்று, நிலைமையைக் காசிவாசி காக பட்டருக்கு விளக்கி, மராட்டியத்திலே, மகுடாபிஷேகத்துக்கு உள்ள எதிர்ப்பையும் எடுத்துக் கூறி, எப்படியாவது காகபட்டரின் சம்மதத்தைப் பெற்று, மகுடாபிஷேகத்தை நடத்தி வைக்க, அவரையே மராட்டிய மண்டலத்துக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும், என்பது, பாலாஜியின் ஏற்பாடு.

* * *

பா:—பிரும்மணோத்தமர்களே! நீங்கள்மேற்கொண்டுள்ள காரியம், மிக மிக முக்கியமானது—மகத்தானது—புனிதமானது. மராட்டிய மண்டலத்திலே, தனி இடம் பெறும், சிலாக்கியமான காரியம்.

கோயில் நிலை

ஆதியிலே வழிபாட்டுக் கார்ந்த
பெருங் கோயில் பல

சாதிமதச் சாக்கடையாய்ச்
சண்டாளர் இருப்பிடமாய்

நீதி அறம் அழித்து வரல்
நின்மலனே நீ அறிவாய்

கோதுகளை அறுத்தொழித்துக்
குணம் பெருகச் செய்யாயோ?

திரு. வி. க.

பாலசந்:—பூர்ண சந்திரனைப் பார்த்து ரசிக்கும்படி, விளக்கைக் கொண்டுவந்து தருவது போல இருக்கிறதே, தங்கள்பேச்சு. சிவாஜி, மகாராஜனாக முடி தரித்துக் கொள்ளவேண்டும் என்பதிலே, எங்களுக்கு அக்கரை இல்லையா............?

கேச:—நாங்கள் மராட்டிய மண்ணிலே பிறக்கவில்லையா, அந்த எண்ணம் ஏற்படாமலிருக்குமா?

பால:—சிவாஜீயின் உப்பைத் தின்று வாழும் நாங்கள், இந்த உதவி கூடச் செய்யாமலிருப்போமா?

பா:—பூரிப்படைகிறேன் பூசுரரே! உங்கள் மொழிகேட்டு மகிழ்கிறேன். மராட்டியத்துக்குப்புதுவாழ்வு அளிக்கும் பொறுப்பு உம்மிடம் இருக்கிறது............

சே:—பொறுப்பை மறந்துவிடக் கூடியவர்களா, நாங்கள்!

பா:— பொற்காலம் தோன்றப் போகிறது உங்கள் பேருதவியால்.

பால:—தோன்றாமலென்ன ....

பா:—பிருமணோத்தமர்களே! மாவீரர் தலைவன், மணிமுடி தரித்துக்கொள்வது கூடாது. ஏனெனில் அவர் சூத்திரர், என்று இங்குச் சில சூதுமதியினர் பேசினரே............

பால:—சூதுமதியினர்- சூழ்ச்சித் திறத்தினர், என்றெல்லாம் ஏன் அவர்களைத் தூற்றுகிறீர், பாலாஜி! சாஸ்திரத்தைத்தான் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்............

பா:—இப்படிப்பட்ட சமயத்திலா! இப்படிப்பட்ட காரியத்துக்கா?

கே:—சமயம், சந்தர்ப்பம், தயவு தாட்சணியம், இவைகளை எல்லாம் பார்த்து நடந்துகொண்டால், சாஸ்திரம் நிலைக்குமா பாலாஜி! சத்தியம் தழைக்குமா? தேவதாப் பிரீதி முக்கியமான கடமையாயிற்றே. மற்றவருக்கு எப்படியோ, முப்புரியினராம் எமக்கு, தேவதாப் பிரீதிதான், முக்கியமான கடமை.

பால: வீண்விவாதம் ஏன்? பாலாஜியிடம் சாஸ்திரத்தைப் பற்றிய சம்வாதம் செய்கிறீரே, கேசவபட்டரே அவருக்கு என்ன தெரியும், வேதாகம விசேஷாதிகளைக் குறித்து— அவர் உம்மைப் போல, வேதத்யயனம் செய்தவரா, வீரர்—அவரிடம் பேசுவதானால், ரதகஜதுரகபதாதிகளைப் பற்றிப் பேசலாம்...........

பா:—உங்களுக்கு, அதுபுரியாதே!

கே:—எங்களுக்கு அது ஏன்? பாலாஜி! நமக்குள் ஏன் விவாதம். சரியோ தவறோ, சத்ரபதி சிவாஜிக்குச் சாஸ்திரோக்தமாக மகுடாபிஷேகம் நடந்தாகவேண்டும் என்று விரும்புகிறீர்—அனைவருக்கும் அதே அபிலாஷைதான்—எங்களுக்குந்தான். இதற்கான சம்மதம், ஆதரவு, உத்திரவு பெற்றுக்கொண்டு வரவேண்டும் காசிவாசி காகபட்டரிடமிருந்து, அவ்வளவுதானே........

பா: அவ்வளவேதான்........

சே:—செல்கிறோம், காசிநோக்கி.

பா:—சென்று கூறுங்கள் காகபட்டரிடம், நமது வீரத்தலைவனின் குண விசேஷங்களை. ஆற்றல் மிக்க நமது தலைவர், அடிமைத்தனத்தை ஓட்ட அரும்பாடுபட்ட வீரத்தை விளக்குங்கள்—அவருடைய ஆற்றலைக் கண்டு, பாரதவர்ஷத்தை அடிமைப் படுத்திய பாதுஷாக்களெல்

லாம், பயந்து போனதைக் கூறுங்கள். மாராட்டியமண்டலத்துக்குப்புதியதோர் சக்தியை, புதியதோர் அழகை, ஆற்றலை, அளித்தவர் என்பதை எடுத்துக் கூறுங்கள். அவருடைய சுட்டு விரல் அசைந்தால், மராட்டியம் துடித்தெழும், அவருடைய சொல் கேட்டால், சோர்ந்த உள்ளங்களிலேயும் புது எழுச்சி சேரும் என்பதைக் கூறுங்கள். ஏழை ஜாகிர்தாரின் மகன், ஏவல் செய்து பிழைத்தாக வேண்டியவன், உழவன், இவனால் என்ன சாதிக்க முடியும் என்று பலர், பலவிதமாகப் பேசியபோதிலும், "சுதந்திரப் போராட்டத்தை நடத்தி, மலை மலையாகத் தோன்றிய எதிர்ப்புகளைத் தூள் தூளாக்கி, மராட்டியத்தை மாற்றாரிடமிருந்து மீட்ட மாண்பை எடுத்துச் சொல்லுங்கள்........

கேச:—சொல்லுகிறோம், சொல்கிறோம்—சொல்லாமலா இருப்போம்...........

பா:—கூடுதலாகக் கூறவேண்டாம் மறையவரே! உண்மையை உரைத்தால் போதும்—நமது நாட்களிலே நாம் மராட்டிய மண்டலத்திலே கண்ட காட்சிகளைக் கூறினால் போதும்—சிவாஜியை, காசிவாசி சாமான்யர் என்று எண்ணிவிடக் கூடாது—ஒரு புதிய சாம்ராஜ்ய சிருஷ்டிகர்த்தா நம் சிவாஜி, என்பதை அவர் அறியவேண்டும். அஞ்சா நெஞ்சனின் அறிவாற்றலைக் கூறுங்கள்—அறநெறி கொண்டவர் என்பதைக் கூறுங்கள்.

கே:—தாராளமாக...........பசு, பெண்டிர், பிருமணர், எனும் மூன்று சிரேஷ்ட ஜீவன்களிடமும் பக்தி கொண்ட சனாதனி சிவாஜி, என்பதையும் கூறுகிறோம்.

சோ:- கூற வேண்டும் கேசவபட்டரே! சிவாஜியின் வீர தீர பராக்கிரமத்தை மட்டுமே எடுத்துக் கூறினால், போதாது. இதுபோல், இணையிலா வீரர்கள் அனேகர்—அறிவேன்—என்று ஒரே வார்த்தையில், பதிலளித்து விடுவார்............

கே:-அப்படிச் சொல்லும்...........பாலச்சந்திரரே! நாம், அதிகமாக விளக்க வேண்டியது, சிவாஜியின் வீரத்தைப் பற்றி அல்ல, அவருடைய பகவத் பக்தி, சனாதனசேவா உணர்ச்சி, பிருமணபக்தி, இவைகளை விரிவாகக் கூறித்தான், காகபட்டரின் மனதை மகிழ்விக்க வேண்டும்.

பா:- மறைவல்லோரே! எம்முறையில் பேசினால், ஜெயம் நிச்சயமோ அது போலப் பேசி, காகபட்டரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு வாருங்கள்—மகாராஷ்டிரத்துக்குப் புதிய ஜீவன் அளியுங்கள்—போய் வாருங்கள்.

(பாலாஜி சிட்னிஸ் சென்ற பிறகு)

கேச:- ஓய், புறப்படும், புறப்படும்—ஏன், அவன் போன திசையை நோக்கி அப்படி விறைத்துப் பார்க்கிறீர்.

பால:— முட்டாள்! முடிதரிக்க வேண்டுமாம் சிவாஜி! அதற்கு நாம், தூது போகவேண்டுமாம்—சூத்திரனுக்கு ராஜ்யாபிஷேகம் அதற்குப் பிறகு நானோ, சேவை செய்யவேண்டுமாம். அவ்வளவு மண்டைக்கர்வம ஓய்! யுத்தத்திலே, ஏதோ, ஜெயம் கிடைத்துவிட்டதாலேயே, இந்த வீரர்களெல்லாம், கொக்கரிக்க ஆரம்பித்துவிட்டா.

கே:- ஏன் ஓய், போகச்சம்மதமில்லை, அதை அவனிடம் முந்திலேயே சொல்லிவிடுவதுதானே....

பால:- மந்தபுத்தி ஓய் உமக்கு! போக இஷ்டமில்லை என்றால், வேறு எவனையாவது, போஜனப்பிரியனைப் பிடித்து அனுப்பிவிடமாட்டானா? நாம் போனால்தானே, நல்லது........ இந்தக் காரியத்தை எவ்விதமாக முடிக்கவேண்டுமோ, அவ்விதம் செய்ய........காக பட்டரின் சம்மதமல்லவா வேண்டுமாம், பட்டாபிஷேகத்துக்கு....வாரும் ஓய்! காகபட்டரிடம் சென்று, கூறுவோம் மராட்டியத்தின் நிலையை — மட்டந்தட்டுவோம் இந்த மாவீரர்களை........

கே:- ஓய்! நீர் பேசுவது பார்த்தால் விபரீதமாக இருக்கிறதே—சிவாஜி பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்கு, காகபட்டரின் சம்மதத்தை எப்படியாவது பெற்று வருவதாகக் கூறினீர், அவனிடம்........

பால:- ஆமாம் — அவனிடம் சொன்னேன் — அசடு ஓய் நீர்! சொன்னால்!

கே:- அப்படியானால்........

பால:- ராஜ்யம், பூஜ்யம் ஓய், பூஜ்யம்! அவா ஆசையிலே மண்விழச் செய்கிறேன் வாரும்.

* * *

காசிவாசியின் சம்மதத்தைப் பெற்று வரச்சென்ற முப்புரி தரித்த மூவரின் மனதிலே மூண்டு கிடந்த வஞ்சகத்தைப் பாலாஜி அறியவில்லை. ஆரிய குலத்தலைவனின் அனுமதியைப்பெற அக்குலத்து மணிகளை அனுப்பிவைப்பதே முறை, யுக்தம் என்று எண்ணினான் காரியம் கைகூடும் என்று நம்பினான். ஆனால், பாலாஜியின் மனம் பதறிவிடும்படியாகி விட்டது, துதின்விளைவு. முப்புரியினர் திரும்பினர், காகபட்டர் தந்த ஓலையை எடுத்துக்கொண்டு. ஓலையிலே, அவர், திட்டமாகக்குறிப்பிட்டிருந்தார், மகுடாபிஷேகம் சாஸ்திர விரோதமானது — சம்மதிக்கமுடியாது—என்று. காரணம், உள்ளூர் கனபாடிகள் காட்டியவைகளே! சிவாஜி, க்ஷத்திரியரல்ல, எனவே, வேதாகம முறைப்படி அவருக்குப் பட்டாபிஷேகவைபவம்

(25-ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞானி கடமை

எளிய நடையில் சாதாரண மனிதனுக்கு விஞ்ஞான அறிவைப் புகட்ட வேண்டியதற்காக, விஞ்ஞானிகள் ஒதுக்கமான தங்கள் இடத்திலிருந்து வெளியேவந்து சர்க்காரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். விஞ்ஞானிகளாகிய நீங்கள் ஒதுங்கியிருந்தால் நீங்கள் மனிதவர்க்கத்துக்கு பெருங்கெடுதி விளைவித்தவராவீர்கள். மனித வர்க்கத்தின் அறிவு அபிவிருத்தி அடையும்படி செய்ய வேண்டியதே உங்கள் வாழ்க்கையின் பொறுப்பு. விஞ்ஞானம் செல்வவானின் தனி உரிமை பொக்கிஷமல்ல. மிக எளியவர்களும் விஞ்ஞானத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள உரிமையுள்ளவர்கள். அவ்வறிவு சாதாரண மனிதர்களிடையே பரப்பப்பட வேண்டும். கெடுதிகளைப் போக்கி உத்தாரணம் அளிக்கவல்லோர் விஞ்ஞானிகள்.

சரோஜனி தேவியார்
ஐ. மா. கவர்னர்.

நடக்கிறது சுயராஜ்யம்!

வரிச்சுமை தாங்க முடியவில்லை என்று முன்னொரு நாள் தலால் கூறினார். மற்றொரு முதலாளியான மோடி, இந்திய சர்க்காரின் வரி விதிக்கும் கொள்கைபற்றி முகாரி பாடியுள்ளார். புதிய தொழில் ஆரம்பிப்பதற்கான உற்சாகத்தை ஊட்டுவதாக இல்லை, சர்க்காரின் வரிக் கொள்கை என்று பார்சி சீமான் ஷராப் பேசுகிறார். லியாகத் அலி கையாண்ட வரி விதிப்பால், தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விட்டதென்று, பத்திரிகை நிருபருக்கு பேட்டியளித்துக் கூறுகிறார் பிர்லா.

இவ்வளவிற்கும் பதில் தரும் முறையில், போர்க்காலத்தில் பெற்றதுபோல் இனியும் கொள்ளை லாபம் பெறலாம் என்று ஆசைகொள்ளாதீர் என்று அறிவுரை பகருகிறார், இந்த முதலாளிகளுக்கு, தொழில் மந்திரி முகர்ஜி. 'உங்களை ஆதரித்து வளர்க்க நான் இருக்கிறேன்; அச்சம் கொள்ளற்க' என்று அபயம் அளிக்கிறார் நிதி மந்திரி மத்தாய்.

அகவிலை ஏறி இருப்பதைத் தடுக்கவோ எந்தவித உருவான நடவடிக்கையும் காணோம். எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளும் ஏழை மக்களுக்கு நன்மையை உண்டாக்குவதற்குப் பதில், முதலாளிகளின் பணப் பெட்டிகளை மேலும் நிரப்புவதற்குத்தான் பயன்படுகிறது. எவருக்கு வரி விதிப்பது? அவ்வாறு வரி விதிப்பதால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் எவை எவை? வரி கொடுக்கும் ஆற்றலுள்ளவர்களை ஒதுக்கிவிட்டு, சக்தி அற்றவர்களைக் கசக்கிப் பிழிவதால், எதிர்பார்த்த பலன் கிடைக்குமா? கிடைக்காதா? என்பதைப் பொதுவாக ஆராய்ந்து பார்ப்போம்.

செல்வம் எவ்வளவு பெருகினாலும், அதனால் ஏற்படுகின்ற பயன் முழுவதையும் அனுபவிக்கும் ஆற்றல், ஒருவனுக்குப் பெருகிவர முடியாது. செல்வத்தை, சொந்தத்தில் உபயோகித்துக்கொள்ள ஒருவனுக்குள்ள சக்தி, ஓர் வரம்புக்கு உட்பட்டதாகத்தான் இருக்க முடியும்.

ஆயிரம் வேலி நிலம், ஐம்பது மாளிகை, ஐந்து மோட்டார், ஊருக்குள்ளே இரண்டு நெசவாலை, வெளிநாட்டிலே பத்து வட்டிக்கடை, என்ற இவை மூலமாகவும் ஒருவனுக்கு வருமானம் வருவதாக இருந்தாலும், அவ்வளவையும் அவனால் அனுபவித்துவிட முடியாது—முடிவதில்லை. நான்கு வேளைக்குப் பதில் ஆறுவேளை வேண்டுமானால் சாப்பிடலாம். இரண்டு மோட்டாருக்கு பதில் நான்கு மோட்டார் வைத்துக் கொள்ளலாம். சிறிய மாளிகைக்குப் பதில் பெரிய கோட்டையிலே குடியிருக்கலாம். காலையிலே ஒருவகை ஆடை, நண்பகலிலே வேறொரு ஆடை, மாலையிலே புதிய மாதிரி ஆடை, இரவிலே வேறொன்று என்னும் முறையில்தான் அவனால் அனுபவிக்க முடியும். தனக்கு வரும் வருமானம் முழுவதையும், அவனே அனுபவித்து விடுவதென்பது எங்கும் என்றும் நடக்கக்கூடிய காரியமன்று. எந்தப் பொருளுக்கும் இருக்கும் மதிப்பு அல்லது கொடுக்கப்படும் மதிப்பு, அது அதனுடைய உபயோகத்தின் தன்மையைப் பொறுத்ததாகும். ஒரு ஊரில் குடியிருப்பதற்கோ, அல்லது விலைக்கு வாங்குவதற்கோ, வீடுகள் வேண்டிய அளவு கிடைப்பது அரிதாகிற பொழுதுதான், வாடகையும் உயருகிறது, விலையும் கூடுதலாகிறது. வீட்டின் மதிப்பு, பூட்டிவைத்திருந்த காலத்தைக் காட்டிலும், அனுபவிக்கின்ற அவசியம் உண்டாகும் பொழுதுதான் உயருகிறது. நல்ல மழை பெய்கிறபொழுது, நான்கு குடைக்குச் சொந்தக்காரனாக இருக்கிறவன், ஒரே காலத்தில் நான்கு குடைகளையும் பயன் படுத்த முடியாது. உபயோகிக்கும் ஒரு குடைபோக மீதமுள்ள மூன்று குடைகளும் பயனளிக்காமல், வீணில் மதிப்பிழந்து கிடக்கிறது. இந்த மூன்று குடைகளும், அவை இல்லாமல் கஷ்டப்படும் மூவருக்குக் கொடுத்தால், குடைகளால்ஏற்படும பயனை அவர்களும் அனுபவிக்க வாய்ப்புஏற்படுகிறது. குடைக்குள்ள பயனளிக்கும் தன்மையும் நிதர்சனமாகிறது.

எந்தக் காரணம் பற்றியோ, எப்படியோ, செல்வம் சிலரிடத்தில் குவிந்து கிடக்கவும், கோடிக்கணக்கான மக்களிடம் அது ஒன்றுமில்லாமல், வறுமையில் உழன்று உயிர் துறக்கவுமான பரிதாபகரமானநிலை நிலைத்துப்போய் இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வை ஒழித்துக்கட்ட, சிலரிடத்தில் பயனற்று மதிப்பிழந்து குவிந்து கிடக்கும் செல்வத்தை, மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் முறையில பகிர்ந்து அளிக்க, ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்டு வரும் நடவடிக்கைகளில் வரி விதிப்பதும் ஒரு முறையாகும். அளவிற்கு—தேவைக்கு அதிகமாக ஒருவனிடம் குவிந்துகிடக்கும் செல்வம், அவனுடைய உடலுழைப்பால் மட்டும் ஏற்பட்டதல்ல. பலரின் உழைப்பால் ஏற்பட்டது அது. பொருள் இல்லாதாரின் சார்பில் ஆளும் அதிகாரம் சிக்கி, வீணில் உறங்கிக் கிடக்கும் உற்பத்திச் சாதனங்களையும் மற்றச் சொத்துக்களையும் சமூகத்தின் பொதுச் சொத்தாக்கினால், இல்லாமை தொலையும்—வறுமை நீங்கும்—மக்கள் அனைவரிடத்திலும் மறைந்து கிடந்ததும், வெளிக்கிக் காட்டிக்கொள்வதற்குத் தகுந்த தருணமில்லாமல் மெலிந்து போனதுமான ஆற்றல், தனது முழு சக்தியையும் திரட்டி, சமூகத்தின் நலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உருவாக உழைப்பதைப் பார்க்கமுடியும்.

பாலங்கள்கட்டவேண்டும், பாதைகள் போடவேண்டும், தேக்கங்கள்

கட்டளைக்கல்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்.

குறள்

நாடு

பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்; அணி என்ப நாட்டிற்கு இவ்வைந்தும்

குறள்

உழவு

ஏரினும் நன்று எருவிடல்; கட்டபின் நீரினும் நன்று அதன் காப்பு.

குறள்

குன்றுயினும்

குன்றினனையாரும் குன்றுவர்
குன்றுவ குன்றியனைய செயின்.

குறள்

உய்யார்

எரியாற் சுடப்படினும் உய்
வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத் தொழுகு
வார்.

குறள்

அமைக்கவேண்டும், விவசாயத்தை விஸ்தரிக்க வேண்டும், மின்சாரத்தைப் பெருக்கவேண்டும், தொழில் வளம் காணவேண்டும், ஆகிய அனைத்துக்கும், வரி விதிப்பதின் மூலந்தான், ஒரு அரசாங்கம் வழி வகை செய்யமுடியும்.

மக்கள் மடமையைப்போக்கமுயலவேண்டும். கல்வி, அனைவருக்கும் இனமாக வழங்கவேண்டும். பிணி வராமல் தடுக்கவேண்டும். சுகாதார வசதி செய்தாகவேண்டும். பசிப் பிணியைப் போக்கப் பரிகாரம் தேடியாகவேண்டும். வேலையற்ற திண்டாட்டத்தைத்தொலைக்க மக்களுக்கு வேலை தேடித் தரவேண்டும். வயோதிக வயதில வாழ, உபகார நிதி தரவேண்டும். நொண்டி முடங்களுக்கு, கூன் குருடுகளுக்கு, உயிர் வாழ்வதற்கு சோறு அளிக்கவேண்டும். இவ்வளவும், ஒரு மனிதாபிமானமுடைய நாகரிக அரசாங்கத்தின் நீங்காக்கடமையாகும். இதனையெல்லாம செய்ய அரசாங்கம், வசூலிக்கப்படும் வரியைத்தான் நம்பியிருக்கிறது. எனவே, வரி எவருக்குவிதிப்பது? எவருக்கு வரி விதித்தல், நாட்டுக்கு, எந்தவழிய மக்களுக்கு நலம்பல செய்யமுடியும் என்பதை நிர்ணயித்துக்கொள்வது அவசியமாகிறது.

உலகத்தின் தொழிற்சாலையாக விளங்கும் இங்கிலாந்து—அமெரிக்கா போன்ற நாடுகளில், எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையில் வளரும் வருமானம் உடையவர்களுக்கு, வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் உடையவர்களுக்கு, முதலில் வரி விதிப்பது என்னும் கொள்கை அமுல் செய்யப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது. இதற்கு அடுத்தபடிதான் நடுத்தர வருமானம் உடையவர்களுக்கு வரி விதிப்புக் கையாளப்பட்டது. புதுப் புதுவரி விதிக்கும் போது எல்லாம், பணமூட்டைகள் முணு முணுக்காமல் வரியைக் கொடுத்துவிடவில்லை. அதனை எதிர்க்கத் தங்களுக்குள்ள ஆற்றல் அனைத்தையும் கையாண்டுதான் பார்த்தன. தங்களிடம் சேர்ந்துள்ள புதியசெல்வத்தை, வரியாகக் கொடுத்துவிட்டால்—இழந்துவிட்டால், வேறுபல தொழில் காண்பதற்கு மூலதனத்துக்குத்தாங்கள் எங்கேபோவதுஎன்றும் வாதாடின காலம் உண்டு. உற்பத்திப்பெருக்கம்தான் செல்வப்பெருக்கத்திற்கு வாய்ப்பளிப்பதாகும். செல்வம் பெருகப் பெருகத்தான், பற்பல புதிய தொழில்கள் மேலும் மேலும் உருவானால் தான் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வழி ஏற்படும். மக்களின்வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, பெருகிவரும் செல்வத்தை, சிலரிடமே குவிந்துவிடாமல் பார்த்துக்கொள்வதோடு, பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். லாபமே முதலாளித்துவ முறையின் மூல நோக்கமாக இருப்பதால், அளவு கடந்த உற்பத்திப் பெருக்கம் என்பது அந்த முறைக்கு முரண்பட்டதாகும். எனவேமுதலாளித்வ முறையில், உற்பத்தி பெருகுவதென்பது ஓர் வரம்புக்குட்பட்டுத்தான் இருக்க முடியும். அதிக உற்பத்தி முதலாளிகளுக்கு அதிக லாபத்தைக் கொடுக்காது. ஆதலால் முதலாளிகள் கூறும் உற்பத்திப் பெருக்கம் என்னும் வார்த்தை உண்மையானதாகாது.

சிலகாலமாவது முதலாளித்துவ முறை நல்லதோர் பொருளியல் முறையாக இருக்கவேண்டுமானால், உற்பத்தி செய்யப்படும் பொருளின் பெரும்பகுதி பணமாக்கப்பட்டு தனி முதலாளிகளிடம் சேர்ந்துவிடாமல், உழைப்புக்கேற்ற கூலிஏற்பாடு செய்தல், வாழ்க்கைக்கு நல்ல வசதிகள் செய்தல், லாபத்தில் பங்களித்தல் ஆகிய இனங்களில், தொழிலில் ஏற்படும் வருமானத்தை நேர்மையாகப் பகிர்ந்தளித்தால், இதன் பலனாக மக்களிடம் புதிதாக உண்டாகும் வாங்கும் சக்தி, மேலும் உற்பத்திப் பெருக்கத்துக்கு ஊக்கமூட்டும். முதலாளித்வ முறையில் எவ்வளவு குறைபாடு இருந்த போதிலும் உற்பத்திப்பெருக்கத்தின் வரம்பு கொஞ்சம் விரிவடைய வழி பிறக்கும். இத்துறையில் லாபத்தைப் பகிர்ந்தளித்த பின்னரும், பெருந்தொகை முதலாளியிடம் இருக்கத்தான் செய்யும். அத்தொகையில் அதிகப்பங்கை சர்க்கார் வரியாகவசூலித்தால், நாட்டுக்கு நலஞ் செய்யும் நல்ல திட்டங்களைச் சர்க்கார் நிறைவேற்றுவதின் மூலம், மக்களின் வாங்கும் சக்தியை மேலும் பெருக்க வழி செய்யலாம். இதனாலும், உற்பத்திப் பெருக்கத்திற்கு ஆக்கம் ஏற்படும். முதலாளித்துவத்தைச் சில காலத்திற்காவது காப்பாற்றி வர இந்த வழி ஒன்றுதான் நமது சர்க்காருக்கு இருக்கிறது. ஆனால் இந்தமுறை நமது சர்க்காருக்கு வேம்பாக இருக்கிறது. முதலாளிகளைத் திருப்திபடுத்தும் போக்கினையே பெரிதெனக் கொண்டிருக்கிறது. நமதுசர்க்காரின் இந்தப் பலவீனத்தைத் தெரிந்துகொண்ட முதலாளிகள், தங்கள் கோரிக்கைகளையும் விரிவாக்கிகொண்டே போகின்றனர். அதற்கு ஓர் எல்லை இருப்பதாகவே தெரியவில்லை. அவர்கள் அதிக வரி கொடுப்பதாக—அதுவும் உலகத்தில் மற்ற நாட்டு முதலாளிகளை விட அதிகமாக-நமது நாட்டு முதலாளிகள் வரிகொடுப்பதாகப் பகிரங்கமாகப், பட்டேல், முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கி பேசுகிறார்.

வாழிய நிலனே.

நாடாகு ஒன்றோ
காடாகு ஒன்றோ
அவலாக ஒன்றோ
மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லவர்
ஆடவர்
அவ்வழி நல்லை
வாழிய நிலனே!

[ஔவை.]

அவலாக—மேடாக; மிசையாக—பள்ளமாக.

முதலாளித்துவ முறைக்கு இனி உலகில் இடமில்லை என்பதை இங்கிலாந்து மக்கள் தெரிந்துகொண்ட காரணத்தினால் அந்த முறைக்குச் சிறுகச் சிறுகச் சீட்டளித்துவிட்டு, தொழில்களைத் தேசியமயமாக்குகிறார்கள். எழில்மிக்க ஏகாதிபத்தியமாக வாழ்ந்த இங்கிலாந்தே, தொழில் நுணுக்கம் பலவும் தெரிந்த இங்கிலாந்தே, புதிய முறையைக் கொள்ளும்பொழுது, தக்ளியையும் கைராட்டையையும் தவிர வேறு எதனையும் செய்து பழக்கமில்லாத — பார்த்தறியாத இந்நாடு, முதலாளிகளுக்கு, அவர்கள் சக்திக்கேற்ப வரிவிதிப்பது கூடக்கூடாதென்று பேசுவது விந்தையாகத்தான் இருக்கிறது.

முதலாளிகள் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றியாகி விட்டது. தொழிற்சங்கத்தைப் பிளவு படுத்தியாகிவிட்டது. முதலாளிகளின் மூலதனத்தில், அரசாங்கத்தின் அரவணைப்பில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய தொழிற்சங்கத்திற்கு, உலகத்தொழிலாளர் மாநாட்டிலும் பங்குபெறும் யோக்யதாம்சத்தை, அதிகார பலத்தின் மூலம் கொடுத்தாகிவிட்டது. வேலைநிறுத்தமோ சட்டவிரோதமென்று தீர்மானிக்கும் கட்டத்தை நெருங்கியாகிவிட்டது. கட்டாய பஞ்சாயத்துக்கான, நிர்பந்தத்தைத் தொழிலாளருக்கு ஏற்படுத்தியாகிவிட்டது ரேஷனலிசேஷன் என்று பெயர்கூறி பலரைவேலையில் இருந்து நீக்கியாகி விட்டது. கம்யூனிஸ்டு பூச்சாண்டியைக் கிளப்பி உரிமை வேட்கையுடைய தொழிலாளர் தலைவர்களையெல்லாம் சிறைச்சாலைக்கு அனுப்பியாகி விட்டது. வகுப்புக்கலவரத்தின் பெயர் கூறி சாதாரண உரிமைகளைக்கூட மக்களுக்கு மறுத்தாகிவிட்டது. விசாரணை இல்லாமல் எவரையும்காவலில் வைக்கும் காட்சி தினம் தினம் நடைபெறும் சாதாரண சம்பவமாகிவிட்டது. இவ்வளவிற்குப் பின்னரும் காய்ந்த வயிற்றினரைப் பார்த்துப் பட்டேலுக்குப் பரிதாபம் தோன்றக் காணோம். அவர்களுக்காகப் பரிந்துபேச நாக்கு மறுக்கிறது அவருக்கு. இன்னமும் தியாகம் அவர்கள் செய்யவேண்டுமென்று, கர்ஜிக்கிறார் பட்டேல். சிறிய விஷயம் என்று பண்டிதர் இதனைச் சித்தரித்துக்கண்டிக்கிறார். மக்களுக்கோ கருத்திலே தெளிவில்லை. உள்ளத்திலே உறுதி இல்லை. வாழ்விலே நம்பிக்கை இல்லை. நாடு நலிகிறது. இதனை வெளியில் கூற நல்லவர்களுக்கோ துணிவில்லை. துணிந்து கூறுகிறவர்களை வரவேற்கச் சிறைச்சாலை காத்துக்கொண்டு இருக்கிறது. நடக்கிறது சுயராஜ்யம் இந்த இலட்சணத்தில்!

தொல்காப்பியம்

[சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி. எ., பி. எல்.]

மேற்கு நாடுகளாகிய ஐரோப்பா கண்டத்தில் தற்கால விஞ்ஞான கலைகளுக்கு அரிஸ்டாடில் (கி. மு. 384-322) என்ற கிரேக்க அறிஞரைப் பிதாவாகக் கொள்ளுகிறார்கள். அவ்வறிஞர் மாசிடோனியாவில் பிறந்து, ஆதென்ஸ் நகரத்திற்கு வந்து, பிளாடோ என்ற ஒரு அறிஞரிடம் மாணாக்கரானார். கி.மு. 342-ல் அலெக்சாண்டர் என்ற இளவரசனுக்கு உபாத்தியாயரானார். இவ்வலெக்ஸாண்டரே பிற்காலத்தில் புகழ்பெற்ற சக்ரவர்த்தியானவர். பிறகு கி. மு. 335-ல் ஆதென்ஸ் நகரத்திற்கு மீண்டும் வந்து பல மாணவர்களுக்குச் சகல கலைகளையும் போதித்து வந்தார். அந்நகரத்தார் ஸாக்ரடீஸ் என்ற ஞானியை முன்காலத்தில் குற்றம் சாட்டியதுபோல் அரிஸ்டாடிலையும் குற்றம் சாட்டினார்கள். அதனால் அவ்வறிஞர் சால்ஸில் நகரத்திற்குச் சென்று, அங்கு கி. மு. 322-ல் தேகவியோகமானார்.

அவ்வறிஞர் போதித்து வந்த உபந்நியாசங்களை அவருடைய மாணக்கர்கள் திரட்டி, நூல்களாக எழுதி வைத்திருக்கிறார்கள். அந்நூல்களினால், அவ்வறிஞர் சகல கலைகளிலும் வல்லவராயிருந்தார் என அறியலாம். உதாரணமாக அவர் ஆராய்ந்த பகுதிகள் மூவகைப்படும். ஒன்று, தத்துவம் (தர்க்கம், சூட்சமம், பூத இயல); இரண்டு, லௌகிகம் (நீதி, பொருளறிவு, அரசியல்); மூன்று, செயற்கை (அணி, இயல், யாப்பியல்). மேற்கூறிய மூன்று பிரிவுகளுக்குள் அக்காலத்தில் மக்கள் அறிந்த சகல ஞானமும் அடங்கியிருந்தது. அவைகளில் சூட்சமம் என்ற வகையில், சமய அறிவும் ஒரு பாகமாகப் போதிக்கப்பட்டது. கடவுள், உயிர் என்பவைகளின் இலக்கணங்கள் ஆராயப்பட்டன. பூதயியல் என்பதில்இயற்கையில்காணும் சகல ஞானங்களும் எடுத்தாளப்பட்டன. உலகப்பொருள்கள், மனிதன், பிராணிகள் முதலிய ஜீவஜந்துக்கள், பஞ்சேந்திரியங்களின் அமைப்பு முதலியவைகளெல்லாம் ஆராயப்பட்டன. நீதி இயலில் மனிதனுடைய குணங்கள் விவரிக்கப்பட்டன. அரசியலில் சட்டதிட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டன. அணியியல் யாப்பியல்களில், கல்வி முறை முழுவதும் எடுத்தாளப்பட்டது. இயல், இசை, நாடகம் என்ற மூன்றோடு சித்திரம் சிற்பம் முதலியவைகளும் ஆராயப்பட்டன. ஆகவே எல்லா ஞானங்களும் அரிஸ்டாடில் என்ற அறிஞனால் ஆராயப்பட்டு மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன.

அரிஸ்டாடிலுக்குப் பிறகு கிரேக்கர்கள், உரோமானியர்கள், அராபியர்கள், பிறகு ஐரோப்பிய தேசத்தார்கள்—எல்லோரும் அரிஸ்டாடில் சொன்ன அறிவுப் பொருள்களையே ஆராய்ந்து, அவைகளையே அடிப்படையாகக் கொண்டு அறிவியல்களை மேன்மேலும்விருத்தி செய்தார்கள். தற்போது முன்னேற்றம் அடைந்திருக்கும்படியான கணிதம், வானநூல், பூதயியல், இரசாயனம், உயிர் நூல், தாவரநூல், தாதுநூல், தத்துவம், தர்க்கம், பூவியல், சரித்திரம், பொருளியல், ஓவியம், சிற்பம், இலக்கணம் முதலிய சகல இயல்களுக்கும் அரிஸ்டாடிலின் அறிவே ஆதிகாரணமாகும். இப்போதும் இவ்வறிவு நூல்களின்சரித்திரங்களை எழுதுவோர்கள் அரிஸ்டாடில் அவற்றைப்பற்றி என்ன சொன்னார் என்று ஆரம்பித்து, தற்காலம் அவ்வறிவு அடைந்திருக்கும் முன்னேற்றம் வரையில் எழுதுவது வழக்கம்.

தமிழ் அறிவு நூல்

இவ்வாறு மேற்கு நாட்டாரின்வரலாறிருக்க, நமது தமிழ் மக்களின் விஞ்ஞான முன்னேற்றத்தை இனி

ஆராய்ந்து ஒத்திட்டுப்பார்ப்போம். அரிஸ்டாடிலைப்போல் தமிழ்நாட்டில் சகல அறிவுகளையும் ஆராய்ந்து வெளியிட்ட ஒரு பெரியார் இருந்தார், அவரே தொல்காப்பியர் என்ற பெரும் புகழ்பெற்ற பெரியார். அவர் உலக நன்மைக்காக வெளியிட்டிருக்கும் பெரு நூலுக்குத் 'தொல்காப்பியம்' என்றே பெயர். அது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இக்காலத்தார் அதற்கு இலக்கணம் என்றபெயரிட்டு, அதனை முதல் இலக்கணமாகக் கொள்ளுகிறார்கள். உண்மையில் இது வெறும் இலக்கண நூல் அல்ல. அக்காலத்தில் ஆராய்ந்திருந்த சகலஅறிவுகளையும் திரட்டி அமைத்த நூலாகும். ஆகவே அதனைத் தமிழ் அறிவு நூல் என்று பெயரிட்டால் தகுதி எனலாம்.

பொருளதிகாரம்

தொல்காப்பியம் மூன்று 'அதிகாரங்களாகப் பிரிக்கபபட்டுள்ளது. அவை எழுத்து, சொல், பொருள் எனப்பெயர் பெறும். இம் மூன்று பிரிவுகளில் உலகத்திலுள்ள சகல அறிவையும் தொல்காப்பியர் உட்படுத்தி இருக்கின்றார் என அறிய வேண்டும். எழுத்ததிகாரத்தில் எழுத்திலக்கணமேயன்றி, மொழிப்பிறப்பு, எழுத்து உற்பத்தி எழுத்தின் வடிவு, ஒலியின் தன்மை முதலான பல இயல்கள் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவதாகிய பொருளதிகாரந்தான மிகவும் சிறந்த பிரிவாகும். இதில் உலகத்தில் காணும் சகல அறிவுகளும் மூழ்த்திருக்கக் காணலாம். அகம், புறம், என இரண்டாகப்பிரித்து, அகத்திணையில் ஆண், பெண் இருவருடைய உள்ளத்துள் ஏற்படும் எண்ணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. புறத்திணையில் மற்ற வெளி விவரங்களெல்லாம் விவரிக்கப்பட்டிருக்கின்றன. நாடு, அரசு, அமைச்சு, வாணிபம், போர் முதலிய சகல இயக்கங்களும் ஆராயப்பட்டிருக்கின்றன. களவியலில் அன்பினால் ஒருவருக்கொருவர் ஏற்படும் செயல்களும், கற்பியலில் மணம் நிகழ்ந்த பின்ஏற்படும் செயல்களும் காண்கிறோம். பொருளியலில் அரசியல் திட்டம், பொருள் சேர்க்கும் வகை, வாணிபம், போர் செய்யும் முறை, மற்றும் பலவித நாட்டுப் பழக்க வழக்கங்கள் இவை எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. மெய்ப்பாட்டியலில் நாடக இலக்கணமும் நவரசங்களும் கூறப்பட்டுள்ளன. உவமை இயலில் இலக்கணமும் செய்யுளியலில் யாப்பும் கூறப்பட்டுள்ளன.

இறுதியாக மரபியலில் கூறியதில் விடுபட்ட ஞானங்கள் பல அடங்கி இருக்கின்றன. ஆண், பெண் என்ற பிரிவினை, அப்பிரிவினையை விளக்கும் சொற்கள், மக்கள் பிரிவினை உயிர்கள் ஆறு அறிவினராகப் பிரிந்திருத்தல், அவ்வுயிர்களில் விலங்கு, பறவை ஊர்வன, நீர் வாழ்வன முதலிய பிரிவுகள்; தாவரங்களில் புல், மரம் என்ற இரு பிரிவினை; படிப்பு முறையில் ஏற்படும் ஆராய்ச்சிகள் முதலியவைகள் இவ்வியலில் காணலாம்.

தொல்காப்பியர் ஆராய்ந்து வெளியிட்ட அறிவுப் பொருள்களைப் பின் வந்த தமிழர்கள் விருத்தி செய்யவில்லை. இலக்கியம், செய்யுள், அணி, இவைகளை மாத்திரம் விருத்தி செய்தார்கள். அதனால் தற்காலத் தமிழ் இலக்கியம் ஒரு உருவடைந்து சிறப்போடு நிற்கிறது. ஆனால் மற்ற அறிவியல்களாகிய பொருள் நூல்கள் எவையும் விருத்தியாகவில்லை. இக்காரணத்தினால்தான் தமிழர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையாமல் தாழ்ந்து இருக்கின்றனர். இனியாவது ஆராய்வார்களாக.

பிரிட்டனில் பசுக்கள்



பசு அங்கு பூஜிக்கப்படுவதில்லை!

செவ்வாயுலகில்

24-ம் பக்கத் தொடர்ச்சி

சொன்னார்கள். நாங்கள் கல் சுமக்காமலிருப்பது ஒன்று. கல் சுமப்பவர்களைப் பார்த்து நாங்கள் சிரிப்பது மற்றொன்று. செவ்வாயுலகின் பத்திரிகைகள் எல்லாம் எங்களைக் கேலி செய்தன. எம்மைப் பார்ப்பவர்கள் எல்லாம் விழுந்துவிழுந்தும், புரண்டு புரண்டும் சிரித்தார்கள். இதற்கிடையில் ஒருநாள்—அங்குள்ள கிழங்குகளும் கனிகளும் எங்களுக்கு ஒத்துக் கொள்ளாததால் நாங்கள் இங்கிருந்து கொண்டுபோன அரிசியைச் சமைத்துச் சாபபிட எண்ணிச் சமைக்க ஆரம்பித்தோம். எங்களில் ஒருவர் பிராமணர், அவர் சமையல் பண்ணத் தனியிடத்தில் மறைப்புத்திரை கட்டினார். மற்றொருவர் வேளாளர். அவர் ஒருபக்கம் மறைவாகச் சமைத்தார். முகமதியர் ஒருவர்—அவர் ஒருபுறம் சமையல். கிறிஸ்தவர் ஒருவர் அவர் ஒருபுறம். நாயுடு ஒருவர் அவர் மற்றொருபுறம். இன்னொருவர் ஆதித்திராவிடர் அவர் ஒருபுறம். அனைவரும் சமையல்களை முடித்துவிட்டோம். பிராம்மணர், சைவர், நாயுடு மூவரும் வாழையிலையைத்தேடிக்கொண்டு வெளியிற் சென்றார்கள். மற்றவர் உண்கலங்களை மண்கொண்டு துலக்கிக்கொண்டிருந்தார்கள். அங்குள்ள ஓர் "வீட்டுமிருகம்" குணத்தில்பூனையையும் உருவத்தில் குரங்கையும் பருமனில் ஒரு பலாப்பழத்தையும் ஒத்தது. அது ஆதித்திராவிடர் சமைத்து வைத்திருந்த சோற்றைப், பாத்திரத்தோடு தூக்கிப் போய்ப் பிராமணர் சமையலோடு வைத்து விட்டது. பிராமணர் வைத்திருந்த ரசத்தைமாத்திரம கிறிஸ்தவர் சமையலுடன் கொண்டுபோய் வைத்தது. பிராமணர் வந்து பார்த்தார். இங்கு வந்தும் ஆதித்திராவிடன் தன் போக்கிரித்தனத்தை விடவில்லையா என்றார். ஆதித்திராவிட நண்பருக்கு இது பொறுக்க முடியவில்லை. பிராமணர் கன்னம் கிழிந்து போயிற்று.மீதியுள்ளநாங்கள் இருகட்சியிலும் சேராதிருக்க முடியவில்லை. நடந்தது சண்டை; சிரித்தது செவ்வாயுலகு! எம்மைச் சுற்றிலும் செவ்வாயுலக மக்கள், மற்றவரும் எங்கள் கோலத்தைக்காண வந்துகொண்டிருந்தார்கள். இது தெரியாதிருப்பவர்களும் அழைக்கப்பட்டனர். எங்கள் கைச்சண்டை சோர்ந்துபோனபின் வாய்ச்சண்டை ஆரம்பித்தது. இந்த இரண்டாவது அத்தியாயம் செவ்வாயுலகத்தைச்சிரிப்புலகமாக்கி விட்டது. இவர்கள் சிரிப்பதற்காக நாங்கள் கோபிப்பதென்றால் எங்கள் சண்டையில் எமக்குள்ள ஊக்கத்தையல்லவா குறைத்துக் கொள்ள வேண்டும்?

செவ்வாயுலக மனிதர் சிலர் விலக்கினார்கள். அவர்கள் எம்மைவிலக்காவிட்டாலும் அதற்குமேல் நாங்கள் சண்டை போட்டிருக்க முடியாது. கைச் சண்டையாலும் வாய்ச் சண்டையாலும் சோர்ந்துபோனோம். பிராமணர் — கோபமாய்ச் செவ்வாய் உலக மக்களைப் பார்த்து 'எனக்கு மாத்திரம் ஒரு தனி வீடு கிடைக்குமா?' என்றார். செவ்வாய் உலகினர் ஏன் என்னகாரணம்என்று விவரமாய்ச் சொல்லும்படி வேண்டினார்கள். நாங்கள் அனைவரும் விவரத்தைச் சொன்னோம். பிராமணன் உயர்வு-அவன் கடவுளின் முகத்தில் பிறந்தவன். ஆதித்திராவிடன் மட்டம்-தொட்டால் தீட்டு............இந்த வரிசையில் எங்கள் புராணம் இதிகாசம் சாத்திரங்கள் வேதங்கள் சமயங்கள் எல்லாவற்றையும் சொன்னோம். ஆகக்கூடிக் கடவுள் ஏற்பாடு தானே என்றுசெவ்வாயுலகினர் கேட்டனர். ஆம் ஆம் என்றுசொன்னோம்.

செவ்வாயுலகினர் எங்களைப்பார்த்துச்சொல்லுகிறார்கள்.

எங்கள் கடவுளின் ஏற்பாடு மிக்க நல்லதாயிருக்கிறது. நாங்கள்தலையில் கல்லைத்தூக்கி வைத்துக்கொள்வது மெய்தான். அந்தோ! நீங்கள்உங்கள் தலையில் தூக்கிவைத்துள்ள கற்கள் மிக்க ஆபத்தானவை. சண்டை விளைப்பவை. எங்கள் கற்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆயினும்நாங்கள் போகுமிடத்திற்கெல்லாம் எம் தலையோடு அக்கற்கள் வருகின்றன. உங்கள் தலையில் நீங்கள் சுமக்கும் கற்கள் கண்ணுக்குத் தெரியவில்லை; ஆயினும் அவைகள் உங்களை ஆகாத வழியிலெல்லாம் செலுத்திக்கைகால் களையெல்லாம் முறியடிக்கின்றன.

மேலும் செவ்வாயுலகினர் எமக்குச் சொல்லியவை:—

ஓ! பூலோகத்தார்களே! உங்கள் தலையில்நீங்கள் சுமந்துள்ள ஜாதி ஏற்பாடு மதஏற்பாடு முதலியகடவுள்ஏற்பாடு என்னும் பாராங்கற்கள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அச்சுமையால் நீங்கள் சண்டையிட்டுப்பிரிவுபட்டிருக்கிற மாதிரியைப்பார்த்தோம். நாங்கள் இரக்கங்கொள்ளுகிறோம். அக்-கண்ணுக்குத்தெரியாத சுமையை இறக்கிவையுங்கள். இறக்கிப்போடாதவரைக்கும் நீங்கள் உங்கள் பூமியை படைவது எப்படி?

*

மூலகாரணம்

20-ம் பக்கத் தொடர்ச்சி

தது—அறுபது ரூபா அபிஷேகம் செய்த பிறகுதான் ஆவேசம் நின்றது—அதற்கு முன் மாதத்திலே,.....
................"

"ஆறுயிரத்திலே, வைர மாலை வாங்கித் தந்தீர்—ஆனைக் குட்டி இரண்டு வாங்கிக் கொடுத்தீர், எங்க அப்பா ஆத்துக்கு அனுப்பிவைத்தேன்—எவ்வளவு கொட்டிக் கொடுத்து அலுத்துப் போயிருக்கிர்-பாபம் — குறை இருக்கலாமா, மனதிலே........"

"ஆறுயிரத்திலே மாலைவேணுமா? — அல்லாடி ஆத்து மாட்டுப் பெண்ணேடி நீ........."

"பேசும்—பேசும்-வேறே எங்கே பேசப் போறீர் — யார் கேட்டிண்டிருப்பா, உமம பிதற்றலை..........."

* * *

இதற்குமேல், உரையாடல் இல்லை—கரம் விளையாட ஆரம்பித்தது — கண்ணீர் சிந்தவுமாயிற்று' கமலாம்பிகா தேவிக்கும் அவன் கணவன் கணபதிசுப்பிரமணியத்துக்கும், சச்சரவு, அது 'அடிதடி' அளவுக்கு முற்றியதற்கும், காரணம் அந்த நேரத்தில் அவர்களுக்குள் எழுந்த விவாதத்தினால் அல்ல—இருவர் மனதிலும், முன்பிருந்து மூண்டுகொண்டிருந்த, கோபத்தால் —அந்தக் கோபமும், இருவருக்குள் நடைபெற்ற சச்சரவுகளால் கூட அல்ல — கணபதிசுப்பிரமணியத்துக்கு ஆபிசில, மானேஜர், 'காரசாரமான டோஸ்' கொடுத்தார்—கணக்குத் தவறாக இருந்ததற்காக. கமலாம்பிகைக்கும் கனகாவுக்கும் ஒரு தகராறு, கண்ணன் கோயில் பிரகாரத்திலே, அதிலே விளைந்த வேதனை, கமலாம்பிகைக்குக் கோபத்தை மூட்டிவிட்டது., கணபதியும் ஆபீஸ்கதையைக் கமலத்

(29-ம் பக்கம் பார்க்க)

நாட்டு நிலை

★ சுமங்கலி பூஜை ★

பாக்கியநாதன்	ஒருபணக்கேடி.
ஆண்டாள்	அவன் மனைவி
சங்கரலிங்கம்	ஒரு ஏழைப்பார்ப்பனர்
ஏகாம்பரம்	ஏழை (ஆனவன்)
எல்லம்மா	அவன் மனைவி

பிராஸ்தாரவாள்! ஒருவார காலமாத் தங்களைக் காணவேணும்னு....

வந்து வந்து போறீங்களா? நான் என்னசெய்யட்டும்! வேலை ஓயவில்லை.

ஆமாம்! காடுகழனியைக்கவனிக்க வேணும், கடைகண்ணியைப் பார்க்கவேணும்........

அடேடே! அந்த வேலை எல்லாம் அல்லப்பா! ஏதுவோ, பகவான் நமக்கு அந்தவிதமான வேலை எல்லாம வைக்கவில்லை. சத்திய சந்தனான ஒரு மானேஜர் இருக்கிறான், அந்த வேலைகளைக் கவனித்துக் கொள்ள. புதிசா ஒரு சங்கம் வைத்திருக்கிறோமல்லவா........?

எந்தச் சங்கம்....?

அதுதான்யா, பசுக்கள் ரொம்ப வயதாகிவிட்டா, இந்தப் பாழுஞ் ஜனங்கள், அடிமாட்டுக்கு விற்றுவிடுகிறார்களல்லவா, அந்தப் பாபத்தைப்போக்குவதற்காக ஒருபுதுச்சங்கம் வைத்திருக்கிறோம், கோமாதா சங்கம்னு....

சரிங்க, சரிங்க, கேள்விப்பட்டேன்—சிலாக்கியமான காரியம்—செய்யவேண்டிய சேவை....

ஏதோ நம்மாலானதைச் செய்வோம்னு, சங்கத்துக்கு நானே தலைவனா இருக்கவும் ஒப்புக்கொண்டேன்.

அப்படிங்களா! இனிச்சங்கத்துக்கு என்னங்க குறை!

அந்தக் காரியமாத்தான் ஒருவார காலமா, அலைச்சல்; இந்த மாதத்துக்குள்ளே, இலட்சரூபா, சேர்த்தாக வேணும்....

இலட்சரூபாய்ங்களா....ஏனுங்க....

பைத்யக்கார மனுஷனய்யா நீர்! இலட்சரூபான்னு நான் சொன்னேன் — நம்ம நாவலூரத்து நாட்டாண்மைக்காரர், நாலு இலட்சமில்லாமல், இந்தக்காரியம் ஆகாதுன்னு, இன்னமும் பிடிவாதமாப் பேசறார்!! நீ, இலட்சம்னு சொன்னஉடனேயே மூர்ச்சித்துப் போய்விடுகிறே ... தேவை இருக்கு. இருபது ஏக்கர் நிலம்.... ஒரே சதுரம் .... அதிலே நடுவிலே ஒருபெரிய, குளம்—படிகூடக்கிடையாது—பசுக்கள், சென்று தண்ணீர் குடிக்கிறவிதமான குளம் — மேச்சலுக்கு வசதி—இதைக் கவனித்துக் கொள்ள சில ஆட்கள்—வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை, சுமங்கலிகள் பூஜை — இவ்வளவுக்கும் சேர்த்து, இந்த ஒரு இலட்சம்.

ஓஹோ, அப்படிங்களா....சரிதாங்க....பிடிக்கும், பிடிக்கும்....

இந்த இலட்சத்துக்காக, ஒருவாரமாச் சுற்றினதிலே, அறுவதுக்குக் கை எழுத்தாச்சி, நாற்பத்திரண்டு, கையிலே வந்துவிட்டுது....

நாற்பத்தெட்டு ஆயிரம்களா?

ஆமாம்! நான் ஒரு ஆறு, போட்டிருக்கிறேன்—பணமா செய்திருக்கிற உதவி அது—ஆனால்....

உங்க சேவையை கணக்கெடுத்தா—பல பல ஆயிரம் இருக்குங்க...

அதுகூடத் தள்ளய்யா...அதுவும் நம், போகிற கதிக்கு நல்லது தேடத்தானே செய்கிறோம், சும்மாவா! நல்ல அயன்நிலம், நம்மது, சதுரம், இருபது ஏகர், திருடன் கையிலே இருந்துவாங்குவதாக இருந்தாக்கூட நாலு இலட்சத்துக்குக் குறைஞ்சு வாங்கமுடியாது—அப்படிப்பட்டநிலத்தை, கோசேவா சங்கத்துக்கு, ஐம்பதினாயிரத்துக்கு, தந்துவிட்டேன்!!

கொடுத்துவிட்டீங்களா?

ஆமாம்! அதை நான் கொடுக்கலேன்னா, எத்தனை இலட்சம் வசூலானாலும், ஒரே சதுரமான இடம் எங்கிருந்து கிடைக்கும்......

கிடைக்காதுங்க—கிடைக்காது...

நிலம் கிடைக்காமப் போனா, கோசேவா சங்கம் என்ன செய்யறது, பசுங்களை மேயவிட...

முடியாதுங்க, முடியாது....

அதனாலேதான், நமக்குக் கொஞ்சம் பொருள் நஷ்டமானாலும் பரவாயில்லைன்னு, நிலத்தை சங்கத்துக்குக் கொடுத்துவிட்டேன்...நம்ம மானேஜருக்குக் கூடக் கொஞ்சம் மனசுக்குக் கஷ்டம்—அவர், அந்தச் சதுரத்தை, பெஷின் கிஷின் போட்டு, சோளக்காடு ஆக்கிவிடவேணும்னு, பிளான், போட்டாரு. போப்பா, ஏதோ, பகவான் நமக்குக் கொடுத்திருக்கிறது போதும், இந்தநிலத்தை ஒருபுண்ய காரியத்துக்குத்தான் தருவோமேன்னு சொல்லி, அவனைச் சமாதானப்படுத்தினேன்...

சரிங்க...நான் வந்துங்க...

நீயும் இந்தப் புண்ய காரியத்துக்கு, உன்னால் ஆன சகாயத்தைச் செய்யவேணும்....

ஆகட்டுங்க, ஆகட்டுங்க....ஆனா என்னாலே என்னங்க ஆகும்....!

அப்படிச் சொல்லாதே....நல்ல மனசோடு, ஒருசிறு துரும்பு கொடுத்தாலும், தங்கக் கட்டி, அதுவேயாகும்....

ஆமாங்க, ஆமாம்....

நீ, அதிகமான சிரமம்—ஒன்றும் படவேண்டாம் - இந்தச் சுமங்கலி பூஜை ஏற்பாட்டை நீ கவனித்துக் கொள்ளு....

அது என்ன பூஜைங்க....

பைத்யக்காரா! இந்தக் காரியத்திலே, சிரேஷ்டமானது, இந்தச்சுமங்கலி பூஜைதான்-பசுக்களை, சாக

விடாமலும், அடிமாட்டுக்கு அனுப்பாமலும், சங்கத்திலே வைத்துக் காப்பாற்றுகிறோமா — ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், நம்ம ஊரிலே உள்ள சுமங்கலிகளெல்லாம், சங்கத்திடலுக்கு வந்து, கோபூஜை செய்யறது-கோமாதா பூஜைக்குள்ள பலன், வேறே எதற்குமில்லையாது— புத்ரசம்பத்து—செல்வ விருத்தி- ஆரோக்கிய விருத்தி-எல்லா அனுக்கிரகமும் ஏற்படும்.

சரிங்க....பூஜைக்குச் சாமான் என்னென்னங்க....

பூஜைக்குச் சாமான்னு ஒருகட்டு திட்டமா! பக்திதான் முக்கியம். ஏதோ கொஞ்சம் கற்பூரம், அகத்திக்கீரைக்கட்டு, குங்குமம், மஞ்சள், இவைகள்தான்....

ஆமாம், பசுவுக்கு, அகத்திக்கீரைத் தானம் கொடுக்கறது முக்கியமானதுன்னுதான் சொல்லுவாங்க.......

பசுவுக்கு அகத்திக்கீரை தானம் கொடுப்பது, காசிப்பிருமணருக்குச் சொர்ணதானம் கொடுக்கிறதுக்குச் சமானம்னு, நாலு வேதத்திலே, எதிலேயோ ஒன்றிலே, சொல்லி இருக்கிறதாம்.

இருக்கும்ங்க........

அதனாலே, நீ, நம்ம ஊர் சுமங்கலிகளுக்கு, இந்த விசேஷத்தை எடுத்துச்சொல்லி, பூஜைக்கு ஏற்பாடு செய்தா போதும், நாங்கள் ஆயிரமாயிரமாகப் பணம் கொடுக்கிறதுக்குக் கிடைக்கிற புண்யத்தை விட அதிகமான புண்யம், உனக்குக் கிடைக்கும்.

உண்மைதானுங்க............

நல்ல சமயத்திலே, வந்து சேர்ந்தே —நாளையிலே இருந்து ஒரு நாலு நாளைக்கு இந்தக் காரியத்தைப்பாரு ....அடே! அப்பா, நாராயணா! நாராயணா!............

நான் வந்ததுங்க, இன்னொரு விஷயமா........

வந்திருப்பே ....இருக்கட்டும் நாலுநாள் பொறுத்துப்பேசிக்கொள்வமே........

கொஞ்சம் அவசரம்........

இருக்கும்........ஆனா, இப்ப, என் மனசு பூராவும், கோமாதாசங்க விஷயத்திலேயே மூழ்கிக்கிடக்குது. நிச்சயமாச் சொல்கிறேன் கனவிலேயும் கனவிவேயுங்கூட, பசுக்கூட்டமே தான் என் கண்ணுக்குத்தெரியுது........

அதுக்கென்னங்க....நீங்க எப்ப தீர்மானித்து விட்டீங்களோ, காரியம், முடியாமப் போகுதுங்களா....

அப்படிச் சொல்லிவிடலாமா? இன்னும், வசூல்வேலையே முடியவில்லை பாரு........

வசூல் ஆகிவிடும்ங்க........

ஆகும்....ஆனா, வசூல் வேலை முடிந்தபிறகுதானே, எனக்கு மனசு நிம்மதியாகும்-எந்தக்காரியத்தையும் கவனிக்கமுடியும்.

ஆமாங்க, எதுக்கும் மன நிம்மதி வேணுங்க.

இதோபாரேன், உன்னிடம்பேசிக் கொண்டே இருக்கிறனே தவிர, இப்ப நான் உண்மையா எங்கே இருக்கிறேன் தெரியுமா? உருத்திர கோடீஸ்வரமுதலியார் பங்களாவிலே இருக்கிறேன்—அவர் ராத்திரி எட்டுக்குமேலே பணம்தருகிறேன்னு சொன்னார் — நம்மப்பய நாராயணனை அனுப்பவேணும்—அதுக்காகத்தான் கூப்பிட்டேன்—அவன் வேறே ஏதோ வேலையா இருப்பான் போலிருக்கு—நான் தோட்டத்துப் பக்கம்போய்ப்பார்த்து, அந்தப்பயலைத் தூரத்தணும் — வரட்டுமா—

ஒருவிஷயம் பேசலாம்னு........

நான்தான் சொன்னேனே, இப்ப எந்தப் பேச்சும் என்காதிலே ஏறாதுன்னு....நாலுநாள் போகட்டும்— நான் போட்டிருக்கிறபிளான் நடக்கட்டும், பிறகு நிம்மதியாப் பேசுவோம்........

அப்ப, நாலுநாள் பொறுத்துவரச் சொல்றீங்களா?

என்னப்பா இது, தவணையா சொல்கிறேன்-ஒவ்வொருநாளும்வா, வந்துபோ, நான் சொன்ன சுமங்கலி பூஜைவிஷயத்தை எந்த அளவிலே செய்து இருக்குது என்பதைச் சொல்லு........

ஆகட்டுங்க....அந்தக் காரியத்தை, இப்ப இருந்தே துவக்கிடமாட்டேனுங்களா....

செய்—பிறகு, நம்மவிவகாரத்தை எல்லாம் பார்த்துக் கொள்ளலாம். போய்வா. டே! நாராயணா! நாராயணா! சமயா சந்தர்ப்பம் தெரியாத முட்டாப்பய! எப்படிப்பட்ட புண்ய காரியமாக நான் பாடுபடறேன் என்கிற எண்ணமே கிடையாது, இந்தப் பயலுக்கு. சோறு, சுகம், இரண்டுதான் தேடறான்.

அப்ப, நான் வருகிறேனுங்க....

செய்யப்பா! சுமங்கலி பூஜை விஷயமாக நான் வேறுயாரிடமும் சொல்லத் தேவையில்லையேல்லோ....

வேண்டாமுங்க....நான்கவனித்துக் கொள்கிறேன்....

நம்பலாமா?

ஆஹா!தாராளமாக! நான்வருகிறேங்க....

செய்யப்பா, செய், போய், வா.

* * *

ஆமாம், பார் அந்தத் தொணதொணப்பு....

அவனு, போனமாதம், ஒரு தென்னந்தோப்பு வாங்கினேமே, கவனமில்லே, ஆண்டானு.

ஆமாம்....

அவன்தான் அதை நமக்கு வித்தவன்.

இப்ப, எதை விற்கவந்தான்?

ஆள்தான் மிச்சம், விற்கிறதுக்கு. கடனுக்கு அடிபோட்டுப் பார்த்தான்.

எனக்கும் அப்படித்தான் தெரிஞ்சுது—முக்கியமான விஷயம், அவசரமான விஷயம்னு அவன் இழுக்கிறபோதே, தெரிஞ்சுது.

அதனாலேதான், ஆசாமியை வேறே பக்கமாகவே திருப்பி விட்டு விட்டேன்.

ஆமா, நிஜமாத்தானா, சுமங்கலி பூஜை, கோமாதா, இதெல்லாம்.

ஆமாம், நிஜமாத்தான்....இப்பத்தான், பணத்தைவாங்கிக்கொண்டே வந்தேன்........நம்ம பனங் காட்டுத் தோப்பைத் கொடுத்துவிட்டேன்.... பத்தாயிரத்துக்குக் கூடப் போகாதுன்னு, உன் மகன், மூக்காலே அழுதானே, அந்தக் காடுதான், சரியான விலைக்குப் போச்சி........

அதுதானா, சதுரம், அயன், அப்படி இப்படின்னு, நீங்க சொன்னது,

ஆமாம்........எங்கே, நாராயணன்,

ஏன் அவனைத் துழாவறீங்க........?

அவனுக்கு ஒரு சொக்கி வந்திருக்குது............

என்ன சொக்கி, அந்த விடியா மூஞ்சிக்கு....?

அவளு விடியாமூஞ்சி! பைத்யமே, பெரிய மண்டிக்கடை வியாபாரி யாகப் போருண்டி, உன் தம்பி!

மண்டிக் கடையா?

ஆமாம்! கோமாதா சங்கத்திலே தான், வெள்ளிக்கிழமை வெள்ளிக் கிழமை, சுமங்கலி பூஜை நடக்கப் போகுதே........ஊரிலே இருக்கிற கட்டுக் கழுத்திகளெல்லாம், காசு எடுத்துக்கொண்டு, வருவாங்க ளேல்லோ, தேங்கா, பழம், கற்பூரம், பூமாலே, அகத்திக்கீரை, கொள்ளு, தவுடு, இப்படிப் பல சாமான்கள் தேவைப்படும். வேறே எவனுவது மோப்பம் பிடித்துக்கொண்டு வருவதற்கு முன்னே, நம்ம நாராயணனை, ஒரு கடை அங்கே போட்டுக் கொண்டு உட்காரச் சொன்னு, வாரத்துக்கு ஒரு முன்னூறுக்குக் குறையாம, வியாபாரம் ஆகும்........

நல்ல யோசனைதானுங்க........அவனும் வீணு சுத்திவந்து சுத்திவந்து கெட்டுப் போருன்........

கடையிலே உட்கார்ந்து, பெட்டியிலே, பணத்தைப் போட ஆரம்பிச்சா, அவனும் தங்கமாயிடுவாண்டி பைத்யமே! லட்சுமியைப் பூஜை செய்தா, சரஸ்வதி, தன்னுலே வருகிறு........

நம்ம ஐயர்கூட, போன வாரம் சொன்னுரு, நாராயணனுக்கு கிரஹம் போருததா இருக்குன்னு........

கிடக்குது, அவன் பேச்சு. மறந்து போச்சி—நம்ம சங்கரலிங்க ஐயரைத் தான், சுமங்கலி பூஜையைக் கவனித்துக்கொள்ளச் சொல்லப்போறேன் —நான் மறந்து விட்டாக்கூட, நீ ஒரு வார்த்தை சொல்லிவிடு........

ஆகட்டும்.......அடே!....

அவரேவந்துவிட்டாரே!...வாங்க, சாமி, வாங்க...நூறுயுசுங்க உங்களுக்கு...

எம்மா! எதுக்கு நூறு ஆயுசு இருக்கவேணும், தரித்திரம் பிடிங்கித் தின்கறது...

அழாதேய்யா, உனக்காகத்தான் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறனே...

எனக்காக, என்ன ஏற்பாடு? நீங்க பார்த்து, என்ன வழி காட்டினுலும் சரி...செய்யச் சித்தமா இருக்கேன்.

நல்லவழிதாங்க சாமி...கவலைப் படாதிங்க...

ஐயரே! கோமாதா பூஜைன்னு, இருக்கே தெரியுமோ?

ஆஹா, தெரியும். மொத்தம் அறுபத்தெட்டு சுலோகம்...

கணக்குக்கிடக்கட்டுமய்யா-பூஜை செய்கிற விதம், பூஜா பலன்,— இதை எல்லாம், சுத்தமாக எழுதித் தர முடியுமா உன்னுலே...

எனக்குச் சொல்லத்தான் தெரியும் நன்னு—சமஸ்கிருதச் சுலோகமிருக்கு—பூஜா பலன், மகா விசேஷம்—

சரி—இதை நீ சொல்லி — எந்தெந்த யுகத்திலே, யாரார் இந்தப் பூஜை செய்து பலன் பெற்றிருக்கிருங்க என்கிற புண்ய கதைகளையும் சோத்து, உம்ம மகனை விட்டு, ஒரு பத்துப் பக்கம் எழுதச் சொல்லுங்க ...ஆமாம், உம்ம, மகன், எங்கே இப்ப வேலை பார்க்கிருன்...

அந்த மண்டு, இப்ப, யாரோ ஒரு மரக்காயரிடம் கணக்கு எழுதருன்.

என்ன வியாபாரமாம்?

தோல் கிடங்கு!

கிடக்குது — அவன்கூட இனி அந்த வேலைக்குப் போகவேண்டாம். உமக்கு ஒத்தாசையாவே, இருக்கட்டும்—இரண்டு பேருமாச் சேர்ந்தே தயாரித்துக் கொடுங்க—ஒரு பத்தாயிரம் கோபீசு போட்டுக் கொடுக்கலாம், கோபூஜை விஷயமா. அதே விஷயத்துக்காகவே ஒரு சங்கம் ஆரம்பிச்சிருக்கிறேம் — வெள்ளிக் கிழமை வெள்ளிக்கிழமை சுமங்கலி பூஜை-நீர்தான்யா, குருக்கள் — ஒரு சின்னக் கோயில் கட்டிவிடுகிறேன், பார்த்துக் கொள்ளும்...

ஆஹா! சிலாக்கியமான ஏற்பாடு, மகா புண்யம்...

புண்யம் எனக்கு இருக்கட்டும், புழைப்பு உனக்குக் கிடைக்கட்டுமே!

ஏதோ, உங்க தயவுதான்...வருமானம், சாமான்யமா இராதய்யா, சுமங்கலி பூஜை, பெண்களா வந்து சேருவாங்க — உண்டி வைத்தா போதும்....

எப்படிச் செய்யச் சொல்கிறிங்களோ, அப்படி.................

மாதச்செலவுக்கு, பணம் நான் தந்துவிடுகிறேன் — உண்டிப்பணம், கூடுதலா கிடைச்சா, ஏதோ உனக்கும் உண்டு........என்சுபாவம் உனக்குத்தெரிந்ததுதான்............கொஞ்சமாத்தான் சொல்வேன், கொடுப்பது அப்படி இராது............

நான் ஒரு வார்த்தைகூட மறுத்துப்பேசுபவனு! நீங்கபார்த்துச் செய்கிற ஏற்பாட்டை, ஒழுங்கா, பக்தி பூர்வமாச் செய்துண்டு வருகிறேன்.

செய்! இன்னும் ஒரு மாதத்திலே தயாராகும், கோயில்.

நோடீஸ், அதற்குள்ளே நாளைக் காலையிலே கொண்டுவந்து விடறேன் —அபூர்வமான புண்யகதைகளிருக்கு, கோ பூஜை விஷயமாக........

சரி, அப்ப, போயிட்டு வாரும்.

போயிட்டு வருகிறேன் — என் கஷ்டகாலம் இன்றேடு தீர்ந்தது — அம்மா உன்னுலேதான்—

ஆண்டவனிருக்கானுங்க சாமி, நம்மாலே, என்ன இருக்கு!

* * *

என்னங்க, முகத்தைத் தொங்க போட்டுக்கிட்டு வாரிங்க........

என்னத்தைச் செய்ய.

ஏன், கடனு ஒரு இருநூறு ரூபாவா, தரமுடியாதுன்னுசொல்லி விட்டான் அந்தப்பாவி!

அவனேண்டி பாவியாகருன்! நான் பாவி—நீ பாவி—நம்மாட்டம் இல்லாதவங்களெல்லாரும் பாவிங்களாத்தான் இருக்கிறேம் — நம்ம எழுத்து அது — அவன் புண்யாத்மாவாத்தான் இருக்கிறுன் — புண்யத்தைத்தேடருன், அவனுக்கு அது தன்னுலே வந்து சேரவும் செய்யுது —புண்யம்கூட, வீடுவாசல், சொத்து சுகம் பார்த்துத்தான்போய் நுழையுது.

என்னங்க இது, புரியாததெல்லாம் பேசறிங்க...ஆயாசமா இருக்குங்களா?

புரியாமலென்ன! நல்லாப் புரிஞ்சுது—கேட்கத்தான் தைரியமில்லை-தைரியம எப்படி இருக்கும், பணம் இல்லை கையிலே, வழியில்லே பிழைக்க. புளுகிருன், மள மளன்னு கூசாமப்படிக்கு.

நிறுத்தி நிதானமாச் சொல்லுங்க. இளைக்கதை இல்லாமே!

பணம் கேட்போம் கடனு — ஏதோ, நம்ம தோப்புத்துரவுஎல்லாம் வித்தமே, இந்தச் சகாயம் கூடவா செய்யமாட்டானுன்னு போனேன். என்னை அந்த விஷயமாப் பேசவே விடலெ...

உனக்குத்தான், வாய் குளறுமே முக்கியமான சமயத்திலே...

ஓ

"வயித்தை எரியுதுடி எல்லம்மா! கடன் கேட்கப்போனா, என்னை உட்காரவைச்சிகிட்டு, கதைபேசறான்"

"என்ன கதை?"

"என்ன கதை! இவன் செய்கிற சூதுவாதெல்லாம்தான், என்னமோ பசுமாட்டுக்களைக் காப்பாத்த சங்கமாம், அதுக்குப் பணம் வசூல் செய்கிறானாம் லட்சரூபா, அந்தப்பெருமையைச் சொல்லிவிட்டு ஒரு பனங்காடு உண்டு இவனுக்கு, ராத்திரியிலே நரி ஊளையிடும், அப்படிப்பட்ட இடத்தை, ஐம்பதாயிரத்துக்கு, விற்றுவிட்டானாம் —இந்தச் சங்கத்துக்கு"

"பனங்காடு, ஐம்பதாயிரத்துக்கு வித்தானா? நம்மதென்னந்தோப்பு?"

"நாம்ப என்னடி செய்யலாம்."

"யாரு அவங்க சங்கத்துக் காரரு?"

"யாரு! இவனேதான் அதுவும்."

"என்னது இது. புரியலையே"

"ஊர் முழுவதுக்கும்தான் புரியலே. இதோபாரு எல்லம்மா, அவன் செய்த வேலையை. ஒரு பத்துப் பேரைப்பிடிச்சி, கோமாதா சங்கமன்னு பேர்வைச்சி இலட்ச ரூபா தர்மம் வசூல் செய்கிறான் கிழமான பசுவுங்களைக் காப்பாத்த. ஊரிலே ஒருபெரியபணக்காரன்போய், புண்ய காரியம்னு சொல்லி, தர்மம்கேட்டா யார், தரமாட்டேன்னு சொல்வாங்க. பணம் குவியுது. இந்தச்சங்கத்துக்கு ஒருபெரிய இடம் வேணும், பசுவுங்களை மேயவிடன்னு யோசனை சொல்லறான், அந்தமாதிரி இடம், என் பனந்தோப்பு, அது மூணு நாலு இலட்சம் விலை போகும், இருந்தாலும் புண்யகாரியத்துக்காக ஐம்பதாயிரத்துக்குத் தருகிறேன்னு சொல்லி ஏமாத்தி, வசூலான பணத்தை, 'சுவாஹா' செய்யறான்."

"அடப்பாவி!"

"நீ சொல்லறே பாவின்னு; புண்யமல்லடி தேடறதா அவன் சொல்லிறான்—ஊரும் நம்புது. அந்தக்கதையைச்சொல்லி என்வாயைத் திறக்க விடாமத்திணற அடிச்சி, நொந்து போய் அவனிடம் உதவி கேட்கப் போன எனக்கு, வேலையும் வைத்திருக்கிறாண்டி"

"வேலையாமா, இந்தப்பாவிக்கா செய்யணுமாம்!"

"அவன் ஏன் தனக்குன்னு சொல்லறான். புண்யம் செய்யச் சொல்லிறான் என்னை, வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை, சுமங்கலிபூஜை செய்யணுமாம், பனங்காட்டிலே—அதுக்கு ஊரிலே இருக்கிற பெண்டுகளை எல்லாம், படைதிரட்டிக் கொண்டு வாடா என்கிறான்."

"யாரை, உன்னையா?"

"ஆமாம். நான் போனது கடன் கேட்க—இவன் இந்த வேலைவைக்கிறான். சரிடாப்பான்னு ஒத்துகிட்டேன். பிற்பாடு, நம்ம கஷ்டத்தைச் சொல்லுவோம்னு பேச்சை எடுத்தா அவன் சொல்லறான்; "ஏகாம்பரம்! இந்தச் சங்கத்து வேலை முடிகிற வரைக்கும், வேறே எந்தக் காரியத்தையும் கவனிக்க முடியாது—எந்தப் பேச்சும் காதிலே ஏறாது—நீ, உன்னுடைய கஷ்டத்தை எல்லாம் மூட்டைகட்டிவைத்து விட்டு, நான் சொன்ன சுமங்கலி பூஜைவேலையைக் கவனி, பிறகு உன் விஷயம் பேசலாம்னு சொல்லி, விரட்டியே விட்டான்."

"அடப் பாவி, ஏழையை இப்படி வதைக்கிறயே!"

"இதோ பார், மறுபடியும், பாவி! பாவின்னு சொல்கிறயே அவனை. அவன் புண்யமல்லடி தேடறான்...."

"தேடறான் புண்யம்! ஊர் சொத்தைத் தேடிகிட்டுத் திரிகிறான்,..."

"நீ சொன்னா யார், நம்புவாங்க. கோமாதா சங்கம் வைத்தவரு—புண்யவான்னு, ஊரே புகழப் போவுது—சுமங்கலிகளெல்லாம்கூடி வாரா வாரம் வாழ்த்தப் போறாங்க..."

"வாழ்த்தட்டும், வாழ்த்தட்டும்"

"அவன் சூது, பிறர் சொத்தை அபகரிக்கிற மோசம், எதுவும் ஜனங்க கண்ணுக்குத் தெரியப் போறதில்லை வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை சாரை சாரையாகக் கிளம்பிப் போகப் போறாங்க, சுமங்கலிங்க! ஊர், என்ன என்னும் அதைப்பார்த்தா? பத்தாயிரம்கூடப் பொறாத பனங்காட்டை அவன் ஐம்பதாயிரத்துக்கு வித்த சூது தெரியவா போகுது. பாரு, பாரு, நம்ம பாக்கியநாதரு புண்யவான், இந்தத் தர்ம காரியம் செய்திருக்கிறான்னு பேசப் போகுது! சுமங்கலி பூஜை எப்படிப்பட்ட சூதிலே இருந்து முளைச்சிருக்குன்னு யாருக்குத் தெரியப் போகுது! ஆள்குறையவா போவுது பூஜைக்கு. இவ்வளவு பேசற நீயேகூட, ஒரு நாளைக்குக் கிளம்பிவிடுவே, சுமங்கலி பூஜைக்கு!"

"சரி, எழுந்திருக்க, உண்டானதைச்சாப்பிட்டுவிட்டு, படுப்போம்!"

*

சிட்டுக்குருவி சிறைவாசம்

மாஸ்கோவிலிருந்து 1,000 மைல் தூரத்தில் உள்ள தாஜான் என்னும் நகரிலிருந்த ஓர் உயர்தர உத்தியோகஸ்தருக்கு தலைநகரிலிருந்து ஒரு தந்தி கிடைத்தது.

அதில், "உடனேசேர்க்க 17,368 ஸ்பாரோஸ்(சிட்டுக்குருவிகள்)" என்றிருந்தது.

எல்லோரும் 15 நாட்கள் கஷ்டப்பட்டு அன்ன ஆகாரமில்லாமல் அலைந்து 18000, சிட்டுக் குருவிகளைப்பிடித்தார்கள். உடனே தலைநகருக்கு "17,368 சிட்டுக்குருவிகள் சேர்க்கப்பட்டன. அவற்றை எப்பொழுது அனுப்புவது? உடனே உத்தரவு கொடுக்கவும்" என்று தந்தியடித்தார்.

தலைநகரில் இருந்தவர்களுக்கு இந்தத் தந்தியைப் பார்த்தபொழுது ஒன்றும் புரியவில்லை. சிட்டுக்குருவிகளைச் சேர்க்கும்படி உத்தரவிட்டதாக ஒருவருக்கும் நினைவில்லை. உத்தரவுகளின் நகல்களைத் திருப்பிப் பார்த்தார்கள் அதிலிருந்த உத்தரவைக் கண்டவுடன் அவர்களுக்கு வியப்பு உண்டாயிற்று. அவர்கள் "தாஜானில் நின்றிருந்த பாக்கி வரிப்பணமாகிய 17,368-ம் சேர்க்க" என்ற பொருள் கொண்டு அத்தந்தியை அனுப்பினார்கள். அதை அனுப்பியவரின் பெயர் ஸ்பாரோஸ் என்பது; அவர் தந்தியின் கடைசியில் கையொப்பமிட்டிருந்தார். தாஜான் உத்தியோகஸ்தர் எல்லாப் பதங்களையும் ஒன்று சேர்த்துப் படித்துவிட்டு, "ஸ்பாரோஸ்" என்ற பதத்திற்குச் சிட்டுக் குருவிகள் என்று அர்த்தம் செய்ததனால் விபரீதம் செய்துவிட்டார்.

இவ்வுண்மை தெரிந்தவுடன் தலைநகரில் இருந்த உத்தியோகஸ்தர்கள், "தவறு நேர்ந்துவிட்டது; அச்சிட்டுக் குருவிகள் அனைத்தையும் விட்டுவிடுக" என்று தந்தியடித்தார்கள்.

இவற்றிற்கெல்லாம் காரணமாக இருந்த ஸ்பாரோஸ் 24 மணி நேரத்திற்குள் தம் பெயரையாவது மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது தண்டனையாவது அடைய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

அவர் தமது பெயரை மாற்றிக் கொண்டார்.

மாணவர் தீர்ப்பு

—✻—

இந்தி மொழியைக் கட்டாயப் படுத்துவது தீது—நோக்கம், விளைவு எந்த நோக்கினாலும், இது, தீயதே யாகும் என்பதை எடுத்துக் காட்டி, இந்தத் திட்டம் தவறானது என்பதைத் தெரிந்திருந்தும், இதனை எதிர்க்காதிருப்பது, அறவோர், ஆண்மையாளர் செயலாகாது என்பதால், நாம், கட்டாய இந்தியை எதிர்த்து அறப்போர் நடத்தி வருகிறோம்.

ஆட்சியாளர்கள் தமக்குள்ள இருவித ஆற்றலையும்—அடக்கு முறை, பிரசார முறை—எனும் இருமுறைகளின் மூலமும், நமது முயற்சியை முறியடிக்க முயன்ற வண்ணம் உள்ளனர்.

ஆளவந்தார்களுக்கு ஆணவம் இருப்பதும், எத்தகைய எதிர்ப்பு கிளம்பினும் எதிர்த்தொழித்தாக வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதும், நோயாகிவிட்டது-அதிலும், அவர்களுக்கு இன்று கிடைத்துள்ள அதிகாரபலம், பெரியதோர் பிடிவாத குணத்தைத் தந்திருக்கிறது. கட்டுமஸ்தான தன் உடலைத் தானே கண்டு மகிழ்ந்து, களைத்துக்கொள்ளும் பயில்வான் போன்ற நிலை பெற்றுவிட்டனர். கூப்பிட்ட குரலுக்கு குண்டாந்தடிகளையும் துப்பாக்கிகளையும் தூக்கிக்கொண்டு ஓடிவர, அணிபணியாகப் போலீசும், அதற்குச் செலவிடப் பணமும், திரித்து எழுதவும், உள்ளதை மறைக்கவும் ஏடுகளும், இருக்கும்போது, ஆளும் கட்சியினருக்கு, ஆணவ நிலை பிறப்பதும், நம்மிடம், யார்தான் என்ன செய்யமுடியும் என்று கொக்கரிக்கும் குணமும், எப்படியும் எதிர்ப்பை முறியடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் பிறப்பது, சகஜம்.

ஆனால், அறப்போர் நடாத்தும் நாமோ, அத்தகைய வசதிகள் அற்றவர்கள். எந்தமக்களின் பொருட்டுப் பாடுபடுகிறோமோ, அவர்களிலேயே பலரால் எதிர்க்கப்படுபவர்கள். எனினும் நாம் தளராது அறப்போரை நடத்தி வருகிறோம்-நமது உறுதி குலையவில்லை, நம்பிக்கை தளரவில்லை, ஊக்கம் குன்றவில்லை. ஏன்? என்ன காரணம் இதற்கு? நாம்நடத்தும் அறப்போர், தூய்மையானது, நியாயமானது, நேர்மையாளர்கள் பலரும், நமது போக்கு சரி என்பதை உணர்ந்து உரைத்திருக்கிறார்கள், கல்வித்துறையில்நிபுணர்களும், மொழி வல்லுநரும், நாம் நடத்தும் மொழிப் போராட்டத்தின் அடிப்படையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், என்ற, இவைகளெல்லாம், நமக்கு, உள்ள உறுதியைத் தந்து வருகின்றன.

இந்தப்பேருதவியினால்தான், நாம், மிகப் பிடிவாதமாகத் தமது பலத்தால் நம்மை நசுக்கத் திட்டமிடும் ஆளும்கட்சியினரின் தாக்குதலைத் தாங்கும் சக்தியைப் பெற்றிருக்கிறோம்.

நிபுணர்கள், கட்டாயஇந்தித் திட்டத்தைக் கண்டித்து தமது கருத்துரையை வழங்கும்போதெல்லாம், நாம் புது உற்சாகம் பெறுகிறோம்—நாம் மேற்கொண்டுள்ள செயல், நியாயமானது, தேவையானதுஎன்ற நம்பிக்கைபலப்படுகிறது, அறப்போர் நடக்கிறது.

மும்மொழிச்சுமையினைச் சிறுவர் தாங்கார், என்று கல்வித்துறையினர் கூறும்போது, களத்திலே அடிபட்டு வரும், போர்வீரனின் புண்ணுக்கு மருந்திட்டால், அவன் பெறும் இன்பம் போன்றதோர், இன்பம், நமது மனதிலே தோன்றுகிறது, அறப்போர் நடக்கிறது.

இந்தி விஷயத்திலே, இவ்வளவு வெறி காட்டுவதும், அதைத் திணித்தே தீரவேண்டும்என்று திட்டமிடுவதும், தேவையற்றது, என்று பண்டிதநேருவே கூறும்போது, நமக்கு உற்சாகம் பிறக்காமலிருக்க முடியுமா! அறப்போர், அவர் கருத்தை அறிந்த பிறகு, தளருமா? ஆளவந்தார்களுக்கு அவர்களின் நிலை காரணமாக பலம் இருக்கிறது என்பதைத் தவிர, நியாயமோ, நிபுணர்கள் நேர்மையாளர்கள் ஆகியோரின் கருத்துரையின் மூலம் கிடைக்கும் பலமோ, இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

அறப்போர் தொடர்ந்து நடத்த, நாம், நமது உறுதியைக் காக்கும் உற்சாகத்தைப் பெற்ற வண்ணம் இருக்கிறோம். நாளாகவாக நாடாள்வோருக்கு, அவர்களிடம் உள்ள அடக்கு முறைப் பலம் தவிர வேறு நியாயம் தரும் பலம் இல்லை என்பது விளங்கி வருகிறது, நமக்கு மட்டுமல்ல—ஆள்பவர்களுக்கே அந்த விளக்கம் ஏற்பட்டவண்ணம் இருக்கிறது.

இந்தியைத் திணிப்பது இன்னின்ன காரணங்களுக்காக—அதன் பயனாக இன்னின்ன கேடுகள், தமிழர்க்கு ஏற்படும், ஆகவேதான் நாங்கள் அந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம், எதிர்க்கும் நாங்கள் இவ்விதமான இன்னல்களுக்கெல்லாம் ஆளாகிறோம், என்று, நாம் எடுத்துக் கூறுவது, மக்களின் மனதை நம் பக்கம் திருப்பிவிடுகிறது, நமது அறப்போருக்கு ஆதரவு பெருகுகிறது, அணிவகுப்புப் பலப்படுகிறது என்பதறிந்த ஆட்சியாளர்கள் அச்சத்தால் பிடிக்கப்பட்டு, உண்மை ஊருக்குள் பரவாதிருக்க வேண்டும், என்று அவர்கள் திட்டமிட்டு, தடை பல விதித்து, நமது பிரசாரத்தைத் தடுக்க வேண்டிய நிலையில் அவர்களைக் கொண்டுவந்து விட்டது.

ஏழ்மையால் ஏற்பட்ட இயலாமை ஒருபுறமிருக்க, அந்த ஏழையைக் கம்பத்திலேயும் கட்டிவைத்துவிட்டு, பிறகு, மிலார் கொண்டு அவனை அடிக்கும், காட்டுராஜாக்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம்— அந்தக் காட்டுராஜாக்களை, வீரர் என்றோ பலவான் என்றோ யாரும் கருதுவதில்லை—அடிபடும் ஏழையை வறுமை முதலில் கொட்டிற்று, வஞ்சனையால் வாட்டப்பட்டான், கம்பத்திலே கட்டப்பட்டுமிருக்கிறான், இந்நிலையில்தான் அவனை அடிக்க முடிந்தது, காட்டு ராஜாவால், என்பதை அறிவர்—அறிந்தவர் அவன் போக்கைக் கேவலமானதாகக் கருதுவரேயன்றி, பாராட்டிப் பேசார்.

திராவிடர்கழகம், அரசியலில் இடம் பெற்று, வசதியை அனுபவிக்கும் கட்சி அல்ல, அதனை எதிர்க்கும் கட்சி. ஆட்சிப்பீடத்தில் அதிகார கோலத்துடன் உள்ள கட்சி, இது மட்டும் போதாதென்று, திராவிடர் கழகத்தின் சொல்லையும் செயலையும் இருட்டடிக்கவும் திரித்துக் காட்டவும் ஏடுகளை ஏவியுள்ளனர். இவ்வளவும் போதாதென்று, கழகத்தின் பிரசாரத்தையும் தடுத்து வருகின்றனர்.

இவ்வளவும் செய்துகொண்டு, இந்தி எதிர்ப்பை நாங்கள் சட்டைசெய்யவில்லை, என்று, வீம்பும் பேசுகிறார்கள்! இதனைப் பாராட்ட, மிகமிக மட்டரகங்களால் மட்டுமே முடியும்!

அறப்போர் நடாத்தும் நாம், இந்நிலையைக் காண்கிறோம்—நமது போராட்டத்தின் உண்மையான தூய்மை அப்போது நன்கு நமக்குப் புலப்படுகிறது, புதியதோர் சக்தியும் பிறக்கிறது, அறப்போர் நடக்கிறது!

நமக்கு இந்த உரம் தருவதற்கு உதவும், பல சம்பவங்களிலே, மிக முக்கியமானது. குறிப்பிடத்தக்கது, மாணவர் உலகு, இந்திப் பிரச்னையிலே, கொண்டுள்ள போக்கும்—தந்துள்ள தீர்ப்பும்.

கட்சிமாச்சரியம்- பதவிபிடிச் சண்டை- அரசியல் வீம்பு- இவைகள் மாணவர்களுக்குத் தேவையற்றவை- அவர்களிடம் அவை அண்டவும் செய்யாது. அத்தகைய பண்பும் பருவமும் கொண்ட மாணவர்கள், தமிழகத்திலே, பல்வேறு இடங்களிலே பள்ளிக்கூடங்களிலும், அறிவுக் கழகங்களிலும், இந்திப்பிரச்னை பற்றிப் பேசியிருக்கிறார்கள் - விவாதித்து மிருக்கிறார்கள் - தீர்ப்பளித்துமிருக்கிறார்கள்.

நல்லாட்சியை விரும்பும் யாரும் பொதுவான பிரச்னைகளில், அறிவுத்துறையிலே உள்ள மாணவர்கள் கொண்டுள்ள கருத்தை அறியவும், அந்தக் கருத்துக்கு மதிப்பளிக்கவும், விரும்புவர், முன்வருவர்.

அதிலும், யாரய்யா எதிர்க்கிறார்கள் இந்தியை! ஒருசிறு கூட்டம், சு. ம. க்கள்!! என்று கேலி பேசும் ஆட்சியாளர்கள், மாணவர்களின் மனப்போக்கு, இந்தப் பிரச்னை சம்பந்தமாக எப்படி இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டாமா! கவனித்தனரா!. இல்லை. கவனிப்பரா? சந்தேகம்!

அவர்களுக்கு, இவைகளைக் கவனிக்க நேரம் ஏது—என்று கூறுவார் சிலருண்டு, அந்தக் குறையைத் தீர்த்துவைக்க, அறப்போர் நடாத்தும் நமது போக்குக்கு அரண்போல் மாணவரின் கருத்து அமைந்திருப்பதை களிப்புடனும், பெருமையுடனும், எடுத்துக்காட்டுகிறோம்.

பல ஊர்களிலே, மாணவர்கள் நடத்திய கூட்டங்களிலும், கட்டாய இந்தி கூடாது—சென்னை சர்க்காரின் திட்டம் ஆகாது—என்றே தீர்ப்புக் கிடைத்திருக்கிறது—வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு.

மாணவர்கள் நடத்திய கூட்டம், அரசியல் கூட்டங்களல்ல—கட்சிப் பிரசாரக் கூட்டங்களல்ல-பிறர் தூண்டுதல் செய்ய—வற்புறுத்த! மாணவர்கள், அளித்திருக்கிறார்கள் தீர்ப்பு!! இந்தி கூடாது என்று தீர்ப்பு! மதிவழி நடக்க விரும்பும் ஆளவந்தார்கள், ஏன், மாணவர் தந்துள்ள தீர்ப்பை மதித்துநடக்க முன்வரக்கூடாது, என்று கேட்கிறோம்.

அந்தக் கூட்டங்களில், பெரியாரோ அவர்தம் சீடர்களோ கலந்துகொள்ளவில்லை--எனினும், கிடைத்துள்ள தீர்ப்பு, இந்திக்கு எதிராகத்தான்! எப்படி முடிந்தது? என் சிந்திக்கக்கூடாது ஆட்சியாளர்கள்?

23—7—48

தாராபுரம் மெத்தாடிஸ்ட்மிஷன் போதனாமுறை பள்ளியில் நடைபெற்ற சொற்போர்க் கூட்டத்தில், இந்தி வேண்டாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

* * *

27—9—48

திருமங்கலம், பி. கே. என் உயர்நிலைப்பள்ளியில் திருவள்ளுவர் தமிழ்ப் பேரவையில், தமிழ்ப்புலவர் கூத்தப்பர் தலைமையில் நடந்தசொற்போர்க்கூட்டத்தில, 12 மாணவர்கள் இந்திவேண்டும் என்றும் 249 மாணவர்கள் இந்தி வேண்டாமென்றும் தீர்ப்பளித்தனர்.

* * *

8—8—48

சென்னை கிருத்தவக்கல்லூரி உயர்நிலைப்பள்ளி, திருவள்ளுவர் தமிழ் மாணவர்கழகத்தில், இந்திவேண்டும் என மூன்று மாணவர்கள், மற்றப் பெருந்திரளான மாணவர்கள் யாவரும் இந்தி வேண்டாம் என்றும், தீர்ப்பளித்தனர்.

* * *

16—8—48

திருச்சி, தூய சூசையப்பர் கல்லூரித்தமிழ்ப்பேரவையின் கூட்டம், லாலிமண்டபத்தில் நடைபெற்றது- இந்தியை எதிர்த்து 547 மாணவரும், 49 பேர் ஆதரித்தும் ஓட்டளித்தனர். பேராசிரியர்கள் ரம்போலா மஸ்கரனஸ், இருதயராஜ் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

* * *

23—8—48

சிவகங்கை அரசர்கல்லூரித் தமிழ்ப்பேரவையில் தோழர் சுப்பிரமணிய தேசிகர் தலைமையில் நடைபெற்ற சொற்போரின் போது, இந்தி வேண்டாம் என்று தீர்ப்புக் கிடைத்தது.

* * *

24—9—48

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில், 7-ம் வகுப்பு மாணவர்கள் நடத்திய சொற்பொழிவுக் கூட்டத்தில், இந்தி வேண்டுமா என்பதுபற்றி, ஓட் எடுத்ததில், 89 பேர் வேண்டாம் என்றும் ஒருவர் வேண்டும் என்றும், தீர்ப்புக்கிடைத்தது.

* * *

26—9—48

திருச்சி தேசியக் கல்லூரியில் நடைபெற்ற சொற்போர்க்கூட்டத்தில், இந்திவேண்டும் என்று 78 பேரும், இந்தி வேண்டாமென்று 1403பேரும், ஓட் அளித்தனர். இக்கூட்டத்துக்குப் பேராசிரியர் வரதாச்சாரி என்பவர் தலைமை வகித்தார் என்றும், செய்தி இருக்கிறது.

* * *

9—10—48

மதுரை, அமெரிக்கன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில், சொற்போர் நடைபெற்றது—தீர்ப்பு, இந்திக்கு எதிர்ப்பாகத்தான் கிடைத்தது.

* * *

21—10—48

பாளயங்கோட்டை, புனித யோவான் கல்லூரிமாணவர்கள் சொற்போர்க் கூட்டத்தில், இந்தி வேண்டாம் என 38 ஓட்டுகளும், வேண்டும் என 23-ம் கிடைத்தன. இந்திக்கு எதிர்ப்பான தீர்ப்புக்கிடைத்தது.

* * *

28—10—48

திருநெல்வேலி, தாயுமானுர் இந்துக்கல்லூரி தமிழ்ச்சங்கக் கூட்டத்தில், இந்தியை ஆதரித்து 18 மாணவர்களும், எதிர்த்து 218 மாணவர்

களும் ஓட் அளித்தனர் — இந்தி கூடாது என்ற இந்தத் தீர்ப்பு கிடைத்த கூட்டத்தை, உதவிப் புலவர் வ. பொன்னுசாமி என்பவர் உடனிருந்து கவனித்திருக்கிறார்.

* * *

11—11—48

பாளயங்கோட்டை, சேவியர்ஸ் பள்ளியில், மேற்கு மண்டபத்தில், இந்தி தமிழ்நாட்டுக்குத் தேவையா, எனும் பொருள் குறித்து நடந்த சொற்போரில், 117 மாணவர்கள், இந்தி வேண்டாம் என்றும் 13 மாணவர்கள், வேண்டும் என்றும் தீர்ப்புக் கிடைத்தது. கூட்டத்துக்குத் தலைமைவகித்தவர், கிருஷ்ணசாமி ஐயங்கார், என்பவர்.

* * *

21—11—48

சென்னை சட்டக்கல்லூரி, தமிழ்ச் சங்க சார்பில், 'தமிழ் நாட்டிற்கு இந்தி தேவையா!' என்று சொற்போர் நடந்தது. இந்தியை ஆதரித்து இருவரும், எதிர்த்து நாற்பதுபேரும் வாக்களித்தனர்.

* * *

4—12—48

திருப்பதி வெங்கடேஸ்வரா கல்லூரியில், இந்திப்பிரச்னைபற்றி மாணவரின் சொற்போர் நடந்தது, இந்தி வேண்டாமென்று தீர்ப்புக் கிடைத்தது. புலவர் பழனியப்பா B. O. L. கூட்டத்தில் நடுநிலையாளாக இருந்து கவனித்து வந்தார்.

* * *

பட்டி முழுவதையும் வெளியிட இடமில்லை—சில குறிப்புகளை மட்டுமே வெளியிட்டிருக்கிறோம்,

இந்திவேண்டாம் என்பதற்கு, மாணவர்கள் காட்டிய காரணங்கள், பேசிய பேச்சுகள், ஆகியவற்றினை வெளியிட வில்லை.

கட்டாய இந்தித்திட்டத்தை வற்புறுத்தும் அமைச்சர்களை மாணவர்கள், எவ்வளவு வன்மையாகக் கண்டித்துப்பேசினர் என்பதையும் வெளியிடவில்லை — ஆயாசப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு, அந்தக் 'காரம்' மேலும்தொல்லையாகஇருக்கும்என்ற காரணத்தால்.

மாணவர் உலகு தந்திருக்கும் தீர்ப்புமட்டுமே தந்திருக்கிறோம்.

அமைச்சர்கள் இதற்கு என்ன சொல்லுகிறார்கள்? திருப்பதியிலும் தீர்ப்பு, இந்திக்கு எதிராக—திருநெல்வேலியிலும் அதே தீர்ப்பு! அமைச்சர்கள், இந்தத் தீர்ப்புகளை எல்லாம், துச்சமானவை என்று தள்ளிவிடவோ, இவைகளை அரசியல் சூழ்ச்சிகள் என்று அலட்சியப் படுத்திவிடவோ, துணிகிறார்களா என்று கேட்கிறோம்.

மாணவர்கள், அளித்த தீர்ப்புக்காக, நாம் அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம் — அறப்போரில் பணியாற்றுபவர்களும் அவர்களே--களத்திலே நிற்பவர்கள் அல்லஎன்ற போதிலும், போர்க்கருவிகளைத் தருபவரும் எங்ஙனம், போரில் பங்கு கொண்டவராகின்றனரோ, அது போன்றே, மாணவர்கள், தந்துள்ள தீர்ப்பு, ஏற்கனவே, அறப்போரில் ஈடுபட்டுள்ளவர்களுக்குஉள்ளஉறுதியையும் உற்சாகத்தையும் பலப்படுத்துகிறது. அறப்போர் நடக்கிறது—அறிவு தேடும் துறையிலே உள்ள அருந்தமிழ் மாணவர்கள், இந்தி ஆகாது என்று அளித்திருக்கும் தீர்ப்பு, அறப்போர் நடாத்துபவருக்கு, தமிழ் இளைஞர்கள் தரும் புதியதோர் சக்தியாக அமைகிறது; அறப்போர் நடந்துகொண்டிருக்கிறது!

மூலகாரணம்

"வீடா இது? ஒரு விநாடியாவது நிம்மதியாக இருக்க முடிகிறதா இங்கே? கர்மம்! கர்மம்! சகிக்க முடியாத தொல்லையாக இருக்கிறது. வேலைசெய்துவிட்டு அலுத்துவிடுவருகிறேன். நாடி நரம்பெல்லாம் குடைச்சல். நாலுவிநாடி கண்ணை மூடிக் கொண்டு ஓய்வாக இருக்கலாம் என்றால், முடியவில்லையே இங்கு."

"ஏன் இப்படி அனுவசியமாக அலட்டிக் கொள்கிறீர். உம்மை யார் உறங்கவேண்டாம் என்று சொன்னார்கள். அலுப்பாம் அலுப்பு—யாருக்குத்தான் இல்லை—இரண்டு நிமிஷம் கூட ஆகவில்லையே படுத்து, இதற்குள்ளாகவா தூங்கிவிட்டிருக்கப் போகிறீர் என்று எண்ணிக் கொண்டு, உம்மிடம் பேசினேன்—அதுவும், எதற்கு? உம்மை உபத்திரவிக்கவா? காப்பிபோடவா, டீ போடவான்னு கேட்கத்தான். இதற்கு இப்படி எரிஞ்சு விழறீர் என்மேலே."

"சரியடி அம்மா! உங்க அப்பா மட்டுந்தானே வக்கீல்னு நான் எண்ணிண்டது தப்பு. போதும் நிறுத்திக் கொள் உன்னுடைய வாக்குவாதத்தை."

"சரி, நீர் நிம்மதியாக நித்திரை செய்யும். காப்பியா, டீயான்னு சொல்லிவிடும்—அதுபோதும்."

"சுக்கு கஷாயம் போட்டுக் கொடுடி, சுடுமூஞ்சி. ஏண்டி என்னை எழுப்பித் தொல்லை செய்யறேன்னு கேட்டதற்கு, இப்படி முகத்தைச் சுளிச்சிண்டா, நான் என்னத்தைச் செய்யறது."

"வெறுமனே வீண் பேச்சு பேசிண்டிராதேயும்."

"வீண் பேச்சும் சண்டையும் உன் வேலையடி, உன் வேலை. எங்க கோத்ரத்துக்கே கிடையாது. அந்தச் சுபாவம், தெரிந்துதோ!"

"கோத்திரத்துடைய பெருமையை, கோடியாத்து கோமளத்தோடே பாட்டி, கதை கதையாச் சொன்னா என்னிடம். நீங்கவேறே சொல்லவேணும், சும்மா இருங்கோ."

"என்னடி உளறிண்டே போறே—என்னதான் எண்ணிண்டிருக்கே."

"நானா எண்ணிண்டிருக்கேன், ஈஸ்வரா! என்னை எண்ணைக்கு அழைச்சிண்டு போகப் போறயோ, அந்தநாள், வர, இன்னும் எவ்வளவு நாள் இருக்கோண்ணு, நாள் எண்ணிண்டு தான் இருககறேன்."

"கமலா! கமலா! என் கோபத்தைக் கிளறாதே! ஆமாம்! வேதனைப் படுத்தாதே—விபரீதமா வந்து முடியும், மனம் புண்பட்டு வந்திருக்கிறேன்—நீ அதிலே குத்திச் சித்திரவதை செய்யாதே—ஆத்திரத்தைக் கிளப்பாதே!"

"என்மனம், தாமரையா இருக்குன்னு உம்ம எண்ணமாக்கும்."

"என்னடியம்மா, உன் மனதுக்குக் குறை?........ஏண்டியம்மா, கமலாம்பிகா தேவி! என்ன குறைவந்து குடையறது இப்போ. போனமாதம், தாழம் பூச் சேலை குடைந்திண்டிருந்

(13-ம்பக்கம் பார்க்க)

கட்டை விரல்

28-ம பக்கத் தொடர்ச்சி

"கடைசிமுறையாக உன்னை எச்சரிக்கிறேன், ஜ்வாலையைக் கிளப்பாதே, நீ தாங்கமாட்டாய்"

"நான் அஞ்சேன்—சத்தியத்தின் வழியிலே நடக்க—"

"கேட்கிறேன் குரு காணிக்கை, குறைமதியால் குளறிக் கொட்டியவனே; கேள், மிரளு, புலம்பு, மிரண்டு ஓடு, வெட்கத்தால், துக்கத்தால் தாக்கப்பட்டு, காலில் விழுந்து, மன்னிப்புக் கேள், குரு காணிக்கை தரமுடியாத ஆர்த்தன் என்று பெயர் பெற........"

"இன்னம், காணிக்கை என்னவென்று குறிப்பிடவில்லையே குருதேவா!"

"குறிப்பிடவில்லையா! குறிப்பிடுகிறேன்; செவியிலே சர்ப்பம் பாயும், கவனி. ஏகலைவா! குரு காணிக்கையாக உன் வலதுகை, கட்டைவிரலை அறுத்துக்கொடு........"

"குருதேவா........"

"என்ன செய்வேன், அந்தோ, எப்படி அதனைத் தருவேன், ஈரேழு பதினாலு லோகத்தையும்கூடத் தருவேன், கட்டை விரலை எப்படித் தரமுடியும் ஸ்வாமி!—என் வேடவீரனே! ஆரம்பி புலம்பலை"

"ஸ்வாமி! இதோ அரை விநாடியிலே வந்துவிடுகிறேன்........"

"எடுக்கிறாயா ஓட்டம்! பேஷ் மகாவீரா!!........"

[ஓடுகிறான். சொன்னவண்ணம் திரும்பி ஓடிவருகிறான், கையில் கமண்டலத்துடன்.]

"இதென்ன, கமண்டலம்."

"தங்கள் பாதத்தை அபிஷேகிக்க"

"ஏன்! அபிஷேகம்செய்துபிறகு, அழுகுரலைத் துவக்கவா?"

[கமண்டல நீர் கொண்டு, துரோணரின் பாதத்தை அபிஷேகிக்கிறான். ஒரு விநாடியில், கட்டைவிரலை அறுத்தெடுத்துக் காலடியில் வைக்கிறான்]

"இதோ காணிக்கை! குருதேவா, என் வலதுகரக் கட்டை விரல்! ஸ்வாமி! இரத்தக்கறை பட்டுவிட்டது, பாதத்தில், கமண்டல நீரால், தங்கள் பாதத்தைச் சுத்தம் செய்துவிடுகிறேன்........

ஆ! குருதேவா! ஏன்? நெடுநேரமாக நின்றுகொண்டிருந்ததால் களைப்போ? மயக்கமோ! .... ஐயோ! குருதேவா! மெள்ள, மெள்ள, அப்படியே, சாய்ந்து கொள்ளுங்கள்—புல்தரைதான்........அடடா! மயக்கமேலிட்டுவிட்டதே—

[கமண்டல நீர்கொண்டு ஏகலைவன், துரோணாச்சாரியின் முகத்தில் தெளித்து மயக்கத்தைத் தெளியவைக்கிறான்]

* * *

குருபக்தியின் மேன்மையை, ஏகலைவன் விளக்கிவிட்டான்—சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவன் என்பதை நிரூபித்துவிட்டான். அன்று முதல் இன்று வரை, ஏகலைவன், காட்டிய தியாக உணர்ச்சியை, பாராட்டிப் புகழாதார் இல்லை. அவனல்லவோ சீடன்? அதுவன்றோ குருபக்தி—என்று வியந்து பேசுகிறார்கள். சரி. ஆனால், அந்த ரசிகர்கள் — போதகாசிரியர்கள் — நீதிவாதிகள்—அதேபோது, அதாவது ஏகலைவனின் குருபக்தியைப் பாராட்டும்போது, துரோணாச்சாரியின் கடினசித்தம், கபடநோக்கம், கேவலமான போக்கு, அவரைத் தூண்டிய, அர்ஜுனனின் அழுகைக் குணம், அவனுக்குக் கட்டுப்பட்டு, அவனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற அவருடைய சபலபுத்தி, ஆகியவற்றைப்பற்றியும் கண்டிக்க வேண்டாமோ! சீடனின் சத்ய நெறியைப் பாராட்டியது போல, குரு கொண்ட கபட நோக்கத்தையும கண்டிக்கவேண்டாமோ?

ஏகலைவன் கதை, சீடன் குருவிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்குச் சிலாக்கியமான பாடம் கற்பிப்பது, என்று மட்டுந்தானா, அன்றுதொட்டு இன்றுவரை, காட்ட உதவவேண்டும். அந்த நாட்களில் அரச குடும்பங்களுக்கு ஆசிரியர்களாக அமர்ந்தவர்களின் போக்குக்கு, ஒரு எடுத்துக்காட்டு இது, தங்களிடம் பாடம் கேட்பவர்களுள், யார் செல்வக்குடியினரோ, அவர்களுக்குத் திருப்தி ஏற்படும்படி நடந்துகொள்ளும் நயவஞ்சக குணம் கொண்டவர்கள், இந்தக் குருமார்கள் என்றும், இக்கதை காட்டவில்லையா!

எடுத்துக்காட்டினரா இக்கருத்தை? காட்டுவரா? காட்டும் நம்மையேனும், கயவன், கசடன், என்று கண்டிக்காமலிருப்பரோ!—

ஏகலைவன், கைக் கட்டைவிரலை இழந்தான்—ஒரு குற்றமும் செய்யாமலே!

குருகாணிக்கையாக, அதனைக் கேட்டார் துரோணர்—அதுவும், ஏகலைவன் வில்வித்தையில் பெற்ற தேர்ச்சி, அர்ஜுனனுக்குப் பொறாமையை மூட்டிவிட்டது கண்டு, அர்ஜுனனைச் சந்தோஷப்படுத்த.

அரசகுமாரனின் மனம் களிப்படைய வேண்டும் என்பதற்காக அந்தஆரியகுரு, வேடர்குல வீரனின் விரலை வெட்டித்தரச் செய்தார்.

இது ஏகலைவனின் குருபக்தியை மட்டுமா—துரோணரின் கல்மனதைக் காட்டவில்லையா!

பன்னெடு நாட்கள் இப்புழுக் கதை கொண்டு, குருபக்தியின் மேன்மையைத்தான், பாடபோதகர்கள், விளக்கிவந்தனர்—இக்நாள் இந்தகு கதைகள், முன்னாளில் முனிவர் வேடமிட்டவர்கள், எவ்வளவு நேர்மையற்ற, நெஞ்சிரக்கமற்ற காரியத்தையும் கூசாது செய்தனர் என்பதைக் காட்டவே, பயன்படுகின்றன.

இந்தப் புதிய பாடத்தை, மக்கள் பெறாமலிருக்க முடியாது.—பெறும்போது, அவர்களுக்கு, பனிரோ, புயல் உண்டாகாமலிருக்காது! அந்தப் புயலைச் சுலபத்திலே அடக்கிவிடவும் முடியாது.

ஏகலைவன்போல இன்று யாரும் இருக்கச் சம்மதிக்கமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, துரோணர் போலத் துணிந்து, காணிக்கை கேட்கமாட்டார்கள். அதுமட்டுமல்ல. நாளாகவாக, இத்தகைய கதைகளை, நீதி போதிக்கும் சம்பவங்களாகக்கூட, பாடத்திட்டத்திலே, சேர்க்கமாட்டார்கள்.

இப்போது, சேர்க்கப்பட்டிருப்பினும், இதனைச் சொல்லித்தரும், ஆசிரியர் நன்கு அறிவார், மாணவர்கள், இக்கதையைக் கேட்டு என்ன கருதுகின்றனர் என்பதை.

ஒருநாள், இதே கதை மற்றோர் கருத்துக்குப் பயன்படும் விதமாகத் திட்டப்படுத்தானே தீரும்.

துரோணர் என்றோர் வில்வித்தை கற்பிக்கும் குரு இருந்தார். அவர் மிக மிகக் கல்மனம் படைத்தவர். அவருடைய அபாரமான வில்வித்

தைத் திறனைக்கண்டு, வியந்த, ஏகலை வன் என்ற வேடனொருவன், அவ ரைத் தன் குருவாகப் பாவித்தான்- அவர்போல உருவம் அமைத்து வைத்துக்கொண்டு, வழிபட்டும் வந்தான். ஏகலைவன், சிறந்த வில்வித்தைக்காரனென்ற இச்சேதிதெரிந்த, துரோணரின் சீடரில் அர்ஜுனன் என்பான், அருவருப்படைந்து, குருவைக் கண்டித்தான். குரு, அவனைச் சந்தோஷப்படுத்த எண்ணி, ஏகலைவனைச் சந்தித்து, சாகசமாகப் பேசி, அவனுடைய வலது கைக் கட்டை விரலை, குரு காணிக்கையாகப் பெற்றார். அந்தக் காலத்தில், அவ்வளவு வஞ்சகமும், கடின சித்தமும் கொண்ட குருமார்கள் இருந்தனர். அவர்கள் இதுபோல, பலப் பல வஞ்சகச் செயல்களால், ஏகலைவன் போன்ற பழங்குடி வீரர்களை அழித்தனர்—என்று கதை எழுதாமலா விடுவர்!

ஏகலைவன், துரோணாசாரியாரைக் குருவாகக் கருதிக்கொண்டதையே, அவன் குலத்தவர் கண்டித்தனர்.

"என்னதான் வில்வித்தைமீது ஆசை பிறந்தால் என்ன, கேவலம், அதற்காக, நமது இனத்தின் மானத்தை இழந்துவிடுவதா? நாம், வேடர் குலம்; விலங்கினமும் பறவை இனமும், மனித குலத்தைவிட, அப்புக்குத் தப்பும் திறமையை அபாரமாகப் பெற்றவை, அவை களையே நமது வித்தையால் சாகடிக்கிறோம்—பரம்பரை பரம்பரையாக வில்வித்தையில் தேர்ந்தவர்கள் நாம்—சிட்டு முதல் சிங்கம் வரையில், நாம், நமது வில்வித்தையினால் மாய்த்திருக்கிறோம்—அப்படிப்பட்ட இனத்திலே பிறந்த நீ, ஒரு ஆரியனிடம் வில்வித்தை கற்றுக் கொள்வதா! அதுவும் நேரிலே அல்லவாம்! உருவம் வைத்தாய்! என்ன காரியமடா செய்தாய் ஏகலைவா! நமது குலத் தொழில், இந்த வில்வித்தை—துரோணரின் குலத் தொழிலோ வெறும் புல்வித்தை—வேட குலத்து உதித்த நீ, எப்படி வெட்கமின்றி, அவரை, "என் குரு" என்று கூறிக் கொள்கிறாய்!

எவ்வளவு கீர்த்தி நீ பெற்றாலும், உன் வில் வித்தையினால், நீ கண்டவர் வியக்கும் திறமை அடைந்தாலும் என்ன பயன்? ஒரு ஆரியனின் அருள்! அதனாலே வந்த திறமை என்றுதானே பேசுவர், வேடர்உலகு உன்னை மதிக்குமா! வேதியக் கூட்டம் உன்னைக் கௌரவிக்குமோ!

ஏகலைவ! உன் ஆற்றலால், புகழ் பெறும் நமது குலம் என்று நம்பினேன், நீ ஒரு ஆரியதாசன் என்ற அழியாத பழி சுமக்க முன்வந்தாய். ஏன் உனக்கிந்த மதி பிறந்தது. எம்மிலே, யாருமில்லையா, உனக்கு இந்த வில்வித்தையைக் கற்பிக்க" என்று கூட, வேடர் தலைவன் ஒருவன் கூறினான். ஏகலைவன் அந்த நன்மொழியைக் கவனிக்கவில்லை.

கடைசியில், தன் கைக் கட்டை விரலை, இழந்துவிட்டு, வீடு திரும்பியபோது, அந்தத் தலைவனைக் காண நேரிட்டது—தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"ஏகலைவா! முதலிலேயே எச்சரித்தேனே, கேட்கவில்லையே" என்று வேடர் தலைவன் விம்மும் குரலிற் கூறினான். வீரன், "விசாரப்படாதீர்! நான் இழந்தது, என் கைக் கட்டை விரல்! அவர் இழந்தது, கண்ணியத்தை! இதனை, உலகம், ஓர் நாள் உணரும்" என்று கூறினான்.

துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்த, கட்டை விரலைக் கண்டு கண்ணீர் விடாத வேடுவரே இல்லை என்னலாம்!—என்று கதையை, எவ்வளவு வேண்டுமானாலும் நீட்டித் தீட்ட இயலுமே.

கட்டை விரல்! என்று நாடகமே தீட்டலாமே!—ஆடிக் காட்டலாமே! அச்சம் பிடித்தாட்டுமே, ஆள்பவர்களுக்கு!

பழைய கதைகள் இனி புதிய பாடங்களைத்தான் தரும்—அவைகளைத் தாமாக 'வாபஸ்' வாங்காவிட்டால். ஒன்றன்பின் ஒன்றாக, நாடகங்களை, ஏடுகளை, தேடித் தேடித் தடை செய்தபடி இருக்கவேண்டி வரும், சர்க்காரால்! தடை அதிகமாக அதிகமாக, புதிய கருத்துகள் பரவுவதன் வேகமும் அதிகரிக்கும்!

பழய கதைகளை அப்படியே, உலவவிட்டால், நம்பமாட்டார்கள் என்ற பயத்தால், 'நகாசு' வேலை செய்து, நவீன தத்துவார்த்தம் கொடுத்து உலவவிட்டும் பயனில்லை. பழைய கதைகளுக்கு, அந்த உடை கொடுத்து உலவவிடும் மேதை வேலையைப்பிறரும்கையாள முடியும். நான் கூறியபடி, யூகங்கள்—விளைவுகள்—உட்பொருள்கள்,—மனப் பண்பு—எனும் பல கருத்துரைகளை வெளிப்படுத்தும் விதத்திலே, அதே கதைகளைப் பிறர் தீட்டி, பழய கதையே பரவாயில்லையே, இவன் தரும் புதுக்கருத்து மேலும் அல்லலை அல்லவா தருகிறது என்று ஆயாசப்பட்டு அலறும் அளவுக்கு புதிய பாணியில் எழுதுபவர் கிளம்பித்தானே தீருவர்!

நாகத்தின் நடனத்தைப் பாராட்டி ஒரு அகவல் எழுத முடியுமானால், அதன் நஞ்சினை எடுத்துக் காட்டி ஒரு வெண்பாவும் இயற்ற முடியுமே!

*

12—6!

அன்னிய சர்க்கார் இதே ரேஷன் முறையை வைத்துக்கொண்டு நபருக்கு பன்னிரண்டு அவுன்ஸ் அரிசி கொடுத்தார்கள் நாம் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டபின் ஆறு அவுன்சு அரிசி கொடுக்காமல் திண்டாடுகிறோம். இந்த 6 அவுன்சு அரிசியும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை, அன்னியர் விலகி இன்னும் வருஷம் இரண்டாகவில்லை. அவர்கள் விலகின உடன் நம் நாட்டில் ஜனத்தொகை திடீரென்று ஒன்று இரண்டாகிவிட்டதா? மூன்று வருஷங்களில் இரண்டு பங்காகிவிட முடியுமா? முடியாது.

"இந்துஸ்தான்"

விற்பனைக்குத் தயார்!

1949-வருடக் காலண்டர் நமது திராவிடத் தந்தை பெரியார், தளபதி அண்ணாத்துரை, புரட்சிக் கவிஞர் முதலியவர்கள் உருவமைந்த அழகிய தனித் தனிக் காலண்டர்

விலை 0—6—0

விபரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்
P B. No 18
வேலூர் N. A.

தேசிய தர்பார்!

பெரு மூச்சு.

இங்கிலாந்துக்கும், ஸ்காத்லாந்துக்கும் பகை, மிகமிகப் பயங்கரமான அளவு இருந்தது-படைஎடுப்புகள் பலப்பல-படுகொலைகள் பல-புரட்சிகள் பல-இவ்வளவுக்குப் பிறகு, ஸ்காத்லாந்தும் இங்கிலாந்தும், ஓரே ஆட்சிமுறையின் கீழ் கொண்டுவரப்பட்டன.

பகையையும் பழைய நினைவுகளையும் மறந்து, கூட்டான நிலையைப் பெற்றுவிட்டது ஸ்காத்லாந்து.

பல நூற்றாண்டுகளாக, இந்தக் கூட்டு இருந்துவருகிறது. எனினும், உள்ளூர, ஸ்காத்லாந்து மக்களுக்கு, தனி அரசு, தனி வாழ்வின் மீது பற்று இருக்கத்தான் செய்கிறது.

இங்கிலாந்துடன், ஆட்சி முறையில், பிணைக்கப்பட்டிருப்பதால், தன் வாழ்வு ஒளியுடன் இல்லை, செல்வத்தை அபிவிருத்தி செய்துகொள்ள முடியவில்லை, என்ற மனக்குறை, அதிகமாகி, முணுமுணுப்பிலிருந்து, முழக்கமிடும் நிலையை அடைந்திருக்கிறது.

நமது நாட்டு இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்தி, வளத்தை வளர்க்க, ஒரு திட்டமும் இல்லை-இங்கிலாந்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறோம்-மாற்றாந்தாயிடம் வளரும் குழந்தையாக இருக்கிறது ஸ்காத்லாந்து என்று அந்நாட்டுத் தலைவர்கள், பேசத் துணிந்தனர். பெருமூச்சு, பெரும் புயலுக்கு முன்னறிவிப்பு அல்லவா! இங்கிலாந்துநாட்டு ஆட்சியாளர்கள், இந்த மனக்குறையைத் தீர்த்தாகவேண்டும் என்று முடிவுசெய்தனர்

வெறும் நல்வார்த்தை பயன்படவில்லை. திட்டமான, உருவள்ள செயல் தேவை என்றனர், ஸ்காத்லாந்துத் தலைவர்கள். பார்லிமெண்டிலேயே, இதுகுறித்து அவர்கள், ஆத்திரத்துடன் பேசத் தலைப்பட்டனர்.

பிரிட்டிஷ் தீவுகள்—என்ற பொதுப் பெயர், இங்கிலாந்து, ஸ்காத்லாந்து இரண்டுக்கும் சேர்த்துத்தான்-என்ற போதிலும், பொதுப்பெயர்-பொது ஆட்சிமுறை, என்ற பக்கச் சொல்மட்டும் போதாது, உண்மையான, பலன்வேண்டும், என்றனர். பார்லிமெண்டிலே, இப்போது, ஸ்காத்லாந்து பிரதிநிதிகள் 74 பேர் உள்ளனர்.

இவர்களுடன், இங்கிலாந்து நாட்டுப் பிரதிநிதிகள் 20 பேர் சேர்ந்து, ஒரு தனிக் கமிட்டி அமைத்து, ஸ்காத்லாந்து நாட்டு வளத்தைப் பெருக்கி, மனக்குறையைப் போக்கும் காரியத்தைக் கவனிக்கவேண்டும் என்று, புதுத்திட்டம் வகுத்துள்ளனர், ஆட்சியாளர்கள். இந்தப் புதுக்கமிட்டி, மனக்குறையைப் போக்க முயற்சிக்கும்.

★ செவ்வாயுலகில் புரட்சிக்கவிஞர் ★

விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடாத்தியவண்ணம் உள்ளனர், சந்திர மண்டலம், செவ்வாயுலகம் ஆகியவற்றினைப்பற்றி, அங்கெல்லாம், சென்று, காட்சிகளைக் காணமுடியுமா? உயிரினங்களுக்கேற்ற உறைவிடமாகுமா அவை, என்றெல்லாம் ஆராய்ச்சி நடக்கிறது.

பதினெட்டு ஆண்டுகளுக்குமுன்பு புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் செல்வாயுலகு சென்றுவந்தார்—கற்பனை மூலம்!

செவ்வாயுலகம் சென்று, என்ன கண்டதாகக் கூறினார்—புராணப் பண்டிதர்கள் இந்திரலோகம் பற்றிக் கூறுவதுபோலக் கதைகளா கூறினார்? இல்லை! அந்தக்கற்பனைப் பயணத்தைக் கட்டுரைவடிவில் தீட்டி, அதன் மூலமும், நாட்டு மக்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தினார்.

5—1—31-ல், புதுவைமுரசு எனும் கிழமை இதழில், கவிஞர் தீட்டிய செவ்வாயுலகயாத்திரை எனும் கட்டுரையில், அவர், கற்பனைத் திறத்தையும் அத்திறத்தினை அவர், பயன்படுத்தும் ஆற்றலினையும் காணலாம். அந்தக்கட்டுரை, இது.

• • •

நாங்கள் ஆறு நண்பர்களும் திட்டம் போட்டபடி எங்கள் ஆகாய விமானத்தைச் செவ்வாய்உலகத்தை நோக்கி முடுக்கினோம். அது பறந்து போய்க் குறித்த இடத்தை அடைந்தது.

மனிதர்கள் சிவப்பு நிறமுடையவர்கள்; நம்மினும் சிறிது உயரமுடையவர்கள். இந்த இரண்டு அம்சங்கள் தவிரச்-செவ்வாய் உலகத்தவர் எல்லா விஷயத்திலும் நம்மையொத்தவர்களே. ஆனால் அம்மனிதர்கள் அனைவரும் எப்போதும் தங்கள் தலையின் மேல் ஒரு பெரிய கல்லைச் சுமந்தபடி இருந்தார்கள்.

எங்கள் விமானம் செவ்வாயுலகத்தில் ஒரு கிராமத்தின் வயற்புரத்தில் இறங்கிற்று. நாங்கள் முதலிற் பார்த்த ஓர் உழவன் தன் தலையில் ஒரு கல்லைச் சுமந்துகொண்டு நடந்தான். ஏதோ தூக்கிக்கொண்டு போகிறான் என்று நினைத்தோம். சிறிது தூரம் நடந்தோம். உழுது கொண்டிருந்த சுமார் பத்துப் பேர்களும் தலையில் கற்சுமை யுடையவர்களாயிருந்தார்கள். அதையும் தாண்டினோம். ஓரிடத்தில் ஒருவிழா நடந்தது. மனிதர்களின் பெருங்கூட்டம். சிறு குழந்தைகள் முதல் கிழவர் ஈறாக உள்ள அனைவரும் கல்லைச் சுமந்துகொண்டிருந்தார்கள். நாங்கள் சிரித்தால் அது குற்றமாக முடியுமோ என்று எங்கள் உள்ளம் நினைத்ததுண்டு. எனினும் அடக்க முடியாத சிரிப்பும் நாங்களும் கட்டிப் புரண்டோம். எங்களில் ஒருவர் சாதாரண விஷயத்திற்கே அதிகமாய்ச் சிரிப்பவர். கல்சுமக்கும் மனிதர் கூட்டத்தைப் பார்த்ததும் அவர் விழுந்து விழுந்து சிரித்தார். செவ்வாயுலகப் பெண்ணொருத்தி ஒருகையில் தன் ஆண்குழந்தையைப் பிடித்தபடி மற்றொரு கையில் தலையில்பாராங்கல்லைப் பிடித்தபடி நடந்தாள். குழந்தையின் தலையிலும் ஒரு கருங்கல் இருந்தது. விழாவிற் கலந்துகொள்ள அவள் விரைவாய் நடந்தாள். குழந்தையின் தலைச்சுமை கீழே விழ்ந்தது அதைத்தூக்கி அவசரமாய்ப் பிள்ளையின் தலையில் வைத்தாள். அவசரமாய் நடந்தாள். எங்களில் அதிகமாய் சிரிக்கும் நண்பர் இந்தக் கல்லை எங்கே எடுத்துப்போகிறீர்கள் என்று கேட்டார். அவளுக்கு எங்கள் பாஷை தெரியவில்லை. எங்களை மாத்திரம் அவள் கவனித்தாள். உடனே வீதியின் இருபக்கத்திலும் வரிசையாய் வைக்கப்பட்டிருந்த கற்களில் ஒன்றைத் தூக்கி வந்து எங்களில் ஒருவர் தலையில் வைத்தாள். பிறகு மற்றொரு கல்லை மற்றொரு நண்பர் தலையில்! தடுத்தால் உதை விழக்கூடுமென்று நாங்கள் பெரிய பெரிய கற்களைத் தலைகளில் சுமந்து கொண்டோம். எங்கள் தலையில் கல்லைச் சுமத்திய பெண்-அதனோடு சென்றுவிடவில்லை. நாங்கள் கறுப்பு நிறமாய் இருப்பதை அவள் உற்றுக் கவனித்தாள். ஓடினாள் தன் இனத்தாரோடு சொன்னாள். எங்களுக்கோ பயம்! செவ்வாய் உலகம் சிறிது நேரத்தில் எங்கள் பக்கம் திரும்பிற்று. அவர்கள் எல்லோரும் நாங்கள் கறுப்பு நிறமாயிருப்பதையும் குட்டை வடிவமாய் இருப்பதையும் கவனிக்க ஆரம்பித்தார்கள். நாங்கள் எந்தப் பக்கமாக ஓடி-எப்படித்தப்பி — ஆகாய விமானத்தை யடைந்து செவ்வாய் உலகை விட்டுப்பறப்பது என்று நினைத்தோம். அவர்களிற் சிலர் எம்மை நெருங்கினர். ஏதோ சொல்லினர். அர்த்தம் புரியவில்லை. நாங்கள் அதற்கு விடையாக-வானத்தைக் காட்டினோம். கைச்சாடைகள் வளர்ந்தன. ஊமை நாடகம் நடந்தது. எங்கள் உயிருக்கு ஆபத்தில்லை என்ற விஷயத்தை நாங்கள் சீக்கிரம் தெரிந்துகொண்டோம். நாங்கள் கொஞ்ச நேரத்தின்பின் மெதுவாய் எங்கள் தலையில் ஏற்றப்பட்ட கற்களைக் கீழே இறக்கினோம் அதற்காக அவர்கள் எம்மைக் கோபிக்கவில்லை. இதனால் நாங்கள் வானத்திலிருந்து செவ்வாயுலகத்துக்கு வந்தோம் என்று குறிப்பிட்டதை அவர்கள் ஒருவாறு கண்டறிந்துகொண்டார்கள் என்று நிச்சயித்தோம். பிறகு அவர்கள் எங்களை உணவு அருந்தச் சொன்னார்கள். சிலவிதப் பழங்கள் பலவிதக் கிழங்குகள் தந்தார்கள். புசித்தோம். ஒருவித ருசியாயிருந்தன.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. எங்கள் ஆகாய விமானத்தின் உபயோகத்தை நாங்கள் காட்டினோம். எங்களிடம் அவர்கள் பக்தி விசுவாசம் காட்ட ஆரம்பித்தார்கள்.

ஆனாலும் நாங்கள் கல்சுமக்காதிருந்தது பற்றி அவர்கள் சிரிப்பதை நிறுத்தவில்லை. இந்தவிதம் இரண்டு மாதங்கள் தீர்ந்தன. நாங்கள் அவர்கள் பேச்சை அறிய ஆரம்பித்தோம் அவர்களும் நாங்கள் பேசுவதைத் தெரிந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

செவ்வாயுலக மக்கள் கல்லைச் சுமந்துகொண்டிருக்க என்ன காரணம்?-நூதனமான காரணம் ஒன்றுமில்லை. அது கடவுள்ஏற்பாடு என்று அவர்கள் சொன்னார்கள். அந்த ஏற்பாட்டை வற்புறுத்தும் இதிகாசங்கள், புராணங்கள், மற்றும் சாஸ்திரங்கள் எல்லாம் சொன்னார்கள். ஆகக்கூடிக் கல் சுமப்பது கடவுள் ஏற்பாடு! சிரிப்பைத்தான் எம்மால் அடக்கமுடியவில்லை. ஆனால் நாங்கள் சிரிப்பது போல் அவர்கள் இரண்டு பங்கு சிரித்தார்கள். சிரித்துக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் சிரிப்பதற்கு இரண்டு காரணங்கள்

(13-ம் பக்கம் பார்க்க)

மகுடாபிஷேகம்

8-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யக்கூடாது—முடியாது. சிவாஜி பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் என்பதிலே அக்கரை கொண்டயார்தான் சீற்றம்கொள்ளாதிருக்கமுடியும்! பாலாஜி, பதைத்தான்—ஆனால் முயற்சியைக் கைவிட்டு விடவில்லை. பாலாஜி சிட்னிஸ், காயஸ்தர் வகுப்பு—காயஸ்தர்கள் பார்ப்பனர்களின் போக்கையும் நோக்கத்தையும் எதிர்ப்பவர்கள். எனவே, காகபட்டரின் ஓலைக்குக் காரணம், தூது சென்றமூவர் செய்த துரோகமே என்று முடிவு செய்தான். மீண்டும் தூது அனுப்பினான்—முப்புரியினரை அல்ல—காயஸ்தாவகுப்பினரான, நீலோஜி என்பவரை. அவர்சென்று, வெற்றியுடன் திரும்பினார்; காகபட்டரின் சம்மதம் கிடைத்தது.

காகபட்டர், பட்டாபிஷேகத்தை நடத்திவைக்க, மராட்டிய மணிபுரிக்குவந்தார், ஊர், இருமுகாம்! எனினும், சிவாஜியின் பக்கம் ஆதரவு திரண்டது. பூசார் எவ்வளவுதான் எதிர்ப்புச் செய்யினும், அவர்கள் எவரும் எதிர்த்துப் பேசமுடியாத அளவுக்கு ஞானமும் அருளும் பெற்றிருந்த காகபட்டரே, சம்மதிக்கும் போது!! களிப்புடன் பட்டாபிஷேகத்துக்கான காரியங்கள் செய்பலாயினர். காகபட்டர், சிவாஜியை, வேதாகம முறைப்படி, முடிதரிக்கச் செய்யும் சடங்கினைத் தாமே முன்னின்று நடத்தச் சம்மதித்தார். பாலாஜி சிட்னிசின் வெற்றியைப் பலரும் புகழ்ந்தனர். சிக்கல் ஒருவிதத்தில் தீர்ந்ததென்று சித்தம் களித்தான் சிவாஜி. வேதாகம முறைப்படி காரியம்நடக்கவேண்டும் என்பதிலே, வீரச் சிவாஜி மிகவும் அக்கரை கொண்டிருந்தான்.

இந்தக்களிப்பைத் திடீலெனக் கெடுத்தார், காகபட்டர்.

சாஸ்திரத்தை மீண்டும் சாங்கோபாங்கமாகப் பார்த்தேன் — தீர்க்கமாகயோசித்தேன் — என்செய்வேன் -சிவாஜிக்கு மகுடாபிஷேகம் செய்வது, சாஸ்திரவிரோதமானது, பாபகாரியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. நான்சம்மதிக்க முடியாது--என்று காகபட்டர் கூறிவிட்டார்.

மூவர் தூது முறிந்தது--நீலன் வெற்றி பெற்றான், நிம்மதிபிறந்தது என்று களித்தபாலாஜியின் மனதுக்கூப்பேரிடி, காகபட்டரின் இந்த மறுப்பு.

ஏன்? ஏன் சம்மதமில்லை? தாங்களே கூறினீரே, சாஸ்திர முறைப்படி பட்டாபிஷேகம் செய்யலாம் என்று--இப்போது தாங்களே மறுக்கிறீரே!--என்று மனமுருகிக் கேட்கிறான் பாலாஜி.

ஆமப்பா! ஆர்வமிக்கோனே! ஆகமத்தை மேலும் நுட்பமாக ஆராய்ந்ததில், இம்முடிவுக்கு வந்தேன். மேலும், மண்டலத்திலே முதலமைச்சராக உள்ள மோரேபந்த் எனும் பிராமணோத்தமரும், இதனை, எதிர்க்கிறாராமே என்கிறார் காகபட்டர்.

"ஓ! மோரேயைச் சந்தித்துப் பேசினதன் விளைவா?" என்று வெகுண்டுரைக்கிறான் பாலாஜி.

"பைத்யக்காரா! இதோ பார்! நீ, காயஸ்த வகுப்பு--க்ஷத்திரியனாகலாம்! சிவாஜி, க்ஷத்திரியனாக முடியாது. இப்போது, சம்மதம் என்று சொல், உனக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவைக்கிறேன்! முடிதரித்துக் கொள்! மராட்டியத்துக்கு மகாராஜனாகு!!" என்று காகபட்டர் புதிதாக ஓர் பாணம் போடுகிறார். பாலாஜி, திடுக்கிட்டுப்போகிறான்.

"என்ன! என்ன! எனக்குப் பட்டமா! சிவாஜி சிருஷ்டித்த ராஜ்யத்துக்கு நான் ராஜனாவதா! சாஸ்திரம் இதற்குச் சம்மதிக்கிறதா! நியாயம், நீதி, இதிலே இருக்கிறதா! ஆகமம், இந்த அக்ரமத்துக்கு ஆதரவு தருகிறதா என்று பலப்பல எண்ணிப் பதறுகிறான். அவன்மனம்சுழலுகிறது--காகபட்டர், சிவாஜிக்கு மகுடாபிஷேகம் செய்யவந்து சிவாஜியின் மாளிகையில் இருந்து கொண்டே, சிவாஜிக்கு உரிய ராஜ்யத்தை, சிவாஜி முடிசூட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக உள்ளன் போடு உழைக்கும் பாலாஜிக்குத் தருவதாகக் கூறுகிறார். பாலாஜியைத்துரோகியாகும்படித் தூபமிடுகிறார். பாலாஜி விரண்டோடுகிறான் இச்சொல் கேட்டு.

காகபட்டர், மீண்டும் தமது முடிவை மாற்றிக்கொள்கிறார்--சிவாஜிக்கே சாஸ்திரமுறைப்படி முடிசூட்டி வைக்கிறேன் என்று கூறுகிறார். காயஸ்தர்கள் பார்ப்பனருக்கு வைரிகள் என்ற உண்மை அவருக்கு விளக்கப்பட்டு, காயஸ்த வகுப்பினனை பாலாஜிக்குப் பட்டம் சூட்டுவது, பேராபத்து என்று விளங்குகிறது--பிறகு. சிவாஜி ராஜனாவதே சரி என்று முடிவுசெய்கிறார்.

முதலில் மறுத்தார்-பிறகு சம்மதித்தார்—மீண்டும் மறுத்தார்—மறுபடியும் சம்மதித்தார்! நாலுகரணம்! நாலு வேதம் கற்றவர் அல்லவா!!

கடைசியில், காகபட்டர் தீட்டிய முறைப்படி, சடங்குகளும் குறைவின்றி நடைபெற்ற பிறகு, போரிட்டுப் போரிட்டு நிறுவிய ராஜ்யத்துக்குச் சிவாஜி மகாராஜனாகிறார். மராட்டியம் களிக்கிறது. கண்களுக்கும் கருத்துக்கும் விருந்து மன்னர் சிவாஜிமுடிதரித்துக்கொண்டகாட்சி, என்று மக்கள் கூறிக்களிக்கின்றனர். இந்த விருந்துக்கு முன்பு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பிருமணக் குடும்பங்கள், பட்டாபிஷேக வைபவத்தை முன்னிட்டு, விருந்துண்டனர்....!

1674, ஜூன் மாதம் 16-ந் தேதி 426 லட்ச ரூபாய் செலவில், காகபட்டரின் ஆசியும், வேதகாம சம்மதமும் பெற்று, நடத்தப்பட்ட ராஜ்யாபிஷேகத்தின் மூலம் க்ஷத்திரியராக்கப்பட்டார் சிவாஜி. இதிலே காகபட்டர் ஒரு இலட்சம் ரூபாயும், பிருமணோத்தமர்கள் தட்சணை மூலம் பல இலட்சமும், துலாபாரத்தின் மூலம், மேலும் பல இலட்சமும் பெற்றதாக, வைத்யா எனும் வரலாற்று வல்லுநர் கூறுகிறார். மராட்டிய மண்ணிலே குருதியைக் கொட்டி, மாவீரன் சிவாஜி கண்ட ராஜ்யத்துக்கு, மன்னனாவதற்கு, காசிவாசி காகபட்டரின் காலடியில் பணம் கொட்டவேண்டி நேரிட்டது. விருந்து! மராட்டியம், இந்த விருந்தையும் கண்டது—முன்னம் நடைபெற இருந்த, குலப்பெருமை பேசினவர்களின் போக்கின் காரண

குழந்தைகள்

சூரியவெளிச்சம் இன்றி ஒரு மரத்திற்கு உரம்போட்டால் எப்படிப் பிரயோஜனமில்லையோ அது போன்றுதான் குழந்தைகளுக்கு வெறும் எண்ணும் எழுத்தும் கற்றுக்கொடுப்பது.

குழந்தைகளின் பால் அன்பு காட்டாதவன் தன்னை மனிதன் என்று சொல்லிக்கொள்ள முடியாது.

கவர்னர் ஜெனரல்
ஆச்சாரியார்.

மாக, வீரச் சிவாஜிக்கு விசாரம் தந்த, அந்த விருந்தையும் கவனப் படுத்திக் கொண்டனர்.

* * *

இவ்வளவு இன்னலுக்குப் பிறகு, மராட்டியத்தின் மணிமுடி சிவாஜிக்குக் கிடைத்தது—காகபட்டரின் சாஸ்திரோக்தமான சடங்குகளின் மூலம், சிவாஜி, க்ஷத்திரியராக்கப் பட்டார்! ஆனால்........? சிவாஜி, பட்டாபிஷேகம் செய்துகொண்ட நாளை, நன்னாளாக, பொன்னாளாகக் கொண்டு, மராட்டிய மண்டலத்தில், ராஜ்யாபிஷேக சகாப்தம் ஒன்று துவக்கினர்! ஆனால்...........?

பீஷ்வாக்கள் ஆட்சி வந்ததும், சிவாஜியின் ராஜ்யாபிஷேக சகாப்தம், கைவிடப்பட்டது!

அதுமட்டுமா! 1928ல், சென்னை உயர் நீதிமன்றத்திலே, வழக்கே வந்துவிட்டது—மராட்டியர், க்ஷத்திரியர்களா, அல்லவா, என்பது பற்றி!

தஞ்சையில், சிவாஜியின் உடன் பிறந்தார் அமைத்த அரசுபற்றிய வழக்கொன்று சென்னை ஹைகோர்ட்டுக்கு வந்தது. 229 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு! இதிலே, மராட்டியர், க்ஷத்திரியர்களா என்பது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் விரிவாக விளக்கப்பட்டு, முடிவு கூறப்பட்டது. முடிவு என்ன? மராட்டியர், க்ஷத்திரியரல்ல, சூத்திரரே என்பதே தீர்ப்பு! வீரம், தியாகம், அறிவு ஆற்றல் போதவில்லை — (காணம் பல போட்ட) காகபட்டர் தேவைப்பட்டார், சிவாஜி, க்ஷத்திரியராக! காகபட்டர், அவர் காட்டிய ஏடுகள், அவர் பெற்ற தட்சணை, செய்த சடங்குகள் எவைபற்றியும் சென்னை உயர்நீதிமன்றம் கவலை கொள்ளவில்லை. வேறு தீர்ப்பு அளித்தது!

கட்டை விரல்!

—*—

பார்த்தனின் தொல்லை தாங்க முடியவில்லை துரோணாச்சாரியாரால். "கேவலம் ஒருவேடன்! அவன் அறிந்திருக்கிறான், தாங்கள் எனக்காக மட்டும் என்று கற்றுக்கொடுத்த அபூர்வமான அஸ்திர வித்தையை. நம்பினேன் — மோசம் போனேன்" என்று கோபிக்கிறான். குரு, சீடசம்பந்தமே முறிந்துவிடக் கூடுமோ என்று சந்தேகிக்கவேண்டியதில்லை. "வா! போய் அந்த வேடனைக்கண்டு..............." என்று அழைத்தார் துரோணாச்சாரியார். "கண்டு, காலிலே வீழ்ந்து..........." என்று கேலி பேசலானான் அர்ஜுனன். "ஏகலைவனிடம் இருக்கும் வித்தையைப்போக்கிவிடுகிறேன், வா";என்று உறுதியுடன் கூறினார். இருவரும் சென்றனர்.

வேடன், நெடுந்தூரத்தில் இருந்தபடியே, துரோணரைக் கண்டுவிட்டான். அர்ஜுனன் பின் தங்கிவிட்டான், குருமட்டும் வேகமாக முன்னால் சென்றார் — ஏகலைவன் அவர் அடி தொழுதான்-குரு மேலும்நடந்தார்-அவன பக்தியுடன் பின் தொடர்ந்தான். மௌனமாகச்சென்றார் துரோணர் — ஏகலைவன் குருதேவா! குருதேவா! என்று அர்ச்சித்தபடி நடந்தான் — அர்ஜுனன் கண்களுக்கு இரண்டு நிழல் உருவங்களே தெரிந்தன-அவ்வளவுதொலைவு சென்றனர் இருவரும்.

மீண்டும் ஒருமுறை ஏகலைவன், துரோணரின் பாதத்தில் வீழ்ந்து எழுந்தான். மோனநிலையிலிருந்து மீண்டவர்போல, துரோணாச்சாரியார், அவனை ஏறிட்டுப்பார்த்தார். இருவருக்குள் உரையாடல்நடந்தது

"குருதேவா! அடியேன் ஏகலைவன் நமஸ்கரிக்கிறேன்"

"எழுந்திரு அப்பா! என்னிடம் நீ, பாடம் கேட்டதில்லையே."

"அந்தப்பாக்கியம்எனக்குக்கிட்டவில்லை, ஸ்வாமி! ஆனால், என் இருதயத்திலே தங்களையே குருதேவராகப்பிரதிஷ்டைசெய்துகொண்டு நான் இந்த வில்வித்தை கற்று வந்தேன்"

"அபூர்வமான தேர்ச்சியும் அடைந்திருக்கிறாய். அர்ஜுனன் கூட,.................ஆமாம்..............சந்தோஷப்படுவான்.................."

"தங்கள் கிருபாகடாட்சம்"

"ஏது, சொல் வித்தையிலும் தேர்ச்சி பெற்றவனாக இருக்கிறாய், திறமை தெரிகிறது, இனிஉன்குணம் எப்படி என்று பரீட்சித்துப்பார்க்க வேண்டும்"

"நான் கிருதார்த்தனாகிறேன் குருதேவா"

என்னப்பா இது குரு, குரு,என்று ஓயாமல் சொல்கிறாய். ஒருநாள்கூட நான் உனக்குச் சிட்சை சொல்லிக் கொடுத்ததும் இல்லை— ஒரு 'சல்லி' கூட நீயும் குருகாணிக்கை செலுத்தினதல்லை."

"குருதேவா! காணிக்கை தரச் சித்தமாக இருக்கிறேன் தங்கள் தரிசனம் கிடைக்கட்டும் என்றே காத்துக்கிடந்தேன். ஏகலைவன், உமது ஏவலன்! என்ன கட்டளை பிறப்பித்தாலும்..............."

"தரச்சித்தமோ! என்ன தைரியமாகப் பேசுகிறாயப்பா! என்னிடம் பாடம் கேட்கவரும் அரசகுமாரர்கள்வெகுபேர்இப்படிக்கூறுவதுண்டு. அரசராகும்போது'................நான் நான்தான்—அவர்கள் ராஜாதான்"

"நான் அரசகுமாரனல்ல ஆசிரியரே! நான் தங்கள் அடிமை."

"அரசகுமாரர்களில் சிலர், நான் கேட்டதைக் கொடுத்துமிருக்கிறார்கள், சக்தி இருந்தது தந்தனர். நாடு ஆள்பவர்களுக்கு செல்வம், சேவடியில் கிடக்கும். நீ பாபம், காட்டிலே உலவி,.........."

"ஆமாம்! காட்டிலே உள்ள ஒரு வேடன்தான், ஆனால் என்குருபக்தி நாடாள்பவருக்கு உள்ளதைவிட மேலானது, அதிலே எள்ளளவும் சந்தேகம் வேண்டாம் ஸ்வாமி!"

ஏகலைவா! உன்பக்தியைக் கண்டு மெச்சினேன். சுகமாக இரு. நான் வருகிறேன். எனக்கு என்ன தேவை இருக்கிறது உன்னைக்கேட்டுப்பெற."

"பாபி, நான், ஒரு காணிக்கையும் செலுத்தாத பதிதனாவதா! ஐயனே! என்னை ஆட்கொள்ள வேண்டும். கேவலம் வேடனால் என்ன தர முடியும் என்று எண்ணவேண்டாம். நான், வேடனாயினும், வில்லும் அம்பும் பிடித்த வீரன்—சொல் தவற மாட்டேன்-நினைத்ததை முடிக்கவும் தவறேன்-எதைத் தாங்கள் விரும்பினாலும் பெற்றுத் தருவேன்"

(28-ம்பக்கம் பார்க்க)

வள்ளிநாயகியின் கோபம்

[குயில்]

வள்ளி! இப்படி அடிக்கடி கோபித்துக்கொண்டால் என்னதான் செய்வது. நான், உன் மனம்கோணும்படி, நடந்து கொண்டதுண்டா? ஏன், முகவாட்டம்? எவ்வளவோ, தொல்லைகளை நான் பட்ட வண்ணம் இருக்க நேரிடுகிறது. திருப்புகழ் பாடிப்பாடி அழைப்பவரை நாடிச் சென்று, அவர்கள் நாவில் உறையும் வார்த்தைகளுக்கும் நெஞ்சிலுள்ள எண்ணங்களுக்கும் பொருத்தமிருக்கிறதா என்று கண்டறியவேண்டி பாடுபட நேரிடுகிறது. இனிய குரலிலே பாடுகிறார்கள்! என்னப்பனே! முருகா! என்று உருகும்போது, ஒரு விநாடி நானே மயங்கி விடுகிறேன். கூர்ந்து பார்க்கும்போதுதான், அந்த உருக்கமான குரல் எனக்கல்ல, பொன்னுருக்கு மேனியாளாகிய ஒரு பாவைக்கு என்பது புரிகிறது! இப்படி பரீட்சை பலநடத்தி வரவேண்டி இருக்கிறது. அலுவலை முடித்துக் கொண்டு அலுத்து விடுதிரும்பினால் நீ, உன் அழகை மறைத்துக்கொண்டு என் மீது அனலை வீசுகிறாய். இது ஏன் என்று கேட்டாலோ புனலைச் சொரிகிறாய். வள்ளி! உள்ளதைச் சொல்லு! கள்ளத்தனமாக உந்தனை நான் அன்று காணவந்தேனே தினைப் புனந்தன்னில், அன்று இருந்த அன்பு, ஏன் இப்படிக் குறைகிறது.?" என்று ஆறுமுகனார், கண்களைத் துடைத்த வண்ணம் இருந்த, வள்ளி நாயகியைக் கேட்டார்.

"என் துக்கம் என்னோடு இருக்கட்டும். நீர் ஏன் வீணாக வேதனைப் படவேண்டும். உமக்கு என்னைப்பற்றி என்ன அக்கரை வாழுகிறது?" என்று, விம்மி விம்மிப் பேசலானாள் வள்ளி நாயகி.

"கையிலே அல்ல வள்ளி! வேல், இப்போது என் நெஞ்சிலே பாய்ந்து விட்டது" என்று சற்றுக் கோபமாகப் பேசினார் கந்தன்.

"விஷம்பாய்ந்தது, அப்பாவுக்கு!" என்று, கோபத்தினூடே கொஞ்சம் கேலியைக் கலந்து தந்தார் அம்மையார்.

"குறும்பு,வள்ளி! உனக்கு. இதோ பார், என்ன குறை மனதில்" என்று கொஞ்சுமொழி பேசலானார் முருகன்.

"சொல்ல வேண்டாமென்றால் முடியவில்லை. பூலோகத்திலே, அதிலும், குன்றுதோறும் உமக்குக் கோயில் கட்டிக் கொண்டாடும் தமிழ் நாட்டிலே, நாத்திகம் நாற்றமடிககிறதே, நீர், கவலையற்று இருக்கிறீரே, சரியா?" என்று வள்ளி நாயகி விளக்கமுரைக்க, வேலவன், அம்மையை நோக்கி அழகான ஓர் சிரிப்பருளிவிட்டு, "ஆசைக்கினியவளே! நீ பேசுவது அந்த ஈரோட்டுப் பாசறையினரையோ!" என்று கேட்டார். "அல்ல! அல்ல! அவர்களை அல்ல! அவர்கள் ஆறுமுகமும் வேண்டாம், மும்முகமும் வேண்டாம், ஆண்டவன், அன்பர் நெஞ்சிலுறையட்டும் என்று கூறுகிறார்கள். அவர்களை அல்ல நான் கூறுவது—ஆறுமுகம்— முருகா—வேலவா—பழனியப்பா—என்று பரம பக்தர்கள் போல, உமது புகழைப் பாடி, காவடி தூக்கி ஆடுகிறார்களே, அவர்கள் தானே, தமிழகத்திலே பெரும்பான்மையினர், அவர்களைத்தான் கூறுகிறேன்— அவர்கள் உம்மைப் போற்றுவதும் புகழ்வதும் வெறும் சூது—பொய்—முகஸ்துதி—ஏமாந்து போகிறீர்! அவர்கள், உண்மையிலே, உம்மை, உமது நடைமுறையைக் கேலி செய்கிறார்கள்—கண்டிக்கிறார்கள்" என்றாள் நாயகி. வேலவன் உண்மையாகவே கோபமடைந்து, "ஆஹா! சூரபதுமன் முதலானோர் தோற்றோடினதை நீ அறியாயோ, பெண்பாவாய்! நம்மை நிந்திக்கவும், நமது வாழ்க்கை முறையினைக் கண்டிக்கவும் முற்பட்ட மூர்க்கர் யார், எத்திக்கு உள்ளனர்கூறு—எறிகிறேன் வேலாயுதத்தை" என்று கூற, வள்ளி அம்மை சற்று களித்து, "இப்படி நானாகச் சொன்னால்தானே உமக்கு விஷயம் புரிகிறது. இதோ பாருங்கள் நாதா! தாங்கள் என்னைக் கண்டு, காதல் கொண்டு................" என்று விவரிக்கும்போது, வள்ளிநாயகன் இடைமறித்து, "வள்ளி! முழு உண்மை பேசு, நான் காதல் கொண்டதாகக் கூறுகிறாயே—உன் நிலையைக் கூறாமல்! இருவரும் கண்டோம் காதலித்தோம், என்று கூறு........" என்று திருத்த, அம்மை அதனை ஒரு புன்னகையால் அங்கீகரித்துக்கொண்டு, மேலால் பேசலானார்.

"என்னைத் தாங்கள், தங்கள் தேவியாக ஏற்றுக் கொண்டீர். முதலில் தேவயானை—பிறகு நான். அல்லவா? இந்த இருதாரமணத்தை, நீர் இடைவிடாமல் மயிலேறி வலம்வரும் இன்பத் தமிழ் நாட்டினர், கேவலம், அக்ரமம், அநீதி, என்று பேசி, ஏசி, இருதாரமணம் செய்துகொள்வோர், கடின சித்தமுடையவர்கள், பெண்களின் இருதயத்தைப் பிளப்பவர்கள், என்றெல்லாம் கடிந்துரைத்து, ஒரு மனைவி உயிருடனிருக்கும்போது வேறோர் பெண்ணைக் கலியாணம் செய்வதைத் தடுத்தாலொழிய பெண்களின் வாழ்வு வதைபடும் என்று வாதாடி, இருதார மணத்தை இனி அனுமதிக்கப் போவதில்லை, சட்டம் செய்துவிடுகிறோம் என்று கூறி, சட்டசபையில் இதுபற்றிக் கண்டவர் கண்டபடி பேசி ஏசி, கடைசியில் ஏகதாரம்தான் சட்டப்படி செல்லும், ஏதேனும் தக்க காரணம் காட்டி முதல் மனைவியை சட்டப்படி விலக்கினால் மட்டுமே, வேறு ஓர் மங்கையைக்கலியாணம் செய்து கொள்ளலாம், என்று சட்டமே செய்து விட்டனர்" என்றார் வள்ளியம்மை.

"சட்டமே செய்து விட்டார்களா? தமிழ் நாட்டிலா?" என்று கேட்டார் முருகர்.

"ஆமாம், ஆமாம்! அழகுக்குத் தெய்வம், தமிழுக்குத் தெய்வம் என்று உம்மை வழிபடுவதாகக் கூறும், அதே தமிழ் நாட்டிலேதான், உம்முடைய வாழ்க்கைமுறையையே குடும்ப அமைப்பையே, காதற் திரு

விளையாட்டிலேயே கண்டிக்கும் போக்கிலே, சட்டம் செய்து விட்டார்கள். கேட்டது முதல் எனக்குப் பெரும் விசாரம். தேவயானை வீட்டிலே இருநாளாய்! நாதா! தேவயானை இருக்க என்னை நாயகியாகத்தாங்கள் கொண்டது, கேலிக் குறியதாக, சட்டப்படி முறையற்றதாக, உமது பக்தர்களாலேயே கருதப் பட்டு, பேசப் பட்டால், என் மனம் வேதனை அடையாமல் இருக்குமா? உமது பக்தர்களுக்கு இது அடுக்குமா? முறையா? இருதாரம் கூடாது என்று சட்டம் இப்போது! இது நிலைத்து விட்டால் அடுத்த தலை முறையினர், 'இரண்டு பெண்டாட்டிக் காரர்கள்' என்று முன்னவர்களைக் கேலி பேசுவரே! பிறகு இரு தாரமுடைய உமக்கும் திருப்புகழ் குறையுமே! ஏனோ தாங்கள் இவை பற்றி யோசியாமல், மயிலுண்டு மலையுண்டு என்று இருக்கிறீர்?" என்று அம்மை விளக்கவே ஐயன், உண்மையாகவே கோபம் கொண்டு, "இரு தாரம் கூடாது என்று சட்டம் செய்தவர்கள், உண்மையில் என் வாழ்க்கை முறையை இகழ்ந்தார்கள் என்றுதான் பொருள். அவர்களைச் சும்மா விடக்கூடாது, கூப்பிடு மயிலை! கூறு, தமிழகத்திலா? இந்த அதர்மச் செயல் நடந்தது! வள்ளி! கோபிக்காதே, மறந்து விட்டேன், யார் அங்கே மந்திரி? அங்கு அடிக்கடி மாறிவிடுவதால் கவனம் வைப்பது கஷ்டமாகிறது" என்று கேட்க, "சட்டம் இயற்றிய தமிழகத்துக்கு இப்போது முதல் மந்திரி ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்" என்றார். "ஓமந்தூராரா? அவர் நமது பக்தராயிற்றே!" என்றார் முருகன்.'! பக்தன்செய்கிற செயலா இது! மற்றவர்கள் ஏதேதோ காரணம் காட்டி, இரு தாரம் கூடாது என்று வாதாடினாலும், அவர் உண்மையாகவே, உமது பக்தராக இருந்தால், என்னப்பன் முருகனே இரு தாரம் கொண்டார் என்று எடுத்துக் காட்டித் தடுத்திருக்க மாட்டாரா, சட்டத்தை" என்று அம்மைகூறிட, வேலவன், ஆமாம்! என் பக்தன் போல் வேட மிட்டு, என் வாழ்க்கை முறையையே கேவலமாக்கும் சட்டம் இயற்றிய ஓமாந்தூராரை நேரிலேயேசென்றுகேட்கிறேன்." என்று கூறிவிட்டு, மயிலேறி மறைந்தார்.

வள்ளி அம்மை, ஆனந்தமாக, பலகணி அருகே சென்று, தெய்வயானையின் மாளிகையை நோக்கிய வண்ணம், "குதிக்காதே தேவா! குமரன் போயிருக்கிறார், குறும்புச் சட்டத்தை நொறுக்க" என்று மெள்ளக்கூறியபடி இருந்தார்.

சிறிது நேரத்திற் கெல்லாம், மயிலேறும் பெருமாள், வந்தார், முகத்திலே வாட்டத்துடன்.

வள்ளி கோபக் குறியுடனேயே வரவேற்று, "ஏன்! உமது வாதம் ஏதும் பலன்தரவில்லையோ?" என்று கேட்க, முருகன், "வாதமா! ஓமந்தூரார் பேசவே இல்லையே என்னிடம்" என்று கூற. "ஏன்! பேசவே இல்லையா! இப்படி உம்மை அவமதிப்பவரை பக்தர் என்று நம்புகிறீரே! ஏன் பேசவில்லை? "என்று கேட்டார். முருகன், வேலாயுதத்தை ஒரு புறம் வீசிவிட்டு, மயிலை விரட்டியபடி, "கிருத்திகையாம் இன்று-கிருத்திகை யன்று மௌன விரதம் இருக்கும் வழக்கமாம ஓமாந்தூரார். அதனால் தான் பேசவில்லை"- என்றார். வள்ளியின் கோபம் கரை புரண்ட வெள்ளமாயிற்று--நான், இந்தச்சமயம் இங்கிருத்தல் ஆகாது என்று பறந்து சென்றேன், பக்கத்துச் சோலைக்கு.

✱

கட்டை விரல்

26-ம் பக்கத் தொடர்ச்சி

"உண்மைதான்! உன் வில்வித்தையின் பயனாக,........"

"அது மட்டுமல்ல ஆசிரியரே! என் மனம், தூய்மையானது."

"அப்படியா! பாபம்! பிரபஞ்சம் தெரியாமல் பேசுகிறாய். "நீயே, "முடியாது" என்று கூறும்படியான, காணிக்கையைக் கேட்க முடியும் என்னால்."

"முடியாது — என்ற சொல்லை வில்லேந்திய நான் கூறேன்."

"என்ன சொன்னாய்? ஏகலைவா! அஸ்திர வித்தை என்று எண்ணிவிடாதே, சத்யசோதனை மகா கடினமானது, இதிலே தோற்றவர்கள் தொகையே அதிகம். அனைவரும், சொன்ன சொல்லின்படி நடந்துவிட முடியாது. வீணாக, அவசரப்பட்டு, வாக்கை விரயமாக்காதே, நான் வருகிறேன்."

"ஸ்வாமி! எனக்கு வாதிடத் தெரியவில்லை, அதுமுறையுமாகாது, ஆனால், நான் தாங்கள் கேட்கும் காணிக்கை, எத்தகையதாக இருப்பினும், தருவேன்; தவறேன்"

"பிடிவாதமே பேசுகிறாய். பித்தா! முடியாது. நீயே மிரள மிரள விழிக்கும்படியாக காணிக்கை கேட்க முடியும் என்னால்—கேட்பது கஷ்டமா—கொடுப்பது அல்லவா கஷ்டம்—"

"கேளுங்கள் குருதேவா, கொடுக்கத் தவறினால், என்னிலும், கடையோன்........"

"ஓஹோ! அப்படி என்ன கேட்டுவிடப் போகிறாய், பொற்கட்டி, நவரத்னம், பொன்னுடை........இப்படி ஏதாவது கேட்பார், என்று எண்ணுகிறாய்!"

"நான், தாங்கள், என்ன கேட்பீர்கள் என்பது பற்றியே சிந்திக்கவில்லை ஸ்வாமி! என் சிந்தனை எல்லாம், ஏகலைவனிடம், குருதேவர் காணிக்கை கேட்டார், பெற்றார், என்று இருக்கவேண்டும், என்பதுதான்."

(21-ம் பக்கம் பார்க்க)

உழவரும் ஊராள்வோரும்

விவசாயத்தில் மூலதனம் படைத்தோர் ஒரு பகுதியும், உழைப்பைக் கொடுப்பவர்கள் மற்றோர் பகுதியுமாய் இருக்கிறார்கள்.

உழைப்பவர்களுக்கு தக்க வசதியும் ஊதியமும் கிடையாது. ஆதலால் விவசாயத்தில் சோர்வுற்று சந்தோஷமின்றி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் பலர் இருக்கிறார்கள். விவசாயத்தொழிலையும் மறக்கிறார்கள்.

உற்பத்தி பெருகாமல் தடைப்படுகின்றது என்பதைச் சொல்லி சீர்திருததம் கோரு தமிழ்நாட்டு விவசாய ஊழியர்கள் பலர் வேலூர் சிறையிலிருக்கிறார்கள்.

பலசீர்திருத்தங்களுக்கு வேண்டிய திட்டங்களுடன் மக்களிடையே ஊழியம செய்ய சந்தர்ப்பம் அளிக்க, சிறையிலுள்ள கம்யூனிஸ்டு அல்லாதாரை விடுதலை செய்யுமாறு, கேட்டுக்கொள்கிறோம்.

நாராயணசாமி நாயுடு.

அகில இந்திய காங்கிரஸ் விவசாய சீர்திருத்த கமிட்டிக்கு மகஜர்.

4-D பக்கத் தொடர்ச்சி

காவின் அருமையான உபதேசத்தை எவ்வாறு புறக்கணித்து நடந்து கொள்ளும்? ஆசியாவில் அமெரிக்காவின் போக்கு இது. ஐரோப்பாவிலும் இதே நிலைதான். அங்கு மக்களின் வாழ்வைச் செப்பனிடுவது அல்ல அதன் எண்ணம். சோவியத் முறையை அல்லது அதிகாரத்தைப் பரவ விடாமல் தடுப்பதும், தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்வதுந்தான் அமெரிக்காவின் அரும்பணி. சோவியத் வாழ்க்கைமுறை, அரசியல் அமைப்பு ஆகியவற்றில் அமெரிக்காவிற்கு அருவருப்பு இருக்கிறது. சோவியத்தின் வாக்குறுதிகளில் அமெரிக்காவிற்கு அவநம்பிக்கைபிறக்கிறது. எனவே, சோவியத்தின் ஆதிக்கம் மேலும் ஐரோப்பாவில் பரவவிடாமல் பார்த்துக் கொள்வதில் அமெரிக்கா முனைந்திருக்கிறது. உலகெங்கும் இன்று டாலர் ஏகாதிபத்தியம் பரவி இருக்கிறது. சில இடங்களில் ஆழமாகவும், வேறு சில இடங்களில் மேற்பூச்சாகவும் டாலர் வேரூன்றி இருக்கிறது.

பூலோக சொர்க்கம்!

வறுமை அங்கு இல்லை. வேலையில்லாக் கொடுமை அங்கு தலைகாட்டவில்லை. உழைத்து உருக்குலையும் கூட்டமும், அதனை உண்டு அனுபவித்து ஊதாரித்தனமாகச் செலவு செய்து சுகமனுபவிக்கும் சோம்பேறிகளும் அங்கு கிடையாது. மக்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்கு இயற்கையைமாற்றி அமைத்துக்கொள்ளும் ஆற்றலும், அதற்கான விஞ்ஞான வளர்ச்சியும் அங்குஏற்பட்டிருக்கிறது. போரிலே, ஹிட்லரின் காட்டுமுறையைக் கருவறுத்த பெருமை முழுதும் அந்த நாட்டையே சாரும். நாஜியர்களின் இராணுவ பலமனைத்தையும் தாங்கி நின்றுதோற்கடித்துப்பெற்றவெற்றி, மகிழ்ச்சிக் குரியதாக மட்டுமல்லாமல், வேதனைதந்த சம்பவமுமாகும். சோவியத்துக்கு ஏற்பட்ட பொருள் சேதம் ஏராளம். தரைமட்டமான தொழிற்சாலைகள் அநேகம். இவ்வளவையும் சீரமைப்பது என்பது இலகுவில் நடக்கக்கூடிய காரியமன்று. சீரமைப்பதில் உள்ள கஷ்டநஷ்டம் ஒருபக்கம் இருக்க, நிலையற்ற எதிர்காலத்தை ஆக்கும் பொறுப்பும் அதற்கு இருக்கிறது. தவறான பாதையில், முன்னேற்பாடு இல்லாமல், ஒரு அடி எடுத்து வைத்துவிட்டாலும், மீண்டும் ஓர் உலகப்போர் மூளுவது திண்ணம் என்னும் பயம் வேறே இருந்துகொண்டு இருக்கிறது. எனவே சோவியத்தின் பொறுப்பு, போர்க்காலத்தில் இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு இன்று அதிகமாக இருக்கிறது.

போர் நேரத்தில் சோவியத் நாட்டின் வாழ்க்கை முறையை வெளி உலகம் பார்த்துப் பரவசம் கொள்ளும் அளவிற்கு, சோவியத்நாட்டின் சாளரங்கள் சிறிது திறந்துவைக்கப் பட்டிருந்தன. போர் நின்றதும் அவைகளும் மூடப்பட்டுவிட்டன. எனவே மூடியுள்ள கையில் இருப்பது நஞ்சா நல்லுணவா என்னும் பயம் உலக அரசுகளிடையே ஏற்பட்டிருப்பது இயல்பேயாகும். காரணம் எதுவாக இருந்தபோதிலும் இடப்பட்டுள்ள இரும்புத் திரைக்குப்பின், நடைபெறுவது அறியாத அரசுகள், சோவியத் போக்கினைச்சந்தேகங்கொண்டுபார்ப்பதும், தவறாகத் திரித்துக்கூறி தங்களுக்கு ஆதரவு தேடுவதும், இன்றைய நிகழ்ச்சியாகிவிட்டது. மார்ஷல் டிட்டோவின் விவகாரம், சந்தேகங்கொண்டுள்ள அரசுகளின் பேச்சுக்குச்சாட்சியம் கூறுவதுபோல் இருக்கிறது. சிகப்பான பின்னரும், தனித் தனி தேசங்களுக்கிடையே சிக்கல் தீர்ந்து, மக்கள் என்ற ஒருமை உணர்ச்சி—உயர்ந்த கோட்பாடு—நிலவுவது முடியக்கூடாதா என்ற பயம், சோவியத் நண்பர்களிடமும் தோன்றி இருக்கிறது. இத்தகைய சந்தேகம் நியாயமானதாகும். இவ்வாறு சிந்திப்பவர்களை, எதிர்ப் புரட்சிக்காரர்கள், ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகள், பாசீச வெறியர்கள் என்று அர்ச்சிப்பது எளிது. நேர்மையான சந்தேகத்தை நிவர்த்திக்கும் முறையல்ல அது. சந்தேகிப்பவர்களைத் தூற்றுவதற்கு உபயோகிக்கப்படும் கம்யூனிஸ்ட் அகராதியில் உள்ள வார்த்தைகள் அவை என்பதை நாம் அறிவோம். வேண்டுவது விளக்கம், வசவு அல்ல!

குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்ட போதிலும், சோவியத் நாட்டில் மற்ற நாடுகளில் உள்ளது போன்ற குறைபாடுகள் கிடையாது என்பது முக்காலும் உண்மையாகும். நடைமுறையிலே தோஷம் இருக்கலாம். மூலமுறையிலே குறையில்லை. நாட்டுநிலைக்கேற்ப, முன்னுள் ஏற்பட்ட விளைவுப்படி, எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளில், நெடுபிடியோ, இலகுவான போக்கோ இருப்பது வெறுக்கக் கூடாத விஷயமாகும். என்ன இருந்தாலும், சோவியத் சொர்க்க பூமி என்பதில் ஒருதுளியும் ஐயமில்லை! ஐரோப்பாவில், உள்ள சோவியத் முக்கியம் வாய்ந்ததால், அந்தப் பகுதியை மட்டும் படத்தில் காட்டியுள்ளோம்.

அவன் வைத்த தீ

முப்பதாண்டுகளுக்குள்ளாக இருமுறைபோர் உலகத்தை இரண்டொரு வல்லரசுகள் பங்கு போட்டுக் கொள்ள, எங்கு தேடியும் தனக்கு இடங்கிடைக்காமல், இருந்த ஒன்றிரண்டு சிறு துண்டு நிலத்தையும், முதல் போரில் வெற்றிகண்ட வல்லரசுகள், போரின் நஷ்ட ஈடாகத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டன. உழைப்பையும் வறுமையையும் தோற்ற நாட்டுக்குக் காணிக்கையாக்கிவிட்டு, அவர்கள் உற்பத்திச் செய்வதை எல்லாம் தானாக்கிக் கொண்டன வர்சேயல்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் வல்லரசுகள். தோல்வியால் ஏற்பட்ட வேதனை ஒருபக்கம், உடன்படிக்கை என்னும் பெயரால் இழைத்த கேடு மற்றொரு பக்கம், என்றுமுள்ள உலகில் இடங்கிடைக்காத ஏமாற்றம் வேறொரு பக்கம், ஒரு சாமான்ய மனிதனைச் சர்வாதிகாரியாக்கிற்று. வெற்றிபெற்ற வல்லரசுகளால் பழிவாங்கும் குணத்தோடு, மனிதாபிமானத்தைப் புறக்கணித்துவிட்டு, புகுத்திய பாழ்பட்ட வாழ்வு, நடுத்தர வகுப்பினரை நாசத்திற்குள்ளாக்கி விட்டது. வாழ்வுதேடி வாடிக்கிடந்தவர்களுக்கு வாழ்வளிக்கும் அவதார புருஷனாக ஹிட்லர் காட்சி அளித்தான். வேறுவகை தெரியாததால் வீழ்ந்தனர், வாலிபர்கள் அவன் உரையில். சோவியத் பீதியைக் கிளப்பிவிட்டு, கம்யூனிசம் பரவுவதைத் தடுக்கப் போவதாகப் பறைசாற்றி, அமெரிக்காவின் ஆதரவையும் இங்கிலாந்தின் ஒத்துழைப்பையும் பெற்றான் ஹிட்லர்.

உடன்படிக்கை நிபந்தனைகளை ஒன்றன் பின் ஒன்றாக உடைத்தெறிந்தான். சோவியத் முறையில் ஜனநாயக வல்லரசுகள் கொண்டிருந்த வெறுப்பு, ஹிட்லர் போக்கில் மறைந்துகிடந்த போர்ப்பாதையைக் காணமுடியாத அளவிற்குப் பார்வை இழக்கச் செய்துவிட்டது. போர் மூண்டது. ஆரம்ப சூரத்தனம் முடிவு வரையில் நிற்கவில்லை. மின்னல் வேகத்தாக்குதல், மின்னல் போன்றே தோன்றி மறைந்தது. தோல்விமுடிவில், நீண்ட நாளைக்குத் தலை தூக்க முடியாத முடிவைக் கொடுத்துவிட்டது. ஹிட்லர் முறையால் ஜெர்மன் மக்கள் பெற்றது அன்றும் சாவுதான் இன்றும் சாவு தான். வயிறு நிறைய அன்றும் உணவு கிடைக்கவில்லை, இன்றும் அதற்கு வழி பிறக்கவில்லை. வாழ்வளிப்பதாக வாக்குறுதி தந்தான். ஆனால், போர் முன்னணியில் இளைஞர்களைப் பலி கொடுத்தான். உணவு – உடைப் பெருக்கத்திற்கு உற்பத்திசாதனங்களைப் பயன்படுத்துவதை விட்டு, படித்த வாலிபர்கள் கையில் பளபளப்பான போர்க்கருவிகளைக்கொடுத்துப் போர்க்களத்திற்கு அனுப்பினான். ஒருமனிதனின் ஆசாபாசங்களுக்கு, பல்லாயிரக் கணக்கான மக்களை பலி யிட்டான். கலைத்துறை- தத்துறை- அனைத்திலும், ஒரே கருத்து- அதுவும் தனது போர் நிலைசிபத்திற்கு ஏற்றகருத்து அமுலிலிருக்க வேண்டுமெனறு, திட்டமிட்டு, துப்பாக்கி முனையில் அதனை நிறைவேற்றினான். எதிர்த்தோரை, ஈவிரக்கமின்றி ஒழித்துக் கட்டினான். வேறு கட்சிக்குத் தனது திட்டத்தில் இடமில்லை என்பதை நிலை நாட்டினான். தேசத்தின் கௌரவம் காக்கப் பட வேண்டுமென்னும் போதையையூட்டி, இதற்கு மக்களின் வாழ்வு பெரிதெனக் கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு கொள்வது தேசத் துரோகம் என்றும் செப்பி, போர்க்களத்திற்கு மக்களை இழுத்துச் சென்றான். வெற்றிக்குப் பதில் வீழ்ச்சியைத் தேடிக் கொடுத்து விட்டு மறைந்தான்.

வெளிநாட்டில் சென்று போரிட்டுப் பழகிய மக்கள் கண் முன்னர், தங்களை வெற்றிகண்ட வேற்று நாட்டினர், சொந்தநாட்டில், தங்களுக்குள் சடார்விளைவித்துக்கொண்டு, தங்களுக்குச் சங்கடத்தைப் பெருக்கி வருவதை, சந்தோஷத்தோடு ஆதரிப்பார்கள் என்று சொல்வது முடியாது. எதிர்க்கும்சக்தியையிழந்திருக்கும் காரணத்தால், சொந்த நாடு சூறையாடப் படுவது கண்டும், உள்ளத்தில் கோபம் மூண்டாலும், முகத்தில் சோகம் கப்பினாலும், கள்ளம் கபடமில்லாம் கொண்டுள்ள கருத்தினை வெளியிட முடியாமல், கண்ணில் நீர் ததும்ப, கருத்தற்றோர் முடிவிற்குக் காத்து நிற்கிறார்கள். ஜெர்மன் மக்களுக்கு வந்துள்ள இடுக்கணைத் துடைத்துக் கொள்வதற்கு நல்லதோர் வாய்ப்பினை—தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பொறுப்பை, அந்த நாட்டு மககளுக்கே விட்டு விடுவதற்கு பதில், மனிதாபிமானத்தோடு பிரச்னையை அணுகுவதற்கு பதில், சொந்த இலட்சிய வெற்றிக்கும், இராஜ தந்திர முறையை உலகுக்கு உணர்த்துவதற்கும் ஏற்றதோர் இடமாக, பெர்லினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறது அமெரிக்காவும் — இரஷ்யாவும். பேச்சு பலனளிக்காமல் போனால், பலப் பரீட்சைதான் அடுத்த கட்டம். மறுபடியும் ஒரு போர் மூளுமானால், மனித சமுதாயம் இதுவரையில் அருமையாக வளர்த்துவந்த நாகரிகம் அனைத்திற்கும் முடிவுகாலம் நெருங்கிவிட்டது என்பது தான் அதற்குப் பொருள்.

ஹிட்லர். விதைத்த விதையின் விளைவுதான் இவ்வளவும். அவன் வைத்துவிட்டுப்போன தீயின் கொடுமையை இன்றும் ஜெர்மன் மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

புரட்சி கண்ட பூமி

புரட்சி, புரட்சி! எழுத்திலே புரட்சி! எண்ணத்திலே புரட்சி எதிலும் புரட்சி தான்! அறிஞர்கள் பலர் தோன்றி, மக்களுக்கு அறிவொளி வழங்கிய சிறப்புக் கொண்டுள்ள நாடு. மக்களை மதிக்காது மமதையோடு தரணியாளுவது தான் தனதுகடமை என்று இறுமாப்போடு கூறி, காமக்களியாட்டத்திலே மூழ்கி, கருத்தறியாது ஆண்ட கயவனை, குடிகளுக்கு இன்னல் பல விளைவித்த கொடுங்கோலனை முதல் முதலாக விரட்டிய பெருமை, அந்த நாட்டுக்கே உண்டு. இவ்வளவு இருந்தும், அந்த நாட்டில் நிலையான அரசு என்றும் இருந்ததில்லை. இருபத்து நான்கு மணி நேரம் தொடர்ந்து ஒரு மந்திரிசபை அதிகாரத்திலிருக்கும் என்று சொல்லமுடிவதில்லை. வல்லரசுகளிலே அதுவும் ஒன்றாக இருந்தது. இந்தப் போருக்குப்பின், அதன் பொருளாதாரம் தகர்ந்து போனதோடு மட்டுமல்லாமல், மீண்டும் விரைவில் தலை தூக்குமென்றும் சொல்வதற்கில்லை. எவ்வளவு பலக் குறைவு ஏற்பட்டாலும், அதனுடைய ஏகாதிபத்ய வெறி குறைவதைக் காணோம். என்றும் ஆசியாவில் ஆதிக்கம் செலுத்தலாம் என்று இன்னமும் கனவு கண்டு கொண்டிருக்கிறது.

உள்நாட்டிலே குழப்பம். நீர்மேல் குமிழிபோல், அடிக்கடி மந்திரி சபைகள் கவிழ்ந்தவண்ணமிருக்கின்றன. நாளாக நாளாக கட்சிகளுக்குள் போராட்டம் வலுத்து வருகிறது. இலட்சியத்திலே உருவான முறையில் வேற்றுமை இல்லையானாலும், பல கட்சிகள் அங்கு இருக்கப்பார்க்கிறோம். எந்த ஒரு தனக்கட்சிக்கும், மந்திரி சபையைத் தனிமையில் அமைப்பதற்கு, செல்வாக்கு இருப்பதில்லை. கம்யூனிஸ்டுகளாலும் முடிவதில்லை; சோஷலிஸ்டுகள் நிலையும் அதுதான். மற்றக் கட்சிகளைக் குறித்துச்சொல்வதற்கே அவசியமில்லை.

விடுதலைவீரன் தெகோல், மறுபடியும் அரசியல் அரங்கில் தோன்றி இருக்கிறான். பலம் பொருந்திய சர்க்கார் வேண்டுமென்று பேசுகிறான். பலம் பொருந்திய சர்க்கார் இருக்கவேண்டியதுதான். ஆனால் அந்தப் பலம் எதற்குப் பயன்படுத்தப்படும்? மக்களுக்கு வாழ்வளிக்கவா? அல்லது அவர்களின் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கவா? என்பதை முன்கூட்டியே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். தெகோலின் போக்கையும், அவனுக்கு அதிக ஆதரவு காட்டும் கத்தோலிக்கர்களையும் கருதும்பொழுது, தெகோல் கையில், அதிக அதிகாரம்சிக்குவது விரும்பக்கூடிய பலனைக்கொடுக்கக் கூடும்என்று நம்புவதற்கு இடமில்லை. டாலரும் அவனுக்கு ஆதரவு காட்டுகிறது! உள்நாட்டிலே குழப்பம், அதன்பிடியில் சிக்கியுள்ள நாடுகளில் கொந்தளிப்பு, மட்டமான வாழ்க்கைத் தரம், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல்வாதிகளிடையே அதிகாரப்போட்டி இந்தத் தன்மையில், அவனி கண்டு மெச்சிய பிரான்ஸ், இன்று சீரற்ற

பூமியாக விளங்குகிறது! பரிதாபத்துக்குரிய விஷயம்!

இத்தாலி,

மாவீரன் மாஜினி கண்ட கனவு, உழவர் நண்பன் காவூராலும் — இராணுவ வீரன் கரிபால்டியாலும் உருவாக்கப்பட்டது. நாட்டுக்கு விடுதலை கிடைத்து விடுவதினாலேயே, நல்லாட்சி தானாக அமைந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. மக்கள் தங்கள் உரிமைகளைத் தெரிந்திருக்கவும், தங்கள் தேவைகளைத் தாங்களேதான் முன்வந்து கூட்டாகத் தேடிக்கொள்ளவேண்டும் என்னும் உயர்ந்தபண்பும், அதற்கான கல்வியும 'தன்னாலும் ஆகும்' என்ற தன்னம்பிக்கையும் இருந்தாலன்றி, நல்லதோர் ஆட்சிமுறையை அமைத்துக் கொள்வது முடியாதகாரியம். வளமான நாக்குடையோர், கனத்தகுரல் படைத்தோர், மக்களின் மூளைபலம் தெரிந்தோர், சூழ்நிலைக் கேற்ப நடிக்கக் கற்றுள்ளோர், சுயநலத்தைப் பெருக்கிக் கொள்வதிலே குறியுடையோர், அரியாசனம் ஏறும் வாய்ப்பினைப் பெறுவாராயின்,--மக்கள் சம்மதம் அவர்களுக்கு இருக்குமாயினும்--அவர்கள், முன்னாள்கொடுத்த வாக்குறுதிகளை உடைத்தெறிவதைப் பார்க்கலாமேயன்றி, அதனை நிறைவேற்றுவதைப் பார்க்க முடியாது. மக்களின் கவனத்தை ஈர்க்க, அவர்கள் அன்பையும் ஆதரவையும் பெற, மக்களுக்கு உரிமையுடைய அதிகாரத்தை அபகரிக்க, ஆரம்பத்தில் இவ்வாறு கூறப்பட்ட ஏமாற்று வார்த்தைகளேயன்றி, நிறைவேற்றும் நோக்கத்தோடு கொடுக்கப்பட்டவைகள் அல்ல. மூர்க்கன் முசோலினி, மேல்குறித்த அரசியல் ஒழுக்கத்தை நன்கு நடைமுறையில் காட்டிய கண்ணியவான் ஆவான். ஆரம்பத்தில் சோஷலிசம் பேசி, முடிவில் சர்வாதிகாரியான சழக்கன் அவன். அவனுடைய ரோம சாம்ராஜ்ய கனவு, ரோம் நாட்டு மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமே என்னும் தூய எண்ணத்தை அவனிடத்தில் தோற்றுவிக்காமல் போய்விட்டது. போப் ஆண்டவரும், அவன் அளித்த அபயத்தால், அவன் அக்ரமங்களைக் காணாதவர் போல் இருந்துவிட்டார். அவன் சாம்ராஜ்யத்தைக் காணவில்லை, ஆனால் இன்னும் பல ஆண்டுகள் சென்ற பின்னரும், நாட்டில் சுபீட்சம்ஏற்படாமல், மக்கள் சங்கடங்கள் பலவும் அனுபவிக்க, முன்னேற்ற வழிகளை மூடிவிட்டுப் போய்விட்டான். இத்தாலி இன்று எரிந்த வீடாகக் காட்சி அளிக்கிறது. கம்யூனிஸ்டுகளுக்கும் சமூக ஜனநாயக வாதிகளுக்குமிடையே உள்ள மாச்சரியம், மூன்றாவது ஒரு கட்சிக்கு, வெகு வெகு பிற்போக்கான விருப்பத்தகாத கத்தோலிக்கக் கட்சிக்கு ஊராளும் பணிவை தேடித் தரும் தன்மையில் இருக்கிறது. வாடிகனால் வளம் கிடைக்காது. ஆனால் வறுமைக்குப் பொறுமை காட்ட வேண்டுமென்ற போதனை ஏராளமாக—செவி மந்தமாகும்வரைக்கும் கிடைக்கும். அதனால் பசியும் போகாது—பாரும் சீராகாது!

பாசீசப் பார்!

பாசீசப் பேய் உலகிற்குச் செய்தக்கேட்டினை, கற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், கண்டதோடுமட்டுமல்லாமல், சொந்தத்தில் அனுபவித்த பின்னரும், பாசீச வளர்ச்சிக்கு வல்லரசுகள் என்று பெயர் தாங்கி இருக்கும் நாடுகள், வாழ்த்துக் கூறுவது வேடிக்கை நிரம்பிய வேதனையாகும். பாசீச பிராங்கோ, ஸ்பெயின் மக்களின் விடுப்பத்தைப் பெற்று, அந்த நாட்டின் ஆளும் உரிமையைப் பெற்றிருப்பவன் அன்று. ஹிட்லரும் முசோலினியும் சேர்ந்து கொடுத்த பிச்சை பிராங்கோவின் பதவி.

மக்கள் விழிப்புக்கண்டு ஸ்பெயின் நாட்டு மன்னன் அல்பான்சோ முடி துறந்தான் முன்னொருநாள். குடியாட்சி வேண்டிய அளவு வேரூன்றாத நிலையிலேயே, மக்களாட்சிப் பயிரை மேய்ந்து பசி தீர்த்துக் கொண்ட மக்கள் விரோதி பிராங்கோ! சென்றபோரில் அவன் மதில்மேல் பூனைபோலவே நடந்து கொண்டான். ஜனநாயக அரசுகள், அவனை, இமைமூடாமல் கண்காணித்து வந்தன அன்று. இன்று, அமெரிக்கத் தூதுவர்கள் அவனுடன் சரசசல்லாபம் செய்கிறார்கள். ஐக்ய நாடுகள் சபையில் பிராங்கோவின் குரல் எதிர்காலத்தில் கேட்கப் பட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

கெமால்நாடு

இறந்த காலப் பகை, நிகழ்காலத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் கூட—அதனை மறக்கடிக்க எவ்வளவு முயன்றபோதிலும் கொஞ்சமாவது நிலைத்திருக்கிறது என்பதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. உதுமானிய சாம்ராஜ்யம் சிதைக்கப்பட்டு மண்டலாதிபதி மதத்தலைவராக இருந்தவர் விரட்டப்பட்டு, பூர்வ கால ஆச்சார அனுஷ்டானங்கள் மாற்றப்பட்டு, புதிய நிலையைத் தோற்றுவித்து, மக்களாட்சி முறையைக் கண்டு, நாகரிக நாடுகளில் ஒன்றாகத் துருக்கி நாட்டை கெமால் தோற்றுவித்தபின்னரும், ஜார்ஆட்சி காலத்து ரஷ்யாவோடு துருக்கிக்கு ஏற்பட்ட பிணக்கின் விளைவாக வளர்ந்த பகை, இன்றும் உள்ளூரப் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. டண அரசு தொலைந்து சோவியத் அரசு ஏற்பட்டும், மதஅரசு மாய்ந்து மக்களாட்சி மலர்ந்தும், விரிந்த மனம் நிலவக்காணோம். பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டிய சிறுசிறு விஷயங்களுக்கெல்லாம், பரிகாரம் தேடிக்கொள்வதற்குப்படைபலத்தை நம்பி வாழ்வதும், இருநாட்டின் எல்லைஓரங்களிலும்நிரந்தரமாகஇராணுவத்தைவைத்துக் காப்பதும், மனிதப் பண்பு வளம் பெறுவதற்கு மேலும் சில காலம் செல்லவேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இதன் விளைவாக, துருக்கிக்கு 'நோயாளி' என்ற அவச்சொல் தொலைந்தபோதிலும், மக்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியாத பிணி அரசாகத்தான் இன்றும் இருந்துவருகிறது என்பது வருந்தக்கூடிய விஷயமாகும்.

அஸ்தமித்த சூரியன்!

பிரிட்டிஷ் நிபுணர்கள் கடற்படைத்தொழிலைக் கற்பிக்க, பிரெஞ்சு நிபுணர்கள் தரைப் படையைத் தயாரிக்க, ஆசிரியனையும் உழவனையும் அமெரிக்கா உருவாக்க, பருத்தவனை ஜெர்மனி திறமைசாலியாக்க, உதயமாகி அஸ்தமித்தது ஆசிய சூரியன்!

மன்னனை மகேஸ்வரன் என்று

பூஜிக்கும் மனவளத்தோடு இருந்த மக்கள், ஐம்பது ஆண்டுகளுக்குள் உலகமே நடுங்கும்படியான நவீன தொழில் திறம்பெற்று, பல காலத்திற்கு முன்னரே இயந்திர நாகரிகத்தில் தலைசிறந்து விளங்கிய நாடுகளும் அச்சம் கொள்ளும் முறையில் முன்னேறுவது என்றால், அதனை முதல்தரமான அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். முயற்சியுடைய மனிதனுக்கு எதுவும் எளிது என்பதை நிலைநாட்டினவர்கள் ஜப்பானியர்கள். மனித ஆற்றலின் ஆழத்தை வெள்ளை நிறத்தவர் வெட்கப்படக் கூடிய முறையில், வெளிக்குக் காட்டியவர்கள் ஜப்பானியர்கள்.

சனாதனமுறையை அவர்கள் அறியாராயினும், ஏதோ ஓர் ரூபத்தில் பிறப்பிலே உயர்வு தாழ்வு கருதும் போக்கு அவர்களிடமும் ஓர்காலத்தில் இருந்தது. கடல் கடக்கக் கூடாது; வெளிநாட்டாரோடு உறவாடக் கூடாது; என்பன போன்ற பிற்போக்குத் தன்மையைப் பெரிதாகக் கொண்டு மதித்து நடந்து வந்தவர்கள்தான். அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டார்கள் ஒரு நொடியில். பண்ணை முறையும் மறைந்தொழிந்தன. பார்லிமெண்டு முறையையும் மேற்கொண்டார்கள். முறையைத்தான் மேற்கொண்டார்களேயன்றி, மூலக்கோட்பாட்டை அல்ல. சாற்றைவிட்டுவிட்டு சக்கையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். மக்களுக்குக் கட்டுப்படாத அமைச்சர்கள், மன்னன் ஏவல் வழி நிற்கும் இராணுவத் தலைவர்கள், பலம் பொருந்திய ஆலை அரசுகள், அவர்கள் ஆட்டிப்படைத்தபடி ஆடும் மந்த மதி கொண்ட மக்கள்; இவைகள் பார்லிமெண்டு முறைக்குப் பொருத்தமற்ற அம்சங்கள்.

பிறந்த நாடோ சிறியது; பக்கத்திலுள்ள இடங்களோ வெள்ளையர்களால் சொந்தம் பாராட்டப்படுகிறது. ஜனத்தொகையோ ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது. வீட்டிலோ தின்பதற்கு ஒன்றுமில்லை. எரிமலை வேறு மிரட்டிக்கொண்டே இருக்கிறது.

இயந்திரங்களைப் பெருக்க நுண்ணறிவு இருக்கிறது, உற்பத்தியைப் பெருக்க ஆற்றல் மிகுந்தமக்கள் நிறைய இருக்கிறார்கள்; இவ்வளவும் இருந்தால் மட்டும் போதுமா? மூலப் பொருள் வேண்டும்; உழைப்பால் உருவாக்கப்பட்ட பொருள்களை விற்க மார்க்கெட் வேண்டும்; வழிவகை இல்லையே! இந்த வகையில் தங்களினும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வந்த வெள்ளையர்கள் அல்லவோ எங்கும் வியாபித்து இருக்கிறார்கள்! மார்க்கம் தேடினால், அவசியமும் நீக்கப்படாமல, மூண்ட கோபமும் தணியாமல், கொரியாவை அடிமையாக்கவும், மஞ்சூரியாவை மஞ்சுகோவாக்கவும், ரஷ்யாவோடு போர் தொடுக்கவும், சைனாவோடு சண்டைக் கிழுக்கவுமான நிலை ஏற்பட்டுவிட்டது ஜப்பானுக்கு.

உலக மார்க்கெட்டுகளில் எல்லாம் ஜப்பான் அமெரிக்காவோடும், இங்கிலாந்தோடும் போட்டி இட ஆரம்பித்தது. அவர்கள் விலையிலும், தனது பொருட்களின் விலையைக் குறைத்துக் கொடுக்கவேண்டிய நிலை ஜப்பானுக்கு உண்டாயிற்று. எனவே ஜப்பான் தொழிலாளர்கள் அதிக மணி நேரம் உழைக்கவும், அரை வயிறு உண்ணவும், வேறு அவசியமான தேவைகளைக் குறைத்துக் கொள்ளவுமான கெடுபிடியில் வாழ்ந்து வரவேண்டியவர்களானார்கள். வியாபாரப்போட்டி போர்க்களத்தில் வந்துவிடிந்தது. அமெரிக்காவின் கையில் இன்று ஜப்பானின் குடுமி சிக்கிக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலையாக மட்டுமில்லாமல், முதல் தரமான போர்த்தளமாகவும் ஜப்பான் அமைக்கப்படுகிறது அமெரிக்காவால். மற்றொரு யுத்தத்திற்கு ஜப்பான் பாசறையாக்கப்படுகிறது.

நாட்டின் அமைப்பு, ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு, மற்ற சூழ்நிலை, ஜப்பானைப் போர்ப் பாதையில் கொண்டுபோய்விட்டது என்பது வரலாற்றின் முடிவு. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் எவர் எவர் என்பதை, அந்த வரலாறே எடுத்துக் காட்டுகிறது. இந்தப் பாடம் மறைக்கப்பட்டு, ஜப்பானிய போர்க்கால மந்திரிகளில் சிலர் தூக்கிலிடப்பட்டனர்; வேறு பலர் சிறையில் தள்ளப்பட்டனர். இது அக்கிரமம்-மனித தர்மமன்று என்று ஏடு இடித்துக் கூறுகிறது. ஆட்டிப் படைக்கும் அதிகாரம், இக்கொலைச்செயலை நீதி-சரிநீதி என்று சாதிக்கிறது. பலமே நீதியாகிறது, இருபதாம் நூற்றாண்டிலும்!

ஜப்பானின் எழுச்சியும்—வீழ்ச்சியும் ஆசிய நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கையாகும். ஏகாதிபத்திய உறவை அறவே அறுத்துக் கொள்ளவும், முதலாளித்துவ முறையை உதறித் தள்ளவுமான படிப்பினையை, ஜப்பான், தனது வீழ்ச்சியின் மூலம் நமக்கு அறிவிக்கிறது.

நல்ல தீர்ப்பு!



மக்களை மறந்து, அவர்கள் துக்கத்தைத் துடைக்காது, செய்வதறியாது துடிக்கும் தேய்ந்த தேகத்தினரைச் சுட்டுவீழ்த்தி, சுகபோகத்தில் புரண்டுகொண்டு, பிறர் தேடித்தந்த அதிகாரத்தால் அந்தஸ்து பெற்று, பந்துமித்திரர்களுக்கு, பதவி தேடித்தந்து, பாராண்டுவரும் சியாங் தம்பதிகளுக்கு, விமானம் தயாராகிறது, வெளிநாட்டில் தஞ்சம்புக! ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆகாய விமான தளத்திலேயே, பலவித மரியாதைகளுடன் அம்மையாரை வரவேற்ற அமெரிக்க ஜனாதிபதி, அம்மையாரே அவரிடம், இருக்கும் இடம் தேடிச் சென்றும், 'அமருக சில நிமிஷம்' என்று ஆள் விட்டுச் சொன்னாராம் அந்த நாட்டுத் தலைவர். அம்மையாரின் அழகும்—ஆற்றலும் மட்டும் போதாது அமெரிக்க ஆயுதத்துக்கு என்ற அரிய பாடத்தை, அந்த அலட்சிய வார்த்தைகள் போதிக்கின்றன.

அதே நேரத்தில் சீனாவில் தளபதி சியாங், சன்யாட்சன் சிலை முன்னர் தற்கொலை செய்துகொண்டு மடிவேன், சீனா வீழ்ச்சியுற்றால் என்று சூளுரைத்தார். அம்மையாரின் கண்ணீரும் தளபதியின் சூளுரையும் ட்ரூமனின் இருதயத்தை இளகச் செய்யும் ஆற்றல் அற்றுப்போயின!

போர் தீவிரமாக நடக்கிறது. சியாங்கின் படைகள் சரணாகதி அடைந்த வண்ணம் இருக்கிறது. எதிர்த்துவரும் வெள்ளத்தை, சமாதான அணையால் தடுத்துவிடலாம் என்ற தந்திரப் பேச்சும் பலிக்கவில்லை.

'சியாங் தம்பதிகள் போர் குற்றவாளிகள்' என்று பிரகடனம் கிளம்பி இருக்கிறது வெற்றிப்படையின் தளபதி இடமிருந்து. 'கண்டால் கைதியாக்குங்கள்' என்ற கட்டளையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சீனமக்கள் தரும் தீர்ப்பு இது! மக்களை மறந்த மண்டலாதிபதிகளுக்கு

மக்கள் பலமுறை தந்திருக்கிறார்கள் இத்தகைய தீர்ப்பு!!

உரிமைக் கனல்

உரிமைக் கனல் பறக்கிறது சிறிய தீவில், சென்ற மூன்று ஆண்டுகளாக. மதித்து நடக்கும் மதி, இன்னும் அந்த குட்டி ஏகாதிபத்தியத்திற்கு ஏற்படவில்லை. அம்பியும் குழலியும் காற்றில் பறக்கும் நிலையைக் கண்டும், கருத்தில் தெளிவு ஏற்படவில்லை, இந்த இலவம் டஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு. சரண்டலை என்றும் போல் நடத்தலாம் என்று கனவு காண்கிறது.

ஜபபான் படைஎடுப்பின்போது மக்களை மறந்து, சரண்டலை மறந்து, கம்பி நீட்டிய ஏகாதிபத்தியத்திற்கு, பலவித கஷ்ட நஷ்டங்களுக்குப் பின் விடுபட்டு குடியாட்சி அமைத்துள்ள நாட்டை அடிமை கொள்ள ஆசைப்படுவது அடுக்குமா? அழகாகுமா? என்ற நேர்மை உணர்ச்சித் துளியும் காணோம். ஆபத்தில் விட்டு ஓடிவிட்டோமே, மீண்டும் அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்பதில் தோன்றவேண்டிய வெட்க உணர்ச்சியைக் கூட இதனிடம் எதிர்பார்க்க முடியவில்லை!

சொந்தநாட்டை ஹிட்லர் பிடித்துக் கொண்டபோது, நமது மனம் என்ன பாடுபட்டது, அடிமை வாழ்வை எண்ணும் பொழுதே எவ்வளவு ஆத்திரம் கொப்பளித்துக்கொண்டு வந்தது, இழந்த சுதந்திரத்தை எப்பாடு பட்டாகிலும் பெற்றே தீருவது என்பதில் எவ்வளவு உறுதிகொண்டோம், நம்மைப் போலத்தானே ஜாவா மக்களும், அவர்கள் வெறும் பதுமைகளன்றே, அவர்களை விடுதலை செய்வதுதான் விவேகம், என்று நினைத்து நீதி வழங்கவேண்டிய, பிறர் குறுக்கீடில்லாமலே நேர்மையாக நடந்து கொள்ள வேண்டிய டச்சு ஏகாதிபத்தியம், துப்பாக்கியால் சுதந்திர அரசை அழித்துவிடப் பார்ப்பது விந்தையாகத்தான் இருக்கிறது.

ஜாவாவின் சுதந்திரத்திற்காக, இந்தியாவில் கூட்டப்பெறும் ஆசிய நாடுகள் மாநாடு, ஜாவாவின் சுதந்திரத்தைத் தேடித் தருமென்றே நம்புகிறோம். வெறும் விளம்பரம் தேடும் முறைகளில் இதுவும் ஒன்றாக முடிந்துவிடாமல், வெற்றிபெற வேண்டுமென்று விழைகிறோம்.

✻

திருக்குறள்-ஓர் திருப்பணி

4-ம் பக்கத் தொடர்ச்சி

யாக அமைகிறார் என்பதைப் புலவர் வரதராசனார்,

"எதிர்காலத்தமிழ்நாட்டைப்பற்றி எண்ணத் தெரியாதவர்களுக்குத் திருவள்ளுவர் இன்றும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார்; எண்ணத் தெரிந்தவர்களின் எண்ணங்களைச் செம்மைப்படுத்தித் தெளிவூட்டும் தெள்ளியராகவும் விளங்குகின்றார். அவர் எழுதியுள்ள பத்துக் குறளும் நாட்டுப் பற்று உடைய ஒவ்வொருவரும் நாடோறும் காலையும் மாலையும் நாட்டை நினைந்து உருகி வழிபடும் வழிபாட்டிற்கு ஏற்ற பாக்களாகவும் உள்ளன என்று கூறலாம்."

"மிகுதியானவிளைவும் தக்கசான்றோரும் குறைவற்ற செல்வரும் வேண்டும். தனியுடைமை நீங்கும் எதிர்காலத்தில் 'தாழ்விலாச் செல்வரும்' வேண்டும் என்பதற்கு ஈடாக 'தாழ்விலாச் செல்வமும்' வேண்டும் என்று மாற்றி எண்ண வேண்டிய நிலைமை மெல்ல அமைந்து வருகின்றது." என்று கூறுகின்றார்.

அந்நாட்டுக்கு, அமையவேண்டிய அரசு பற்றியும், வள்ளுவனார் கூறுதிருந்தாரோ! இல்லை! அருமையான முறையிலே, அதுபற்றியும் கூறியுள்ளார் என்பதை அறிஞர் சேதுப்பிள்ளை,

"அரசியலைக் குறித்துத் திருவள்ளுவர் கூறும் அறிவுரை எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் ஒத்ததாகும். இவ்வுலகில் ஆசை பிடித்த அரசர் எந்நாளும் உண்டு. 'ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்' அதற்கு மேல் ஆகாயத்தையும் கட்டியாள ஆசைப்படுவர். இது படைச் செருக்குற்ற மன்னர் இயற்கை.

இவ்வாறு ஆசைவெறி பிடித்தலையும் அரசர்க்குத் திருவள்ளுவர் ஒன்று கூறுகின்றார். நெறியலலா நெறிச் சென்று, பிறர் கதறக் கதறக் கைப்பற்றிய நாடும் செல்வமும் வந்த வழியே போய்விடும் என்பது அவர் வாக்கு.

'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்ற அருமைத் திருக்குறள் ஓர் அரசியல் மந்திரம். அழுகையில் வந்தது அழுகையிற் போகும் என்பது வள்ளுவர் வாய்மொழி. பிறர் வடிக்கும் கண்ணீரில் ஓர் அரசன் பெற்ற நாடு, அவன் வடிக்கும் கண்ணீரில் அகன்றுபோய் விடும் என்பது அதன் கருத்து. இன்னும் நாடாளும் அரசன் தன் குடிகளின் கருத்தைத்தழுவியேஆளவேண்டும்; குடிகளின் இணக்கத்தைப் பெற்ற அரசுதான் நெடுங்காலம் நிற்கும் என்பது திருவள்ளுவர் கொள்கை." என்று வியந்து கூறுகிறார்.

குறளின் அருமையினை எடுத்துரைத்த அறிஞர் அனேகர்—பல மொழிகளிலே, குறள் மொழி பெயர்க்கப்பட்டு, அதன் பெருமை, கடல் கடந்தும் சென்று பரவியுள்ளது. எனினும், தமிழர் மனைகளிலே, குறள் உண்டோ? பஞ்சாங்கம் இருக்கும்—பாரதக்கதை இருக்கும்—இராமாயணமும் இருக்கும்—அல்லி அரசாணிமாலையும் அபிமன்யு வீரமும் இருக்கும், அறநெறி கூறும் அருமைத்திருக்குறள் இருக்குமா! இல்லையே! ஏன்? இதனை எண்ணி ஏங்குபவரின் தொகையே குறைவு. உளம் நொந்து, சு. வே. நடராசன் என்பார்,

"தமிழ்நாடு எங்கணும் கம்பன் திருநாள்; எங்கணும் கம்பன் நினைவு மலர்கள்; எங்கணும் கம்பச் சித்திரம்; எங்கணும் கம்பர் தரும் காட்சி. மேடைப் பிரசங்கங்களைக் கவனித்தால், கம்பன் கவிநயம், கம்பனும் நகைச் சுவையும் என்பது பேச்சு. அதுபோன்று வள்ளுவன் திருநாள் கொண்டாடப் படுகின்றதா? அவன் பெயரால் நினைவு மலர்கள் வெளி வருகின்றனவா? பத்திரிகைகள் குறளுக்குத் தனியிடம் கொடுக்கின்றனவா?

கம்ப ராமாயணத்தை இடைவிடாது பயில்கின்றார்கள்-பயிற்றுகின்றார்கள். காவிய ரசனையில் சொக்கி கற்பனைக் கதைகளைக் கருத்தூன்றிக் கற்கின்றார்கள். தமிழன் வீரத்தை-அகவாழ்வை—அவனது பகுத்தறிவைக் கெடுக்கின்ற இடங்களைக் கண்டுவியந்து கொண்டாடுகின்றார்கள். கண்ணகி வழிவந்த வீர மங்கையர்கள் கற்பழிக்கப்படுகின்ற இடங்களிலே ஆஹா! ரசனை! பாவனை! என்று சொக்கித் தம்மையே மறந்து விடுகின்றார்கள் நமது புலவர் பெருமக்கள்—பண்டிதமணிகள். அவர்கள் வள்ளுவன் நூலை இடைவிடாது பயில்கின்றார்களா? பயிற்றுகின்றார்களா? குறளிலே காணப்படுகின்ற தமிழன் வீரத்தை—அகவாழ்வை

(36-ம் பக்கம் பார்க்க)

அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி

[சேழியன்]

இன்று சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் பல நாட்டில் பரவி விட்டன.

ஆரம்பகாலத்தில் வெறுப்புடனும் வேடிக்கையுடனும் நகையாடிய கருத்துக்கள் இன்று நாட்டுமக்களின் பழக்க வழக்கங்களில் கலந்துவிட்டன. இயக்கம் ஒப்புக்கொள்ளப்பட்ட சக்தியாகிவிட்டது. ஆரம்ப காலம்! அதன் சூழ்நிலையைக் காண, கால் நூற்றாண்டு பின்னால் போக வேண்டும். வரப்பும், வாய்க்காலும் பெற்றுக் குளிர்மையுடன் விளங்கும் வயலையும், அதன் பக்கத்தில் நெற்குவியலையும், மலைபோல் அடுக்கப்பட்ட வைக்கோலையும் பார்ப்பவருக்கு அந்த இடம் வயலாக இல்லாமல் காட்டு நிலமாக இருந்ததை உணர முடியாது. சுயமரியாதை இயக்க ஆரம்ப காலத்தில் தமிழகமும் அத்தகைய காட்டு நிலமாகத்தான் இருந்தது. நாட்டிய கல்லைகடவுளென வணங்கி, நீட்டிய ஓலையை வேதமென மதித்து, சொல்லிய ஆணைகளெல்லாம், அடிபணிந்து, வருவார்க்கும் போவார்க்கும் வேட்டைக் காடாகத் தமிழகம இருந்தது. இந்த இருட்காட்டை அழிக்க முயன்றது சுயமரியாதை இயக்கம். அனாதி காலந்தொட்டு வந்த மூடநம்பிக்கைகள், பிறந்ததிலிருந்து இறக்கும் வரை தொடர்ந்து சித்ரவதை செய்யும் சாதிக்கட்டுப்பாடுகள் இவைகளை எதிர்த்து "மனு இயற்றியதா? இருக்கட்டுமே" "மாந்தாதா எழுதியதா? பெயர் மாத்திரம் ஆதாரமாகாது", "முழுமுதற் கடவுளின் படைப்பிலே இவ்வாறு........" "சற்றுப்பொறு. இவ்வளவு அலங்கோலமான வாழ்வை நிர்மாணித்துப் பாதுகாக்கிற ஆசாமி யாரப்பா?" என்று ஒவ்வொரு தொடக்கத்திலும் கேள்விகளைப் போட்டுப் பழமைப்பிடிப்பாளர்களைத் திணறச் செய்தது.

எத்தகைய வசதிகளும் இல்லாமல், உடைந்த ஏரையும், வலுவற்ற எருதுகளையும் வைத்துக்கொண்டு, காட்டு நிலத்தைக் கழனியாக்கப் பாடுபட்டவர்களைப்போல, சுயமரியாதை இயக்கம் ஆரம்ப காலத்தில் முயன்றது. முயற்சி என்றால் கற்களுடன் மோதுதல், முட்செடிகளுடன் உராய்தல், நஞ்சுமிழும் நாகத்தின் சீற்றம் இவைகளைத் தாங்கிக்கொண்டு தம் உழைப்பையும், அதனால் கிடைக்கும் பலனையும் மட்டுமே நம்பியதின் ஆரம்பமாகும்.

அறியாமை என்னும் வேலியிட்டு, வறுமையெனும் அகழியை வெட்டி, பயம் என்னும் கோட்டைச் சுவருக்குள், விதி எனும் பட்டத்தரசன், பழக்கவழக்கமெனும் மந்திரிகளின் சொற்படி, சாதிகளென்னும் நால்வகைப் படைகளுடன், மதமெனும் கோவிலைக்காட்டி, நரகமெனும் சிறைத்தண்டனையை ஏற்படுத்தி மக்களை ஆட்டிவந்த அரசாங்கத்தில் சுயமரியாதைப் படை திடீரென்று புகுந்தது.

நேற்று வரையில் அமைதி, இன்றோ நாடே அமர்க்களமாகிவிட்டது. போராட்டம் எல்லைப்புறத்திலிருந்து ஆரம்பிக்கவில்லை. எங்கும் சண்டை; நாற்புறத்திலும் தாக்குதல் மின் வேகத்தில் பரவியது. அறியாமை எனும் அரண் பிய்த்தெறியப்பட்டது. பயம் எனும் கோட்டைச் சுவர் இடிந்துவிட்டது. எவரும் நினைக்காதது மறுக்க முடியாதன என்று கட்டப்பட்டிருந்தமதக்கோட்பாடுகள், அசைக்க முடியாதன என்று காட்டப்பட்ட ஆகம, வேத உதாரணங்கள், மூடப்பழக்க வழக்கங்கள், சாதிக் கட்டுப்பாடுகள், அவன்செயல், விதி இவைகளனைத்தும் தூள், தூள், தூள்!

மற்ற நாடுகளில் பகுத்தறிவு இயக்கங்கள் பரவியதற்கும், நம்நாட்டில் சுயமரியாதை இயக்கம் வேலை செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அங்கெல்லாம் சித்தாந்த முடிவுகள் அறிஞர்களால் ஆராயப்பட்டு, ஏடுகளில் எழுதப்பட்டு, பின் பலப்படுத்தப்பட்ட கருத்துகள் மக்களிடை சிறிது சிறிதாகப் பரவின. இங்கோ அந்த ஆராய்ச்சிகளே பொதுக்கூட்டங்களின் மத்தியில் தான் ஆரம்பிக்கப்பட்டன. சுயமரியாதை இயக்கம் பேசாத பிரச்சினை கிடையாது. சிந்திக்காத கருத்துக் கிடையாது. கடவுள் தோற்றத்திலிருந்து கர்ப்பத்தடைவரை சுயமரியாதை மேடைகளில்பேசப்பட்டன.

நீண்ட போர்முனை, பக்தர்களின் கோபத்துடன் பணபலமும் சேர்ந்த தாக்குதல். இவர்களோ சிறியதொகையினர். எனினும் போராட்டம் நடந்தது. அவ்வாறு சுயமரியாதையின் ஆரம்பக்கட்டத்தில் முதற்படையினர் வரிசையில் நின்ற பலருள் தோழர் அழகர்சாமியும் ஒருவர்.

"தம்பட்டம் அடிக்கிறானே, ஏன்?"

"இன்றைக்குச் சுயமரியாதைச் சங்கக்கூட்டமாம்."

"சுயமரியாதைச் சங்கமென்றால்"

"சீர்திருத்தம் வேண்டுமென்கிறார்கள்."

"நானும் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இந்த ரோட்டில் குழிகள் அதிகமாகிவிட்டன. என்வீட்டுப் பக்கத்தில் விளக்குக் கம்பம் இல்லாமல் இருட்டாகஇருக்கிறது. இவற்றையெல்லாம்சீர்திருத்தம் செய்யவேண்டும்"

"அவர்கள் கூறுவது இதையல்ல. சமூகத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்கிறார்கள்."

"சமூகத்தில் சீர்திருத்தம் செய்ய என்ன இருக்கிறதாம்?"

"ஏன்! சாதி சமயங்கள் போக வேண்டும்."

"அதெப்படியப்பா, தொன்றுதொட்டு வந்தது. விதியின் செயல், வேதத்தின் சாரம், நான்முகன் படைப்பை நகிலவும் ஒண்ணுமோ! அதில் நாம் குறை கூறுவது அடா தப்பா."

"விதியா? அப்படியொன்றுகிடையாது. வேதங்கள் கற்பனைக் கதைகள் என்று கூறுகிறார்கள்"

'ஆ!'

பக்தனாயிருந்தால் மூர்ச்சை போட்டிருப்பான், பாமரனாயிருந்தால் பேசமுடியாத அளவுக்குத் திகைத்துப் போயிருப்பான். மக்களிடை அதிர்ச்சியை உண்டாக்குமளவுக்கு இயக்கத்தின் கொள்கைகள் இருந்தன. அதிர்ச்சியைத் தொடர்ந்து வெறுப்பு, கோபம், சமுகக்கட்டுப்பாடு இவைகள் உண்டா

பின். சுயமரியாதைக்காரனென்று சொல்லிக்கொள்வதற்குத் துணிவு அதிகம் வேண்டும். கூட்டம் ஒன்று போடுவதென்றால் ஆபத்தை அழைப்பதாகத்தான் அர்த்தம். பெற்றோர்களின் கண்டிப்பு, பள்ளிக்கூடத்தில் தண்டனை, உற்றார் உறவினரின் ஏச்சு, இவைகளையும் தாண்டிக்கொண்டு இளைஞர்களும் அறிவு வளர்ச்சியில் நம்பிக்கை கொண்டவர்களும் சுயமரியாதைக் கூட்டங்களுக்கு வரத்தான் செய்தார்கள். மக்களின்கவனத்தைத்தம்பக்கம் ஈர்ப்பதற்கும்,புதியகருத்துக்களைப்பரப்புவதற்கும் பேச்சுத்திறமை வேண்டியிருந்தது.கோபத்துடனும்,வெறுப்புடனும் வந்தவர்கள், பேச்சிலே ஈடுபட்டு, கூட்டம் முடிந்துபோகும்பொழுது "இவர்கள் சொல்வதிலும் ஏதோ இருக்கிறது" என்று தம்முடைய அமைதிக்கு சமாதானங்கூறுமளவுககாவது திரும்பும் வகையில் கூட்டத்தினரைக் கவரும் பேச்சுத்திறன் படைத்தவர்களே சுயமரியாதைக் கூட்டங்களில் பேசமுடிந்தது. சுயமரியாதைஇயக்கம் வளர்ந்ததற்குககாரணமாயிருந்தவர்கள் இவர்களே. இயக்கக்கொள்கைகள் காரமான மருந்தைப் போலிருந்தன. அவற்றைக் கொடுக்குமபொழுது இதமாகப்பேசி, கொஞ்சம் இனிப்பையும் கலந்து, கோடப்பட்டால் வேடிக்கைகளைக் காட்டி, கோபம் தணிந்ததும் மருந்தின் அவசியத்தைச் சொல்லி மக்களிடம் இயக்கக் கருததுக்களை பரப்பிய தன்மை அழகர்சாமிக்கே உரியது.

அழகர்சாமியின் சொந்தவூர் மதுரைக்குப்பக்கத்திலிருக்கும் அம்பட்டப்பட்டி என்ற சிற்றூர். ஆனால் உறைவிடமாகக்கொண்டது பட்டுக்கோட்டையாகும். அதனால்தான்'பட்டுக்கோட்டை அழகர்சாமி' என்று அழைக்கப்படுவாராயினர். சுயமரியாதை இயக்கத்தில் அவர் சேர்வதற்கு முன் சிறிய திண்ணைப்பேச்சாளராக இருந்தார். கொஞ்சகாலம் பட்டாளத்தில் சேர்ந்திருந்தார். சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்குமபொழுது,உச்சிக்குடுமியுடன் கதாவேட்டியுடன், தக்ளியும் கையுமாகச்சுற்றிக்கொண்டிருந்தார். இன்னும் பேச்சாளராக ஆகவில்லை. சுயமரியாதைக் கருத்துகளில் அவருக்குப்பற்றுதல் உண்டாயிற்று. அதற்குப்பின அவர் தன் உச்சிக்குடுமியைத்தியாகஞ் செய்தார்.

சுயமரியாதைக்காரன் தன்கொள்கைகளைப் புரிந்துகொண்டால் மட்டும் போதாது. தனக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லித்தீர வேண்டும். சிறுகச் சிறுகப்பயின்று சிறந்தபேச்சாளரானர். அழகர்சாமி பேச எழுந்திருந்தாலே, கைகொட்டி ஆரவாரித்துக் கூட்டத்திலிருப்பவர்கள், சிரிப்புக்குத் தங்களை ஆயத்தம் செய்துகொள்வார்கள். மக்கள் விரும்பிக் கேட்கும் வண்ணம் அவர் பேச்சு வளர்ந்தது.

பட்டுக்கோட்டையில் போஸ்டாபீசுக்கு அருகில் முச்சந்தி ஒன்று இருக்கிறது. இப்பொழுது பார்ப்பதற்கு பெரிதாக இருக்கிறது. அப்பொழுது—15, 17 ஆண்டுகளுக்கு முன்-இருந்தாத இடமாகஇருந்தது. அந்த இடத்தில் எம்பெருமானைச் சுமந்து அறியாத பழைய மரத்தேர் ஒன்று இருந்தது. பக்கத்தில் கூரை பிரிந்த வீடுகள். தகரததால் மூடப்பட்ட ஒற்றைக்கடை. அதனையடுத்து இடிந்த பாலம். இந்த இடத்தில்தான் சுயமரியாதைக் கூட்டங்கள் நடைபெறும். அழகர்சாமி பேசுகிறார் என்றால் அவல் கடலை பெறப்போவதைப் போல, கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே, மேடைக்குப் பக்கத்தில சிறுவர்களிடையே நாங்கள் காத்துக்கொண்டிருப்போம். கூட்டம் சிறிய லாந்தருடன் ஆரம்பிக்கும். அழகர்சாமி பேச ஆரம்பித்த சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த விளக்கும் மங்கி, கூட்டத்திலிருந்து விடைபெற்றுக் கொண்டு விடும். பேச்சாளரின் உருவத்தின் நிழல்மட்டும்தான் தெரியும். சொற்கள் மாத்திரம் வந்து கொண்டிருக்கும், கவண்கயிற்றிலிருந்து கற்கள் கிளம்புவதைப் போல. பேச ஆரமபிததும், தன்னுடைய "ரதகஜ துரகபதாதிகளை" அணிவகுத்து, "தம்பு, தப்பட்டை, தகரக் குவளை, செல்லாக் காசு"களைத் தட்டி"பிரயணீயத்தின்" தன்மையை விளக்கி,இடையிடையேபல"தமபி"களை அழைத்து, "அண்டபிண்டசராசரங்களைப்" புரட்டி, "இதனால் பேச்சு முடிவாக, மனிதனுகப் பிறந்தவன் சோற்றாலடித்த பிண்டமாக இருக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்வதோடு கூட" என்று கடைசி வாக்கியத்தை ஆரப்பித்து, பல "கூட" "கூட"என்று சேர்த்து அரையணி நேரம் கழித்து முற்றுப் புள்ளி வைத்துவிட்டு உட்காருவார். அவருடைய நீண்ட பேச்சுகளைக் கேட்பதற்குக்கூட்டத்திலிருப்பவர்களுக்குச் சலிப்புத்தோன்றுவதில்லை. அதிலும் இளைஞர்களையும், பள்ளிக்கூட மாணவர்களையும் அவரது பேச்சுப் பெரிதும் கவர்ந்தது.

பட்டுக்கோட்டையில் அவர் கட்சிப் பிரசாரத்தை நடத்தியதற்கு எதிர்ப்பு இல்லாமலில்லை. "பட்டுக்கோட்டையில் கலகம் செய்ய இந்த அம்பட்டப்பட்டிக்காரன் யார்?" என்று கோபத்துடன், கேட்டவர்களுண்டு. "வைரவிளக்கு ஏற்றின இந்த வறுமையாளன் என்ன செய்யமுடியும்!" என்று பயமுறுத்தினர்கள். "பங்களாஉண்டா? பாங்கில் கணக்கு உண்டா? சைகோனிலவீடு உண்டா? சாய்ந்துநிற்க இடங்கிடையாத வெற்றுத் தோட்டா எதிர்த்துப் பேசுவதா?" என்று அழகர்சாமி பேரில் அருவருப்பை ஏவிய "பெரிய மனிதர்கள்" இருந்தனர்.

சுயமரியாதைத் துண்டு பிரசுரங்கள் அடிக்க அச்சாபிசில் இடங் கிடைக்காது.

கோட்டில் கொடுக்கப்போகும் பையனுக்கு அடிவிழும், தப்பட்டை உடைக்கப்படும்.

மாநாடு நடத்தினல் சுற்றிலும் வேலியிடுவது, மாநாட்டுப் பந்தலையே கொளுத்திவிடுவோமென்று பயமுறுத்துவது, எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினல் அடியாட்களை வைத்து கலைப்போமென்று மிரட்டுவது, இப்படி ஒவ்வொரு கூட்டத்திலும் பணபலம் எச்சரித்தது. இத்தகைய எதிர்ப்புகளைத் தாங்கிக்கொண்டுதான் அழகர்சாமி தனது பணியைத் தொடர்ந்து நடத்தினர். அக்காலத்தில் அழகர்சாமியின் கூட்டத்துக்குப் போவதே அடாத செய்கையாகக் கருதப்பட்டது.

உதாரணமாக உள்ளூரில் கெடுபிடிகள் இருந்த சமயததில் ஒரு நாள் மாலையில் அழகர்சாமி பின் வருமாறு குறிப்பிட்டார். "இன்று காலையில் நான் தனியாக மடத்துத் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் பொழுது எனக்குச் சரியாக அறிமுகப்படாத பள்ளி மாணவன்—வயது பத்துப் பன்னிரண்டு இருக்கும்—வந்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. ஏதோவொன்று சொல்ல முயலுகிறான் என்பது மட்டும் தெரிந்தது. அருகே அழைத்துக் கேட்டேன். அழகர்சாமியின் கூட்டத்தில் கலந்துகொண்டான் என்பதற்காக ஊரிலிருக்கும் பெரிய மனிதர் ஒருவரால் அடிக்கப்பட்டான்

என்று தெரியவந்தது. பிறகு சமாதானப்படுத்தினேன். சிரித்த முகத்துடன் அவனும் போய்விட்டான். ஆனால் காலையில் எனக்கு உண்டான கோபமும், வருத்தமும் இன்னும் தணியவில்லை. அவனை அடித்த ஒவ்வொரு அடியும் என் இருதயத்தில் அடிக்கப்பட்ட செப்புஆணிகள், அந்தப்பெரியமனிதர்களை ஒன்று மட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒன்றும் அறியாத சிறுவர்கள்மீது அவர்களின் பலத்தை உபயோகிக்கவேண்டாம். அவர்களின் கோபத்தையும் வெறுப்பையும், அடிதடிகளையும், தாங்கிக்கொள்ள அழகர்சாமி இருக்கிறான். பணத்திமிர்! ஆனால்அதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. பஞ்சைகள் என்றுமே அடங்கியிருப்பார்கள்என்பதல்ல. வெளியேறும வகையின்றி துரத்தியடிக்கப்பட்டால், பூனையும் புலியாக மாறுவதுண்டு.

அழகர்சாமியின் பேச்சை மக்கள் பெரிதும் விரும்பியதற்குக் காரணம் அவர் பேச்சிலிருந்த நகைச்சுவையேயாகும். அவர்பேச ஆரம்பித்ததும் பேச்சுமேடை என்பதுபோய் நாடகமேடையாகவே ஆகிவிடும்.

முகபாவங்கள், குரலிலேஎடுத்தல் படுத்தல், முடிக்கப்படாத வாக்கியங்கள், கையசைவினால் காட்டிவிடப்பட்ட சொற்கள். சிலசமயங்களில் அவரது உயரமான உடலேவளைந்து ஒரு வாக்கியத்தை முடிக்கும். அவரது வேடிக்கையான பேச்சு, மேடையில் மட்டுமல்ல, சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கூட, மிளிரும்.

கூட்டங்களில் கலகம், கல்லெறிதல், கேள்வி, கூச்சல், இவைகளுக்கு அழகர்சாமி சலிப்பதில்லை. நிமிர்ந்து நின்று பேசுவார். சொற்களில்கோபமும், வீரமும், ஒலிக்கும். 1938-ல் நடந்த இந்தி எதிர்ப்பில் படைத்தலைமை ஏற்று திருச்சியிலிருந்து சென்னைவரை படைவரிசை நடத்தி வந்தார். சிதம்பரத்தில் படையின் வருகைக்கு எதிர்ப்புணர்ச்சி இருந்தது. பொதுக்கூட்டத்தில் அழகர்சாமி பேசிக்கொண்டிருக்கும் பொழுது கற்கள் வந்து விழுந்தன. வழக்கம்போல் நடக்கும் மரியாதைகள். பொறுத்துப் பார்த்தார். பின் "அதிவேகத்துடன் கற்களை வீசுவதாலேயே அழகர்சாமியின்பேச்சுநின்றுவிடும் என்பதல்ல. என்னை நோக்கி வரும் கற்கள் 'அழகர்சாமியே, உரத்துப்பேசு' என்றுதான் தட்டிக்கேட்கின்றன. உங்கள் கை அலுத்துப் போகலாம். ஆனால் அழகர்சாமி அலுக்காத குரலையுடையவன். மேலும் ஆச்சாரியாரின் அரசாங்கம் வீசும் அடக்குமுறைகளைவிட உங்கள் கற்கள் பெரிதல்ல. அதைத் தாங்கிக்கொள்ளும் நாங்கள் இதற்குப் பணிந்து போவோமா! ஆனால் கற்கள் உங்களுக்கு மட்டும் சொந்தமல்ல, எடுத்து வீசுபவனின் கைவலிவைப் பொறுத்திருக்கிறது. கல்லெறி படலத்தை எழுதுவது கஷ்டமானதல்ல, மிகச் சுலபமான காரியம்" என்று கூட்டத்தைச் சமாளித்தார்.

இரண்டாம் முறையாக இந்தி எதிர்ப்புப் போராட்டம் தற்பொழுது துவங்கியபொழுது காரியக் கமிட்டிக் கூட்டத்துக்கு அழகர்சாமியும் வந்திருந்தார். கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களனைவரும் சிறைக்கூடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பலகாலமாகப் பேசும்பொழுது, வறுமையின தன்மையைக் குறிப்பிட தகரக்குவளை என்று அழகர்சாமி கூறுவதுண்டு. அன்று பொழுது சாய்ந்த நேரத்தில் தகரக்குவளை, தட்டுடன் கடைசி வரிசையில் உள் நுழைந்தார்.

ஈரோடு மாநாட்டில் கலந்துகொண்டார், மிகவும் தளர்ந்த நிலையில் உட்கார்ந்தபடி பேசினார். "மிகவும் தளர்ந்த நிலையில வந்துள்ளேன். உங்களனைவரையும் மறுபடியும் காண்பேனா? சொல்லமுடியாது. என் தலைவருக்கும் தோழர்களுக்கும் கடைசி முறையாக என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளவே வந்தேன்" என்றார். சோகத்தின் குளிர் காற்று இருதயங்களை நெருக்கியது. கண்களில் கண்ணீர் கசிந்தது.

மாவீரன் சோர்ந்திருக்கிறான். ஏன்? அவன்மார்பில் குண்டு பாய்ந்துவிட்டது. உடனே கவனிக்கப்படவேண்டிய காயம்.

முன் வரிசையில் நின்று வைக்கமளித்தவனின் மார்பில் குண்டு பாய்ந்துவிட்டது. வறுமையும், வசதியின்மையும் பாய்ச்சிய குண்டுகள். நெஞ்சுக் கூட்டில க்ஷயரோகக் கிருமிகள், க்ஷயரோகம் எனும்நோய் வாய்ப்பட்டு பட்டுக்கோட்டையில் தனது உறைவிடத்தில் அழகர்சாமி இருக்கிறார். உயரமான உருவம், நிமிர்ந்த பார்வை, உரத்த குரல். இன்றோ உடலை முடக்கி படுக்கையில் படுத்திருக்கிறார். கண்களில் சோர்வும், தளர்ச்சியும் இருக்கின்றன. பேசுவதால் அதிகம் களைப்பு உண்டாகிறது.

சமுகத்தின் வாழ்வைச் செம்மைப்படுத்த பாடுபட்டவரின் வாழ்வில் செம்மை நிலைபெறவில்லை. இயக்கத்தின் சார்பாக பல தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்த அஞ்சா நெஞ்சன் இன்று இருமலுடன் போராடிக்கொண்டிருக்கிறார். நோய் ஆரம்ப நிலையிலிருப்பதால் நன்றாகக் குணமடைந்து, ஓய்வு பெற்று, மீண்டும் உடல் வளத்துடன் திரும்பவேண்டும் என்பது நமது அவா. அவர் தளர்ந்திருக்கிற நேரத்தில் நமது உதவியும், உற்சாகமும் தேவை, நோய் முற்றுவதற்கு முன் அவரைப் பாதுகாப்பதற்குக் கூடவல்ல, நமது பண்பாட்டையும், கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்ள.

✻

33-ம் பக்கத் தொடர்ச்சி

அவனது பகுத்தறிவைக் கொண்டாடுகின்றார்களா? கொண்டாடுவார்களாயின், 'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்—மெய்வேல் பறியா நகும்' 'மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' 'அறிவுடையார் எல்லா முடையார்' என்பவைகளைப் பேசுகின்றார்களா? மறுத்து, வாலியைக் கொன்ற ஆரிய இராமனின் வீரியத்தையும், அகல்யையின் சாப நீக்கத்தையும் பேசுகின்றார்களே! போற்றிப் புகழ்கின்ற ஒருநூலை ஏன் மறைக்கின்றார்கள்? அதன் மாண்பை மக்களுக்கு ஏன் எடுத்துக் காட்டவில்லை? இதனைக் கேட்டால், 'மக்கள் பக்குவம் அடையவில்லை; அவர்கள் நீதியை எப்பொழுதும் விரும்புவதில்லை; அது அவர்கள் செவிகளுக்கு இன்பமூட்டுவதில்லை' என்று கூறிவிடுகின்றார்கள். இந்தநிலையினைக் காணத்தான் வருத்தம் ஏற்படுகின்றது; நெஞ்சம் புண்படுகின்றது." என்று குமுறுகிறார்.

புண்பட்ட நெஞ்சுடன் உள்ளனர் அறிந்தோர். அறியாதார்களோ, குறள், ஓர் புதிர்!

பண்புடைத் தமிழரின் மனப்புண்ணும், பயனில் நூற்களைமட்டுமே அறிந்ததால், மக்கள் மனதிலே மூண்டுகிடக்கும் மருளும், போக்கப்படவேண்டும்—நாம் மேற்கொள்ளும் பணிமூலம். வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி!

✻

ஜுபிடரின்

வேலைக்காரி



சி. என். அண்ணாத்துரை, M.A.

டைரக்ஷன் :— A. S. A. சாமி, B.A.

சென்ட்ரல் ஸ்டுடியோ, கோயமுத்தூர்.

Cover Printed at The New Era Printers, 72, Armenian Street, Madras-1.

REGD. No. 464

உலகம் வியக்க சுதேசக் கப்பல்
ஓட்டியதும் தமிழ் நாடே
திலகமெனப் புகழ் ஓங்கிய எங்கள்
சிதம்பரம்பிள்ளை செயல் புரிந்த
தமிழ்
கலை முதலாகத் தொழில் முறையாவும்
காத்து வளர்ப்பதும்
தமிழ் நாடே.

4-2-'49-ல்

"நல்ல தம்பி" யில்

கண்டு களியுங்கள்.

கதை—வசனம்	பாடல்கள்
சி. என். அண்ணாதுரை	உடுமலை நாராயணக் கவி

நடிகர்கள்.

N. S. கிருஷ்ணன்	T. A. மதுரம்
சகஸ்ரநாமம்	பானுமதி
புளிமூட்டை இராமசாமி	காந்தா
ஆள்வார் குப்புசாமி	வடிவா
பாண்டியன்	மற்றும் என்னெஸ்கே நாடக சபையார்.
இராதாகிருஷ்ணன்	
S. K. சாமி	
கிட்டப்பா	
குளத்துமணி	
கோலப்பன்	
வள்ளிநாயகம்	

ஸ்டூடியோ :— நியுடோன்

டைரக்ஷன் :— கிருஷ்ணன்-பஞ்சு

Edited Printed & Published by C. N. Annadurai M.A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.